உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] சோபகிருதுஸு மார்கழிமீ. [பகுதி-உ.

உள்ளுறை.

ஸ்ரீமத்-பாஸ்கரசேதுபதியவர்கள். } பத்திராசிரியர். உகூ
சேதுபதிகள். } பத்திராசிரியர். ங௦
திருக்குறள் அதிகாரப்பிறழ்ச்சி.—ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ஙஅ
பெரியாழ்வார் காலநிருணயம்.—மு. இராகவையங்கார். சக
நுணங்குமொழிப்புலவர்க்கு வணங்குமொழி விண்ணப்பம். } அ. சண்முகம்பிள்ளை. சஅ
தருக்கசூத்திர முதற்பாடம்.—எஸ். பால்வண்ணமுதலியார். ருரு
உள்ளது.—ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர். ருகூ
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர். கூச
அநுமானவிளக்கம்.—திரு. நாராயணையங்கார். உரு
விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம். சே. ப. நரசிம்மலு நாயடு. சக
திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். க
பன்னிருபாட்டியல்.— கூ
ஸ்ரீபாஸ்கரசேதுபதியவர்களைக்குறித்த சரமகவிகள்.
மதுரைத்தமிழ்ச்சங்கத்துத் தனிக்கூட்டம்

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா - 8.

# விசேஷ விளம்பரம்.

நான்காம் தமிழ்ச்சங்க ஸ்தாபகராகிய ஸ்ரீமான் பொ. பாண்
டித்துரைத் தேவரவர்களுக்கு, அவர்கள் வித்தியாபிமான
சின்னமாகச் சமர்ப்பிக்கப்பட்ட

## பாரதச் சுருக்கம்.

இது செந்தமிழ் வசனசிங்கமென்று பிரபலபண்டித சிரோன்மணிகளாற் புகழப்படுபவரும் அபிதானகோச முதலிய பல நூல்கள் செய்தவருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூல் வடமொழியிலே வேதவியாசரால் ஓரிலட்சத்து இருபத்தையாயிரம் சுலோகங்களாற் செய்யப்பட்டதும் எத்தனை முறைதான் படிக்கினும் துறைதெரியாப் பெரும்பரப்பினையுடையதுமாகிய மகாபாரதத்தை ஆண் பெண் இருபாலாரும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு புதிதாகத் தமிழிலே சுருக்கிச் செய்யப்பட்டது.

இதன் விலை ரூ 1—8—0

Apply to:—

Messrs. Higginbotham & Co.,
Mount Road,
Madras.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௨.] சோபகிருது௵ மார்கழி௴. [பகுதி-௨.

மகா-ள-ள-ஸ்ரீ மாட்சிபொருந்திய

ஸ்ரீமத்

## பாஸ்கரசேதுப்தி மஹாராஜா அவர்கள்.

---

இம்மன்னர் பெருந்தகையார் நந்தமிழ் மூவேந்தர்க்குப் பின்னே செந்தமிழ் வளர்த்த செல்வச்சேதுபதிகண்மரபிற் ரோன்றி, நுண்ணறிவும் பெருங்கொடையுமுதலாகிய நற்குணநற்செயல்களால் அம்மரபிற்கோர் திலகம்போல விளங்கியோர். இவர் நந்தமிழ்ச்சங்கத்திற்கு முதற்கட் பெரும் பொருளுதவிய செந்தமிழ் வள்ளலார். பலகலையறிவானும் நிலவுபுகழ் விளைத்தவர். கேட்டார்ப்பிணிக்கும் பெரியஇனிய சொல்வன்மையுடையர். தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர். இம்மை நோக்காது மறுமையே நோக்கிய கைவண்மையுடையர். தம்மையொழியத் தமதெனஉள்ளனயாவையும் பிறர்க்கேயுதவினர். அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை இயல்பாயுள்ளவர். அறிஞர்க்கெல்லாம் அருந்துணையாயவர் : தெய்வபத்தி அடியார்பத்தியிற் சிறந்தவர் : வறியரந்தணர்க்கு வளமிகவளித்தவர். தெய்வ வழிபாடுசிறக்கப்புரிந்தவர். காட்சிக்கெளியர் கடுஞ்சொல்லே

இல்லாதோர். தத்துவமெல்லாம் உய்த்தோருங்குணர்ந் தோர்: பணிதலே பெருமையெனத்துணிந் தொழுகியோர்: அரசரும் அறிஞரும் பரசுநற்குணத்தர்: மஹாராஜனசபை யார் மதித்த நன்னெறியினர். இத்தகையாளரை இளமை யிற்கொண்ட கூற்றமோ கொடிது! கொடிது!! அறவே கொடிது!!!

கார்புக்க தோகற்ப கம்புக்க தோவறியேன்
சீர்புக்க பாற்கர சேதுபதீ—பேர்நிற்க
வீத்து மலர்ந்திவ் விருநீர் வரைப்பெல்லாங்
காத்து வளர்ந்தநின் கை.

கேளாருங் கேட்கக் கிளக்கும்வா யெங்கேயோ
வேளாரும் வேட்ப மிகுநிதியந்—தாளாரு
மன்னர்க்கும் யார்க்கும் வழங்குகர மெங்கேயோ
கன்னற்கு நேர்பாற் கர.

சோப கிருதாண்டிற் றூய தநுமாதத்
தீபமிகு பக்கத்-திதியெட்டிற்—பூபரவு
வார முதலாம் வளர்பாற் கரன்வேந்தர்
தீரன் சிவமாந் தினம்.

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

# சேதுபதிகள்.

இவர் தோன்றுதொட்டே தமக்கியல்பாயுள்ள வீரச்செயலா லும் வில்வாள் முதலாய படைத்தொழில் வலியாலுமே தம்முயிர் வாழ்தலிற் சிறந்த தமிழ்நாட்டு மறவர்குடியினராவர். "வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்" என்றார் அகநானூற்றினும். (௩௫) இம்மறவரையே வில்லேருழவர், வாளுழவர், மழவர், வீரர் முதலிய பலபெயர்களாற் கூறுவர் முன்னோர். இவர் நிரைகவர்ந்து ஆறலைத் துச்சூறைகொள்ளுங் கொடுந்தொழிலாற் றம்முயிரோம்பும் வெட்சி

மறவர் எனவும், அவ்வெட்சி மறவரை முனையிற் சிதற வீழ்த்து அவராற் கவரப்பட்ட நிரைகளை மீட்டு ஆறலையாமற்காத்துப் பிறருயிரோம்பு முகத்தாற் றம்முயிர்வாழுங் கரந்தைமறவர் எனவும் இரு திறத்தினராவர். இதனை "ஆபெயர்த்துத்தருதலும்" (பொ. புறத். ௫.) என்னுந் தொல்காப்பியத்து நச்சினார்க்கினியருரையானும் 'தனி மணியிரட்டுந் தாளுடைக் கடிகை, நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர், முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த, வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்" (௫௫) என்னும் அகநானூற்றுரையானும் அறிந்துகொள்க. வெட்சி மறவர்க்கு ஆறலைப்பார், கள்வர் முதலிய பெயர்களும், கரந்தை மறவர்க்கு வயவர், மீளியர் முதலிய பெயர்களும் நன்று பொருந்துவனவாகும். இவ்விருவகை மறவருள், சேதுபதிகள் தீதெலாங்கழுவுஞ் சேதுநீராடப் போதுவார்யாவரையும் ஆறலைகள்வர் முதலியோராற் சிறிதும் இடர்ப்படாமற் காத்து அவர்கட்கு வேண்டுவன உதவுதலே தமக்குறுதொழிலாகக்கொண்ட சிறப்பாற், றம்பெருவலியானே பிறருயிரோம்புங் கரந்தைமறவரேயாவர். இதுபற்றியன்றே இம்மறவர் வாழ்ந்த பழையவூரைக் கரந்தை எனவும், இவரைக் கரந்தையர் எனவும், இவர் தலைவனைக் கரந்தையர் கோன் எனவும் பிற்காலக் கவிகள் வழங்குவாராயினர் எனக்கொள்க. "மல்லார் கரந்தை ரகுநாதன் றேவை வரையில்" (ஒருதுறைக்கோவை-௯௮) "கரந்தையர்கோன் ரகுநாதன்" (௸ ௯௨-௭௯) என வருதல் காண்க. இவ்வகை மறவரே இத்தமிழ்நாட்டு மூவேந்தருக்கும் சிறந்த பெரும்படையும் படைத்தலைவருமாய் விளங்கினோராவர். இவ்வீரரே இம்மூவேந்தரையுந் தமது அரிய பெரிய வெற்றித்தொழில்களால் மகிழ்வித்து, அவரான் முடியுங் கோலும் மாலையும் பிறவும் அளிக்கப்பெற்றுக் குறுநில மன்னராய், அப்பேரரசர்க்குப் போர்த்துணைவராய் விளங்கினோராவர். இவர் இம்மூன்று தமிழ்வேந்தர்க்கும் உரியராதல் பற்றி முற்காலத்தே சேரன்மறவர், பாண்டியன்மறவர், சோழன்மறவர் என மூன்று பகுதியினராக வழங்கப்பட்டனர். நன்னன், எறை, அத்தி, கங்கன், கட்டி முதலாயோர் சேரன் மறவர் (அகநானூறு. ௪௪). கோடைப்பொருநன் ஆகிய பண்ணி முதலாயோர் பாண்டியன் மறவர் (அகம். ௧௫). பழையன் பண்ணன் முதலாயோர் சோழன் மறவர் (அகம் ௪௪, ௫௨௯. புறம்,

களகூ). இவரைச் சோழன் மறவன், பாண்டியன் மறவனெனவேறு வேறு கூறுவதுங் காண்க. இம்மறவராகிய படை வீரர் குறு நிலமன்னருமாயிருந்தனர் என்பது "தானே சேறலுந் தன்னொடு சிவணிய, வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே" (தொல். பொ. அகத். உஎ) என்னுஞ் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "கொற் றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர், வெண்கோட் டியானைப் போஒர் கிழவோன், பழையன் வேல்வாய்த் தன்ன" எனவரும் நற்றிணையை எடுத்தோதி, "இது குறுநிலமன்னர் போல்வார் சென்றமை தோன் றக் கூறியது" எனச் சோழன் படைத்தலைவனான பழையனைக் (அகம்-சச) குறுநிலமன்னனாகக் கூறியதனானே அறியலாவது. இவ் வாறு மூவேந்தர்க்கும் பெருந்துணைவராய் அம்மூவர் படைவீரருங் குறுநிலமன்னருமாகிய மூவகைமறவருள், இச்சேதுபதிகள் சோழன் மறவராவர். இதுபற்றியே இவரைச்செம்பிநாட்டுமறவர் என வழங் குவர். செம்பியன் - சோழன். பாண்டியன் நாடு பாண்டிநாடு என ஆயதுபோலச் செம்பியன்நாடு செம்பிநாடு என ஆயது. ஒருதுறைக் கோவையினும் ரகுநாதசேதுபதியை செம்பிநாடன் (சுo, அஉ) செம் பியர் கோன் (உoகூ) செம்பிநாட்டிறை (உoஎ) செம்பியர் தோன் றல் (உகஅ) என வழங்குதல் காண்க. இச்சேதுபதிகளை இரவிகுலத் தவரெனக் கூறுதலும் அச்சோழர் குலத்தையே பற்றிவந்ததாகும். இவர் சாசனங்களில் உள்ள விருதாவளிகளில் முதற்கட் 'சோழமண் டல பிரதிஷ்டாபகன்' 'அகளங்கன்' எனவரும் விருதுகளும் இவர் சோழர்பாற்பெற்ற படைத்தலைமை குறிப்பனவாம். சோழன் மறவ ராகிய இவர் சோணாட்டைவிட்டுச் சேதுதீரத்திற் குடியேறியகாலம் இஃது என நன்குதேறப்படாவிடினும், திரிபுவனதேவன் எனப்பெ யர் சிறந்த குலோத்துங்கசோழன்காலத்துக்குப் பின்னேதான் இவர் ஆங்குக்குடியேறியதாகுமென்பது சில ஏதுக்களான் அனுமா னிக்கப்படுகின்றது. குலோத்துங்கசோழன் கி. பி. 1064-ல்* பாண்டி நாடாண்ட வீரபாண்டியனென்பவனைப் போர்தொலைத்துப்பாண்டி நாட்டைத்தன்னடிப்படுத்துத் தன்தம்பியாகிய கங்கைகொண்டான் சோழற்குச் சுந்தரபாண்டியன் என்னும்பேர்தந்து அப்பாண்டிநா டாளும் அரசுரிமையைக்கொடுத்தனனாதலால், அக்காலத்தே அப்

* Dr. Caldwell's History of Tinnevelly. Page. 27.

போர்க்குப் பெருந்துணையாச்சிறந்த சோழன்மறவர் பலர் இப்பாண்டிநாட்டிற்குடியேறினராவர். குலோத்துங்கசோழனுக்குப்பின்னே சோணாடு பலவேற்றரசராற் படையெடுக்கப்பட்டுப் பிறர்பிறர் ஆட்சிக்குள்ளாகி அரசுரிமை மாறுபட்டதனானே, இம்மறவர் தம் படைத்தலைமையிழந்து தந்நாட்டே வேற்றரசர்கள்கீழ் ஒடுங்குதலினும் வேற்றுநாட்டிற்குடியேறி வாழ்தல் சிறந்ததாமென்று கருதிச் சோணாடுவிட்டுக் கடலோரமாகப்போந்து சேதுதீரத்துக்காடுகெடுத்து நாடாக்கித் தம்மரசுநிலையிட்டு ஆட்சிபுரிந்தனராவரெனக்கொள்ளினுமமையும். இவர் ஆட்சியுட்படுத்த நாட்டிற்கும் இவர்பயின்ற செம்பிநாட்டின்பெயரே பெயராக இட்டுவழங்கினர்போலும். இவர்களது பழைய சாசனங்களிற் பெரும்பாலும் "குலோத்துங்கசோழநல்லூர்க்கீழ்பால் விரையாதகண்டனிலிருக்கும் வங்கிசாதிபர்" என்னும் ஒரு விசேடணம் காணப்படுதலால் இவர் சோணாடுவிட்டு ஈண்டுப்போந்துகண்ட தலைமைநகர் குலோத்துங்கசோழநல்லூர் என்பதாகுமென ஊகிக்கத்தக்கது. இவ்வூர்ப்பெயரும் குலோத்துங்கசோழனுக்குப்பின்னரே இவர்குடியேற்றம் ஈண்டு உளதாயதுகுறிக்கும். விரையாதகண்டன் என்பதிலுள்ள கண்டன் என்பதும் குலோத்துங்கசோழன் பெயராதல் பலருமறிவர். "தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலாத்திடைவண்—டுழுகின்ற தார்க்கண்ட னேறியஞான்று" (தமிழ்நாவலர்சரிதை)என்றார் ஒட்டக்கூத்தரும். கண்டன்பெயரானே கண்டனூர்முதலாகப் பலஊர்கள் இச்சேதுநாட்டு வழங்கப்படுதலுங் காண்க. இக்காலத்துச்சேதுபதிகள் தலைநகராகிய முகவைக்கு ஒருகாததூரத்து வையைக்கரையிலே கங்கைகொண்டான் என்னும் பெயரில் ஓரூருண்மையினையும் இச்சேதுநாட்டு வீரபாண்டி, விக்கிரமபாண்டி, வீரசோழன், சோழபுரம் என்னும் பெயர்களாற் சிலவூர்கள் வழங்கப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இவர் சாசனங்களில் அகளங்கன் என இருத்தற்கேற்ப அமிர்தகவிராயர் அபயரகுநாதசேதுபதி (உ௱அ) செம்பியன், அநபாயன் ரகுநாதன், (உ௪உ) புனற்செம்பியாள், சென்னிக்குஞ் சென்னியெனும் ரகுநாதன் (உகக) எனக்கூறுதல்காண்க. இரவிகுலமென்பதுபற்றி மனு சிபி முதலிய வேந்தர்பெயர்களை சோழற்கிட்டுவழங்கியாங்கு, அச்சோழற்குறுப்பாய்ச்சிறந்த நலம்

பற்றி இரவிகுலத்தவராகக்கொண்டு, அக்குலத்துதித்த தனிவீரனும் பிற்காலத்து இவர்காவலிற்பட்ட புண்ணியசேதுவைப்பண்ணியோனுமாகிய ஸ்ரீராமமூர்த்திபெயரே இவர்க்குப்பெயராகவைத்து ரகுநாதசேதுபதியெனச்சிறப்பித்து வழங்கினர்போலும். குலம்பற்றி இராஜசூரியசேதுபதி எனப்பட்டாரும் இவ்வழியிலுண்டு. இவர் பெயரான் இந்நாட்டில் இன்றைக்கும் இராஜசூரியமடையென ஒரு சிற்றூர்வழங்கப்படுதலுங்காண்க. இவரைப்படைவீரராகக்கொண்டு சிறந்த சோழஅரசர் பெயரும் இவர்பாற்காண்டலால், ஈண்டைச் சூரியன் என்பதும் சோழன்பெயராமெனினும் அமையும். இதனைச் "சூரியன் புனனாடன் சோழன் பெயரே" என்னும் பிங்கலநிகண்டாலுமறிக. "கண்டநாடுகொண்டு கொண்டநாடுகொடாதான்" என்னும் பட்டம்பெற்றுக் குலோத்துங்கசேதுபதியென்னும் பெயரான்விளங்கினர் ஒருவருளராதலானே இஃதறியப்படும். சோழன் மறவனாகிய பண்ணன் பெயர்வழக்கும், காவிரிவடகரையிலுள்ள அவன் ஊராகிய சிறுகுடியின் பெயர்வழக்கும் இவர் குடியேறிய இந்நாட்டில் இன்றைக்கும் காணலாகும். விரையாதகண்டனென்பது சேதுநாட்டு இராஜசிங்கமங்கல சேகரத்துள்ளது. அச்சேகரத்துப் பண்ணக்கோட்டையெனவும், சிறுகுடியெனவும் வழங்கும் ஊர்கள் இரண்டு உள்ளன.

சோழகுலத்தோரைத் தொண்டியோர் என வழங்குவர் என்பதும், அத்தொண்டி என்னும்பதி கூடற்குக் குணதிசைக்கண்ணுள்ளதென்பதும், "வங்க வீட்டத்துத் தொண்டியோர்" என்னும் ஊர்காண்காதைக்கு (சிலப், பக், ௩௩௬-௩௩௭) அடியார்க்குநல்லார் கூறிய உரையானே அறியலாம். இச்சேதுபதிகட்குத் "தொண்டியந்துறை காவலோன்" என ஒரு பட்டம் பழைய சாசனங்களிலெல்லாம் காணப்படுகின்றது. இத்தொண்டிப்பதி இக்காலத்தும் இச்சேதுநாட்டுச் சிறந்த துறைமுகப்பட்டினமாயுள்ளது. சோழற்குச் சிறந்த துறைமுகமாயிருந்தது இவர் காப்பிற்பட்ட சிறப்பான், இவர்தொண்டியந்துறை காவலர் எனப்பெயர்பெற்றனராவர். எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் சேரற்குரியதாகக் கூறப்பட்ட குட்டுவன் தொண்டியென்பது குடகடற்கரைக்கண்ணதாகும். அது வேறு,

இது வேறென உணர்க. "நளியிரு முந்நீர் நாவா யோட்டி, வளி தொழி லாண்ட வுரவோன் மருக" என்னும் புறப்பாட்டாற் சோழர் மரக்கலப்படையையுடையராயினரென்பது நன்கறியப்படும். இம் மறவர் அவர் படைத்தலைவராதல்பற்றி ஆற்றினும் கடலினும் தம் படையைச் செலுத்துவோர் என்னும் கருத்தால் 'ஆற்றுப்பாய்ச்சி' 'கடற்பாய்ச்சி' எனப் பட்டம்பெற்றனராவார். இவர் இம்மரக்கலப் படைவலியாற் சென்று "ஈழமும், யாழ்ப்பாணராயன் பட்டணமும் கஜவேட்டைகொண்டருளின" ரென்று விருதாவளியும் பெறுவர். இவரது மரக்கலப்படைப் பயிற்சி, இவர்க்குச் *சோழரினின்று எய்தியதாகும். இம்மறவருள் மரக்காயகிளை என்னும் பெயரால் ஓர் கிளை வழங்கப்படுதலும் இக்கருத்தையே வலியுறுத்தும். அது மரக்கலப்படையைக்கொண்டு செலுத்தும் பகுதியினர் எனப்பொருள் தருதலும் கண்டுகொள்க. வடநாட்டும் நிஷாதர் எனப்பெயரியார் முற்காலத்தே மரக்கலம் இயக்குதலில் தேர்ந்துளாரென்பது, வால்மீகிராமாயணத்துங் கண்டது. வேடர்தலைவனாகிய குகனே சிராமமூர்த்திக்குத் தோணி இயக்கினன் என்பதனானே ஈதறியப்படும். இவர் கடலோரத்துள்ள இச்சேதுநாட்டிற் குடியேறியதும் இக்கடற்பயிற்சிபற்றியேயாகுமென்பது ஊகித்தறியத்தக்கது.

இம்மறவருள் தொண்டைமான்கிளை யெனச் சிலரை வழங்குவதும் சோழற்கும் இவர்க்குமுள்ள இயைபையே குறிப்பதாகும். நாகபட்டினத்திருந்த சோழன் ஒருவன் நாகலோகத்தே சென்று ஓர் நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான்பெற்ற புதல்வனை என்செய்வேனென்ற பொழுது, தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே வரவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பேனென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிட, அவனைத் திரைகொண்டு தந்தமையால் அவனும் அவன்வழி

---

* மகா-௱-௱-ஸ்ரீ: வி. கனகசபைப்பிள்ளையவர்களும், தாம் எழுதிய "Tamils Eighteen hundred years ago" என்னும் வியாசத்தில், சோழரையே திரையரென்னும் பெயர்க்குரியராகக்கொண்டு, அவரையே கடலிற் சேறலின் வலியுடையராகக் கூறுவது காண்க.

யினரும் திரையன், திரையர் எனப்பெயர்பெற்றனரெனவும், அவன் வழியினரெல்லாம் தொண்டையே சூடிப்போந்த காரணத்தால் தொண்டையர் தொண்டைமான்கள் என *வழங்கப்பட்டனரென வும் பெரும்பாணாற்றுப் படையானும் அதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் அறியப்படுதலால், தொண்டைமான்களும் சோழர்வழித்தோன்றினோராவரென்பதும், சோழராலே நாடாட்சி அளிக்கப்பட்டனரென்பதும் தெளியலாகும். கலிங்கத்தைவென்ற கருணாகரன் என்பவன் சோழன்படைத்தலைவன் என்பதும் அவன் தொண்டைமான் எனச் சிறப்புப் பெயர்பெற்று விளங்கினன் என்பதும் கலிங்கத்துப்பரணி யென்னும் நூலானே நன்கறியலாவன. இவற்றாற் சோழர் வழித்தோன்றி நாடாட்சி தனியேயளிக்கப் பெற்றாரும், அச்சோழர்க்குப் படைத்தலைவராய்ச் சிறந்தாரும், தொண்டைமானெனச் சிறப்புப்பெயர் பெறுதலின் இம்மறவரும், சோழர் படைத்தலைவராய்ச் சிறந்த ஒற்றுமையால் தொண்டைமான்களெனச் சிறப்புப்பெயர் எய்தினாராவர். இப்பகுதியினரைத் தொண்டைமான்கிளையெனலும் நன்குபொருந்துவதேயாம். இவர்கள் சாசனங்களில் 'சுவாமித்துரோகிகள் மிண்ட' னென்றிருப்பது இவர்கள் படைவீரராய் இருந்தனர் என்பதையே நன்குபுலப்படுத்தும்.

இனி இம்மறவர் தேவரெனச் சிறப்புப்பெயர் புனைதலும் அச்சோழர்பாற் பயின்றமையையே குறிக்கின்றது. குலோத்துங்கசோழதேவன், திரிபுவனதேவன், ராஜராஜசோழதேவன், ராஜேந்திரசோழதேவன் எனச் சோழர்சாசனங்களில் வழங்குவது காண்க. திரிபுவனதேவன் என்பது வெண்பாமாலை உரையினும் கண்டது. உலகபாலராய தேவருருவாய் நின்று உலகங்காத்தலின் அரசனைத் தேவன் என்பர் என உணர்க. இவையெல்லாம் இம்மறவர்க்கும் சோழர்க்கும் உள்ள பண்டை இயைபினை வலியுறுத்துவனவாம்.

இனி, இம்மறவர் புனைகின்ற முல்லைமாலையுஞ் சோழர்க் குரியதாகும். "மூவர் விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்" (பாடாண்

* இக்கதை, எவ்வாறாயினும், சோழற்கும் நாககுலத்தாள் ஒருத்திக்கும் பிறந்தாரே தொண்டையோர், தொண்டைமான்கள் என்பதுமட்டில் நன்குணர்த்தும்.

படலம்-௩௪) என ஐயனாரிதனார் கூறியவாற்றானே, சோழர்க்கு முல்லைமாலை யுரியதாதல் கண்டுகொள்க. அரசர்க்குப் போர்ப்பூ எனவும் தார்ப்பூ எனவும் இரண்டுண்டு என்பது "படையுங் கொடியும்" (எக) என்னும் மரபியற் சூத்திரவுரையானுணர்க. போர்ப்பூவாவது போரில் இன்னவேந்தன் வென்றான் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிச்சூடும்பூ; தார்ப்பூவாவது ஓர் விசேடமாக இடுவதுஎன்ப. சோழற்கு ஆர் என்பது போர்ப்பூவாகவும், முல்லை என்பது தார்ப்பூவாகவுங் கொள்க. இக்கருத்தானன்றே "ஆரங் கண்ணிச் சோழன்" எனவும், "முல்லைத்தார்ச் செம்பியன்" எனவும் சான்றோர் வேறு வேறு கூறினாரெனவுணர்க. திருமுருகாற்றுப்படை யுரையினும் நச்சினார்க்கினியர் முருகக்கடவுட்குக் கடம்பினைத் தார்ப்பூவாகவும், காந்தளை அடையாளப்பூவாகவும் கூறினார். ஆண்டுங் கண்ணியையும் தாரினையும் வேறுபடுத்து "மாராஅத்துருள் பூந்தண்டார்" எனவும், "காந்தட் பெருந்தண் கண்ணி" எனவும் வழங்குதல் ஆராய்ந்துகொள்க. அன்றியும் இம்முல்லைத்தார் அரசமுல்லை முதலாக, மறமுல்லையிறுதியாகக் கூறப்பட்ட துறைவகைகளாற் பெரும்பாலும் அரசியல்பின் மிகுதியும் வீரதியல்பின் மிகுதியுமே கூறுதலால், அவற்றிற்கு அறிகுறியாய் வீரமாலையாய்ச் சிறத்தலுங் கண்டுகொள்க. இக்கருத்தானே முல்லைத்தார்ச் செம்பியன் என்பதற்கு வெற்றிமாலையையுடைய சோழன் என்றார்சாமுண்டிதேவநாயகரும். "முல்லைத்தார் வேந்தன் நெடுங்கழன் மைந்தர் தொழில்" என்றார் வஞ்சிப்படலத்தும். (வெண்பாமாலை) இம்மறவர் தஞ்சோழனது தார்ப்பூவாதலாலும், தமக்கு வீரமாலையாய்ச் சிறத்தலாலும், முல்லைமாலையைப் புனைவாராயினர் எனக்கோடலே இயைபுடைத்தாகும். ஒருதுறைக்கோவையில் அமிர்தகவிராயரும் "முல்லைவீரத் தொடை புனைவோன் ரகுநாதன்" (௬) எனக்கூறுதலுங் காண்க. இத்துணையுங் கூறியவாற்றான் இச்சேதுபதிகள் சோழன்மறவர்வழித் தோன்றியோரேயாவர் என்பது நன்குணரலாகும்.

(இன்னும் வரும்.)

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

# திருக்குறள் அதிகாரப்பிறழ்ச்சி!

செந்தமிழ் இரண்டாந்தொகுதி முதற்பகுதியிலே, "பரிமேலழகருரையுந் திருக்குறளும்" என்னும் விஷயத்திலே, பரிமேலழகருரையிலே வரும் அதிகாரவடைவு ஈரிடத்துப் பிறழ்ந்துவிட்டதாக ஸ்ரீ: கல்குளம் குப்புசாமிமுதலியாரவர்கள் சிலவேதுக்கூறிச் சித்தாந்தஞ் செய்தார்கள். அவர்கள் கூறுமாறு:—

"" இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்"

" என்னும் இக்குறளினுள்ள புலம்வென்ற புன்மையில் காட்சிய
" வர், முற்றத்துறந்தோரைக் குறித்து நிற்கின்றதெனத் தெரியவரு
" கின்றது. துறந்தோர் குணத்தைக்கூறும் இக்குறளும், இஃதடங்
" கியுள்ள வெஃகாமை என்னுமதிகாரமும் துறவறத்திற்கே சிறப்
" பாயினமையின் அது துறவறவியலுட்சேர்த்துக் கூறப்படாது,
" இல்லறவியலுட்சேர்த்துக் கூறப்பட்டதற்கு யாதுகாரணமோ?...
" வெஃகாமையின் அதிகாரமுறைமை இயற்கையான பொருத்த
" மன்று என்பதும், உரையாசிரியர் வலிந்துபொருத்தி யுள்ளாரென்
" பதும் தெரியவருகின்றது........கள்ளாமை என்னும் அதிகாரமும்
" இல்லறவியலுள் இருந்திருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்
" றது.

"" கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு"

" இல்வாழ்வானுடைய மறுமைப்பயன் புத்தேளுலகு என்ப
" தனுல் துறந்தார்க்கு இதுவேண்டாதாயிற்று. இக்குறளடங்கியுள்ள
" கள்ளாமை யென்னும் அதிகாரம் இல்லறவியலுள் இருத்தல் சிறப்
" புடைத்து........"

இதற்கு யாங்கூறுமாறு:—

" இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்"

என்னுந் திருக்குறளிலே வரும், புலம் வென்ற புன்மையில் காட்சியவராவார் பாவநெறிக்கண் ஐம்புலன்களையுஞ் செல்லவிடாது தடுத்து நன்னெறிக்கண்ணே நிறுத்திநிற்கும் இல்லாச்சிரமிகளே. அவர் செய்தியே அத்திருக்குறளில் மேற்கொள்ளப்பட்டதாம். இல்லறத்தானை நோக்கிக்கூறப்படும் அறத்திற்குத் திருஷ்டாந்தம் இல்லறத்தின்கண்ணே நிற்கும் பெரியார்செய்தியே யாமன்றித் துறந்தார் செய்தியாகாதன்றே. ஆதலின் புலம்வென்ற காட்சியவர் என்பதற்கு முதலியாரவர்கள் கொண்டபொருள் பொருந்துவதன்றாம். அதுமாத்திரமன்று; உள்ளதையே நிறைவாகக்கொண்டு உவந்திருக்கற்பாலராகிய துறவிகள் இலமென்று தமதுநல்குரவைச் சிந்தையிற் கொள்ளலுங் கருதலுமாகாவன்றே. அவை செய்யின் துறவிற்கிழுக்காமன்றே.

இன்னும் வெஃகாமை என்னுமதிகாரம் துறவறவியலுக் குரியதாயின்,

“அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்”

என்னுந் திருக்குறள் துறவியை நோக்கிக் கூறப்பட்டதாகச் செல்வப்பெருக்கத்தினை விரும்புதலும் துறவிக்கு விதித்த அறமாய்விடுமன்றே. பொருள்களை உவர்த்துப் பற்றறவிடுத்தகன்ற துறவிக்கு அஃது அறமாவதெங்ஙனமோ!

“நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்”

என்னுந் திருக்குறளில் வருங் குடியும் துறவினுக்கோரங்கமாதல் செல்லும். அற்றேல், இல்லறம் துறவறம் இரண்டற்கும் வேற்றுமையுமில்லையாய்விடுமன்றே! வெஃகாமையென்னு மதிகாரத்துத் தலைக்குறளாகிய இக்குறளில்வருங் குடியென்பதொன்றுமே அக்குறளையுடையவதிகாரம் இல்லறவியலுக் குரியதென்பதை ஐயந்திரிபற வலியுறுத்தற்குப்போதும் அதிப்பிரபலவேதுவாம்.

இனி மற்றதன்மேற் செல்வாம். பரிமேலழகரால் துறவறவியலில் வைக்கப்பட்ட கள்ளாமை என்னும் அதிகாரம் இல்லறவிய

லிலே வரற்பால தென்பதற்கு முதலியாரவர்கள் கூறும் ஏது, இல்வாழ்வானுக்குரிய மறுமைப்பயன் புத்தேளுலகென்பது. அதற்குப் பிரமாணம் "கள்வார்க்கு" என்னுந் திருக்குறளாம்.

அக்குறளில் வரும் "கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு" என்பதனாற் கொள்ளக்கிடக்கும் பொருள், பசியால் உடல் வற்றிச் சாகவரினும் பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமையாகிய விரதத்தை அநுஷ்டித்தவர்கள் ஏனைய விரதங்களி லிழுக்கி விடு கூடாராயினும் தேவராதல் சரதமென்பதும், "கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை" என்பதனாற் கொள்ளக் கிடக்கும் பொருள், யோகந் தலைக்கூடத் தொடங்கினார்க்கு உயிர்நிலையாகிய சரீரம் இன்றியமையாததாகலின், அவர் களவினைப் பயில்வாராயின், தொடங்கிய யோகம் முற்றப்பெறாது இடையே அரசனாலொறுக்கப்பட்டு அவமே சரீரநீங்கப் பெற்று மறுமையிலும் நரகத்துன்பத்திற்காளாவர் என்பதுமாம். ஆகவே அக்குறள் துறவறங் கூறுவதன்றி இல்லறம் கூறுவதன்றாம்.

"துறவறமாவது * நாகந்தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றும் அறுத்து இந்திரிய வசமறுத்து முற்றத்துறத்தல். அதன்றுறையாவன: சரியை, கிரியை, யோகம், ஞானமென்பன. அவற்றுள், சரியை அலகிடன்முதலியன. கிரியை பூசைமுதலியன. யோகம் எண்வகைய; அவை இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி யென்பன. அவற்றுள், 'பொய்கொலை களவே காமம் பொருணசை, இவ்வகை யைந்து மடக்கிய நியமம்..." என்னும் அடியார்க்கு நல்லார் உரையாலும்,

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌸𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌯𑌮𑌾𑌃 | †

என்னும் பதஞ்சலி யோகசூத்திரத்தாலும் கள்ளாமை துறவறத்திற்குரியதோ ரறமாமென்பது விளக்கமாதலின், கள்ளாமை என்னும் அதிகாரத்தைப் பரிமேலழகர் துறவறவியலுள் ஆராய்வின்றி வைத்துரைசெய்தாரென முதலியாரவர்கள் கூறியது சிறிதும் பொருந்துவதன்றாம்.

---

* சிலப்பதிகாரம் 327-ம் பக்கம்.

† பதஞ்சலியோக சூத்திரம். 2-ம் பாகம். சூத்திரம் 30.

இன்னும் திருவள்ளுவர் தமதுநூலை அரங்கேற்றிய ஞான்று அந்நூலுக்குப் பாயிரஞ் சொன்ன சங்கப்புலவருளொருவராகிய எறிச்சலூர் மலாடனார், பிற்காலத்தில் அதிகாரப்பிறழ்ச்சி வாராமற் காக்குமாறு அறத்துப்பாலுக்கு அதிகாரத்தொகை கூறிப்போயினா ரன்றோ. அவர்கூறிய பாயிரச்செய்யுள் வருமாறு:—

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவற்மொன் றூழாக—வாய
வறத்துப்பா னால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து."

இவ்வாறே பிறரும் ஏனைய பால்களுக்கு அதிகாரம் வரையறுத்துப் பாடினர். அதிகாரம் வரையறுத்தவாறு அக்காலத்தேதானே அதிகாரவடைவும் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அம்முறை பற்றியே பரிமேலழகரும் ஏனைய ஒன்பதின்மர் உரையாசிரியரும் அதிகாரம் நிறுத்தினாராகற்பாலர் என்பது, பலருரைகளையு மொப்பு நோக்கி ஆராய்ந்த முதலியாரவர்கள், அவ்வுரையாசிரியர்கள் அதிகார நிறுத்தமுறையில் தம்முண் மாறுபட்டனரென வெடுத்துக் கூறுமையால், நன்கு துணியப்படும், ஆதலால், பரிமேலழகர் அதிகாரம் நோக்காதுரைசெய்தாரென்பது ஒவ்வாவுரையாம்.

யாழ்ப்பாணம்,
2—1—04.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

# பெரியாழ்வார் காலநிருணயம்.

சென்னை இராஜதானிக் கலாசாலையில் வடமொழி வல்ல பண்டிதராயிருந்து காலஞ் சென்ற, ப்ரும்மஸ்ரீ தி. மி. சேஷகிரி சாஸ்திரியார், எம். ஏ., அவர்களால் "தமிழ்க்கவி சரிதம்" என்னும் வியாசமொன்று ஆங்கிலத்தினுந் தமிழினும் சில வருஷங்கட்கு முன்பு வெளியிடப்பட்டிருத்தல் பலருமறிந்தது. அதனுள் சாஸ்திரியார் பண்டைத் தமிழ்ப் புலவர் பலர் சரித்திரங்களைக் குறித்தும், திரு

மாலடியார்களுள் விஷ்ணுசித்தர் எனப்படும் பெரியாழ்வார், திருமங்கையாழ்வாரென்னும் இருவர் காலங்களைக் குறித்தும் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். அவற்றுட் பிற்கூறிய ஆழ்வாரிருவரையும் பற்றி அவர் துணிந்தெழுதியவற்றிற் பல ஆசங்கைகள் நிகழக் காண்டலால் முறையே அவற்றை ஆராய்ந்து உண்மை வரலாறு காணவெண்ணி, முதலிற், பெரியாழ்வார் காலத்தை விசாரிக்கத் தொடங்கினோம்.

சாஸ்திரியார் பெரியாழ்வாரைப் பற்றி எழுதியவற்றின் கருத்து வருமாறு;—மதுரையில் அரசாண்ட வல்லபதேவபாண்டியன், பரத்துவநிரூபணஞ்செய்வோர்க்கென்று வித்தியாசுல்கமாக் கட்டிவைத்த பொற்கிழியைத், திருமாலடியாராகிய பெரியாழ்வார் விஷ்ணுவே முழுமுதலென்று நாட்டி வாதில்வென்று பெற்றார் என்னுங்கதைக் கூற்றில், வல்லபதேவனென்னும்பெயர், டாக்டர் கால்டுவெல்துரையின் ஆராய்ச்சிப்படி, கி. பி. 1565-முதல் 1605-வரை ஆட்சி புரிந்த அதிவீரராம பாண்டிய னொருவனுக்கே சாதனத்திற் காணப்படுதலால், அவ்வாழ்வார் அப்பாண்டியன் காலத்தினராவ ரென்பதும், கி-பி. 1520ல் ஆந்திரகவியாகிய அலசாணிபெத்தண்ணவால் "விஷ்ணுஸித்யமு" என்னுங் காவியம் இயற்றப்பட்டிருத்தலின், அக்காவிய நாயகனாகிய விஷ்ணு ஸித்தரென்னும் பெரியாழ்வாரும் ஏறக்குறைய அக்காலத்தினரெனத் துணிதற்கு அஃதோராதாரமாகுமென்பதும், பெரியாழ்வார் காலத்து வல்லபதேவனும், கி-பி 1605-ல் இருந்த அதிவீரராமனாகிய வல்லபதேவனும் ஒருவரே யென்று துணிதல் கூடாமற் போயினும், கி-பி 1113-ல் மைசூரையாண்ட விஷ்ணுவர்த்தனன் காலத்தினராய இராமாநுஜாசாரியராற் புதியதாக உண்டாக்கப்பட்டுப், பிற்காலத்து அவருடைய சீடர்களானே பரவலுற்றது வைணவமதமென்று கொள்ளப்படுதலின், அவ்விராமாநுஜர்க்கும் முன்பே பெரியாழ்வாரிருந்து வைணவமதத்தைத் தாபித்தாரென்றல் நம்பத்தக்கதன்றென்பதும், மதுரையை யாண்ட எந்தப் பாண்டியர் காலத்தும் வைணவம் நிறுவப்பட்டமைக்கு ஆதரவுகள் காணக்கிடையா வென்பதும், கி-பி எட்டா நூற்றாண்டுக்கு மேல் வைணவமதமுண்டாயதென்பது கொள்ளற்பால தன்றென்பதும், வல்லப

தேவனின்னு னென்றும், இன்ன காலத்தானென்றும் வரையறுத்தல் கூடாவாயினும், பெரியாழ்வார் காலம் கி-மு 3056—என்றல் பொருந்ாதென்பதுமாம்.

மேற்கண்ட சாஸ்திரியார்கருத்துக்களுள், முதலாவது, டாக்டர் கால்டுவெல்துரைகண்ட கி-பி. 1605-ம் வருஷசாதனத்தால் வல்லபதேவனென்ற சிறப்புப்பெயருடையோனுகத்தெரியும் அதிவீரராமபாண்டியன்காலத்தைத் தம்துணிபாகக்கொண்டு, விஷ்ணுசித்தியமுமன்னுங்காவியகாலத்தை அதற்காதாரமாகநிறுவிப்பெரியாழ்வார்காலம் கி. பி. 1509 என்றுகருதியதாகும். இதனுல் அப்பெரியார்காலம் இற்றைக்கு நானூறுவருஷங்கட்குமுன் என்பதாகின்றது. நாகரிகவாராய்ச்சிமுறையில் சாஸ்திரியார் கண்டது இதுவேபோலும்! ஸ்ரீஇராமாநுஜர்காலமுதலாக ஓராண்வழியாக ஒழுங்குற நடைபெறும் உண்மைவரலாறுகளையும், பிறவற்றையும் நன்ருக ஆராயாது இங்ஙனம் எழுதுவாருமுளரோ! 14-ம் நூற்ருண்டினராக, சாஸ்திரியார் தம் வியாசத்துட்குறித்த ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிய உபதேசரத்தினமாலையுள்,

> "பின்பழக ராம்பெருமாள் சீயர் பெருந்தவத்தி
> லன்பதுவு மாற்றுமிக்க வாசையினு—னம்பிள்ளைக்
> கான வடிமைகள்செய் யந்நிலையை நன்னெஞ்சே
> யூனமற வெப்பொழுது மோர்."

என்னும் பாசுரத்தில் எடுத்தாளப்பட்டவரும், 13-ம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்தவருமாகிய பின்பழகிய ஜீயர் எழுதிய குருபரம்பரையிலும், அந்நூற்குமுற்பட்ட திவ்ய சூரிசரிதையிலும்பெரியாழ்வார்சரிதம் வரையப்பட்டுள்ளதே? இம்முறையே ஆராய்ந்துசெல்லின், ஷை ஜீயருடைய ஆசிரியர் நம்பிள்ளை, ஷையார் ஆசிரியர் நஞ்சியர், ஷையார் ஆசிரியர் பட்டர்முதலியோர் அருளிய நூல்களிலும் உரைகளிலும் அவ்வாழ்வார் ஸ்ரீசூக்திகளும், சரிதங்களுமேற்கோள்படநிற்றலை நன்ருகக்காணலாம். ஸ்ரீபாஷ்யகாரர் காலத்தே இயற்றப்பட்டு, அவரது சந்நிதியிலே அரங்கேறிய இராமாநுஜநூற்றந்தாதியில்,

> "சோராத காதற் பெருஞ்சுழிப் பாற்ருெல்லை மாலையொன்றும்
> பாரா தவனைப்பல் லாண்டென்று காப்பிடும் பான்மையன்ருள்

பேராத வுள்ளத் திராமா நுசன்றன் பிறங்கியசீர்
சாரா மனிதரைச் சேரே னெனக்கென்ன தாழ்வினியே."

என்னும் பாசுரத்தால் பெரியாழ்வார் இராமாநுஜர்க்குமுற்பட்டவ ரென்பது தேற்றமன்றே. அவ்வந்தாதி இயற்றியருளிய திருவரங்கத்தமுதனர் ஸ்ரீ இராமாநுஜாசாரியர்க்கு அந்தரங்க சிஷ்யராகிய கூரத்தாழ்வான் திருவடிகளை ஆச்ரயித்தவர் என்பது பிரஸித்தம். இனி, சாஸ்திரியார் பெரியாழ்வார் அதிவீரராமன் காலத்தவரோ என்று துணிதற்கு, கி. பி. 1520-ல் இயற்றப்பட்ட 'விஷ்ணுவித்யமு' என்றநூலை ஆதாரங்காட்டினர். இதுவுமோர் ஆதாரமாகுமோ? கம்பநாடர் இராமசரிதம் பாடியதனுல் அவ்விராமபிரான் அக்கம்பநாடர் காலத்தவரோயாவர் என ஒருவன் துணிதற்கும், சாத்திரியார் துணிவிற்கும் வேறுபாடென்னை? பழமைவாய்ந்த சரிதங்கள் பின்னுள்ள கவிகளாலும் பாடப்பெற்று வரும் இயற்கைவழக்கத்தைச் சாத்திரியார் உணர்ந்திருந்தும், அதனை விபரீதப்படுத்தியது ஆச்சரியமேயாம்! இவ்வாறு தாம் நிறுவிய ஆதாரவாதேயங்கள் ஊழ்த்துதிர்தலைக் குறிப்பானறிந்தஅவர் பின்னர் எவ்வழிகொண்டோ, வல்லபதேவன் காலத்தை வரையறுத்தல் கூடாதாயினும், பெரியாழ்வார் இராமாநுஜர்க்கு முன்பிருந்தாரென்றல் நம்பத்தக்கதன்றென்று எழுதிப்போயினர்.

சாஸ்திரியார் அவ்வாறு எழுதியதற்கு முக்கியகாரணம், இராமாநுஜராலே வைணவமதமுண்டாக்கப்பட்டு, அவருடைய சீடர்களாகிய எழுபத்துநான்கு சிம்மாசனதிபதிகளாலே அது பரவலுற்றதென்று தாங்கடைப்பிடித்த கொள்கை ஒன்றேயாம். இதனுல் அவ்விராமாநுஜர்க்கு முன்பு வைணவமதமொன்றே இருந்ததில்லை என்பது அவர் துணிபாகின்றது. வைணவமதம் என்பதற்குப் பொருள் திருமாலை முழுமுதலாக உபாசிக்குங் கொள்கை என்பதாம். திருமாலை அவ்வாறு வழிபடும் மதமொன்றே 11-ம் நூற்றாண்டுக்கு முன்னில்லையென்று சாஸ்திரியார் கூறியது, கற்றவர்க்குள்ளே பெரியதோர் வியப்பை விளைத்திருக்குமென்பது ஒருதலை. வேதாகமபுராணேதிகாசங்கள் தோன்றிய காலந்தொட்டே விஷ்ணுபரத்துவங் கூறுங் கொள்கையுமொன்றுண்டு என்பதற்கு, அவ்வேதாதிகளில்

விஷ்ணுசம்பந்தமான பகுதிகளைக்கொண்டே தெளிவாகஅறியலாம். ஸ்ரீசங்கரரால் எடுத்தாளப்பட்ட விஷ்ணுபுராணத்தில் வைஷ்ணவ பிரபாவம் ஏழாமத்தியாயத்து விரிக்கப்பட்டுள்ளது. அன்றியும் சங்கத்துச் சான்றோரால் "ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி—னன்றென்ப வாறு சமயத்தார்" எனவோதப்பட்ட 'அறுசமயங்'களும் நந்நாட்டில் அநாதியாக வழங்கிவரும் மதங்களாம்: அவற்றுள் வைணவமும் ஒன்றன்றோ? ஸ்ரீராமாநுஜர்க்குப் பெரிது முற்பட்டவராகிய ஸ்ரீசங்கரர்க்கு "ஷண்மதஸ்தாபகர்" என்னும் பெயருண்மை உலகம் அறிந்தது. காசியில் வியாசர் விஷ்ணுபரத்துவஞ் செய்தார் என்னுங்கதை பாத்மோத்தர முதலியவற்றிற் கேட்கப்படுகின்றது; இதனால் அநாதியே விஷ்ணுபரத்துவங்கூறுங்கொள்கையுண்டெனபது இனிது விளங்கும். இன்னும் இச்சிறு விஷயத்திற்கு வடநூன்மேற்கோள்கள் தனித்தனி காட்டப்புகிற் பெரிதும் விரியுமென்றஞ்சுகிறோம். இனித் தமிழ்நூன்முறையே செல்லினும் வைணவம் பழமைப்பட்டதென்பது நன்கறியலாம். சங்கநூலாகிய மணிமேகலையுள் 'சமயக்கணக்கர் தந்திறங் கேட்டகாதை'யில், பழமைவாய்ந்த மதங்கள் சிலவற்றை ஆராயுமிடத்து வைணவவாதமுங் கூறப்பட்டுள்ளது. இதனை 'காதல் கொண்டு கடல்வணன் புராண-மோதின னாரணன் காப்பென் றுரைத்தனன்" எனவரும் அடிகளானுணர்க. இவ்வாறே சிலப்பதிகாரத்தும் வைணவமதவரலாற்றைக் குறித்து ஆண்டாண்டு அறியக்கிடக்கின்றன. அவ்விரண்டு நூல்களும் கி-பி இரண்டா நூற்றாண்டில் எழுதப்பட்டனவாகச் சாஸ்திரியார் தம் வியாசத்துள் ஓரிடத்தெழுதியுள்ளார். அவரே கி-பி. 11-ம் நூற்றாண்டினராய இராமாநுஜர்க்கு முன் வைணவமில்லை யெனவும், கி-பி. 8-ம் நூற்றாண்டுக்கு முன் அஃதிருந்ததென்பது கொள்ளற்பாலதன்று எனவும் தங்கூற்றுக்கு ஒருவரையறையின்றி எழுதியொழிந்தனர்.

இனி, இராமாநுஜரால் வைணவசமயமுண்டாக்கப்பெற்றதென்ற சாஸ்திரியார் கருத்து, விசிஷ்டாத்துவைதமென்றதோர் புதுக்கொள்கையைக் கற்பித்தவர் இராமாநுஜர் என்பதல்லது அநாதியே நிகழும் வைணவத்தைக் குறித்ததில்லையென்று சிலர் கூறவரலாம்.

விசிட்டாத்துவைதம் முற்பட்டதா, பிற்பட்டதா என்பதைப் பின்னர் ஆராய்வாம். அவ்வாறு அநாதிவைணவமொன்றும், புதிதாகக் கற்பிக்கப்பட்ட வைணவமொன்றுமாக இருவேறுவகைகளைச் சாத்திரியார் உடம்பட்டிருந்தாராயின், பெரியாழ்வார் காலநிருணயஞ் செய்யவந்த அவர், அவ்விரண்டனுள் முன்னதை ஒரு குறியாகக் கொண்டாராயாது இராமாநுஜசித்தாந்தத்தையேஅங்ஙனங்கொண்டு அவ்வாழ்வார் இராமாநுஜர்க்குப் பிற்பட்டவர் என்றெழுதியதன் காரணமென்னை? அப்பெரியார் பாண்டியன்முன்னர், வேதாகமப்பிரமாணங்களைக்கொண்டு, பின்வந்த இராமாநுஜசித்தாந்தமின்றியே, விஷ்ணுபரத்துவ நிருணயஞ்செய்திருத்தல் கூடுமன்றோ? ஆதலால் சாஸ்திரியார் பெருநோக்கம், விசிஷ்டாத்துவைதமட்டுமன்று, விஷ்ணுவை உபாசிக்கும் மதமொன்றே இராமாநுஜர்க்கு முன்பிருந்ததில்லையென வெள்ளிடைமலையை விளாம்பழக்கூட்டில் அடைக்கமுயன்றதாகும்.

இனி ஸ்ரீஇராமாநுஜதிவாகரராற், பண்டைக்காலந்தொட்டே வழங்கிவந்த விசிஷ்டாத்துவிதசித்தாந்தம் பிற்காலத்துப் பெருகி விளங்கியதென்பதல்லது அவராலே அது கற்பிக்கப்பட்டதென்பது அறியாதார்கூறுங் குழறுபாடாகும். அந்தச் சித்தாந்தநூல்கள் எழுதிய பூர்வீகர்கள் ;— போதாயனர், திரமிடர், டங்கர், குகதேவர் முதலாயமுநீந்திரர்களாவர். ஸ்ரீஇராமாநுஜாசாரியர் தமதுசாரீரகபாஷ்யமுகப்பில் "பகவானாகிய போதாயனரால் விரிவாக அருளிச்செய்யப்பட்ட ப்ரும்மசூத்திர விருத்தியைப் பூர்வாசாரியர் (திரமிடடங்கர்முதலியோர்) சுருக்கமாகச் செய்தார்கள். அவர்கள் மதத்தைத்தழுவி பிரம்மசூத்திராக்ஷரங்களுக்கு வியாக்கியானஞ் செய்யபடுகின்றது" என்று எழுதியருளியவாற்றால், விசிஷ்டாத்துவைதக்கொள்கை பழமைப்பட்டதொன்றென்பது தெளிவாம். இன்னும்ஸ்ரீ இராமாநுஜருடைய ஆசிரியர்களுக்கும் ஆசிரியராய், அவரது இளமையில் வியோகமடைந்த ஸ்ரீஆளவந்தார் இயற்றியருளிய 'ஸித்தித்திரயம்' முதலிய நூல்கள் விசிஷ்டாத்துவைதக்கொள்கையையே சுருங்கவிளங்க உரைத்தலால், அக்கொள்கை குருபரம்பரையாக வழங்கிவருவதொன்றென்பதும் விளக்கமாகும். அன்றியும் ஸ்ரீ சங்கரர் விசிஷ

டாத்துவைத சித்தாந்தத்தைக் குறித்துத் தமது சாரீரக பாஷ்யத்திலும் (I. 1. 11—19), கீதாபாஷ்யத்திலும் (II. 10—11) ஆண்டாண்டுக் கூறிச் செல்கின்றமையும் கண்டுகொள்க. இவற்றையெல்லாம் ஆராய்ந்தே, சென்னை இராஜதானிக்கலாசாலையில் ஸம்ஸ்கிருத போதகராய் விளங்கும் ஸ்ரீமாந்: M. அரங்காசாரியர், M. A., அவர்களும் தமது ஸ்ரீபாஷ்ய ஆங்கில மொழிபெயர்ப்பின் முகவுரையில் "விசிட்டாத்துவைதத்தைக் குறித்து ஸ்ரீசங்கரர் தாமெழுதிய நூல் "களில் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். இம்மதம் தொன்றுதொட் "டு வருவதொன்றென்பதற்கு ஆதாரமுள்ளது. பாகவதரும், பா "ஞ்சராத்திரரும் இம்மதத்தை உண்டாக்கியிருத்தல்கூடும். இவர் "கள் உண்டாக்கியமதம் உபநிஷத்துக்கள்போலப் பழமைவாய்ந்த "தெனத் தோற்றுகின்றது" என அதன்வரலாறு சுருக்கமாக எழுதினார்கள். இவ்வாற்றால் வைஷ்ணவசமயமென்பது விசிஷ்டாத்துவைதக்கொள்கையோடு விஷ்ணுவை உபாசிக்குமதமென்பதே பொருளன்றி வேறில்லையென்பது விளங்கும். இதுகாறும் ஸ்ரீராமாநுஜரால் நிர்த்தாரணஞ்செய்யப்பெற்ற விசிஷ்டாத்துவைத சித்தாந்தம் பழமையுற்றதென்பதைவிளக்கி, சாஸ்திரியார் அதற்குக்கற்பித்த காலவரையறை போலியாமாறு நிறுவப்பட்டது. அதனால், பெரியாழ்வார் காலத்தை அறிதற்கு அநாதியே நிகழும் வைணவ மதத்தைக் கருவியாகக்கொள்ளுதல் பயனற்றதென்பது இனிது விளங்கும்.

(இன்னும் வரும்)

மு. இராகவையங்கார்.

---

## நுணங்கு மொழிப் புலவர்க்கு வணங்கு மொழி விண்ணப்பம்.

அறிவிற்பெரியராய ஐயன்மீர்! நீயிர் சமநிலையுடையீராதலின், சோபகிருது-ஸ்ரீ புரட்டாசிமீ வெளிப்போந்த செந்தமிழின்கண் "அன்மொழித்தொகைப் பொருண்மேல் வரும் ஆகுபெயர்" என்று ஸ்ரீமத் சி. கணேசையர் எழுதியவற்றையும், யான் சோபகிருது-ஸ்ரீ ஆனிமீ வெளிப்போந்த செந்தமிழின்கண் "இருவர்மாறுகோளொரு தலை துணிவு" என்றெழுதியவற்றையும், ஈண்டெழுதுவனவற்றையும், ஒப்பநாடி எம்மிருவர் கூற்றுள் இஃதொத்தது, இஃதொவ்வாதது, என்று நுமது பெருங்கருணையானறிவித்தருளல் வேண்டுமென நுஞ்சரண் நெஞ்சரண்கொண்டு நுழைகின்றேன்; ஏற்றருண்மின்.

ஆசிரியர் தொல்காப்பியனார்க்கு ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றென்பது கருத்தோ அன்றி வேறென்பது கருத்தோவெனின், சேனாவரையர் முதலாயினார் ஒருபொருளே வேற்றுமையின்மையான் தொகைநிலைபற்றி அன்மொழித்தொகையெனவும் இயற்பெயர் ஆகுபெயரென்னும் பாகுபாடுபற்றி ஆகுபெயரெனவும் கூறப்பட்டதென்றுகொண்டுஒன்றெனவும், நச்சினார்க்கினியர்முதலாலாயினார் வேற்றுமையுடைமையான் இரண்டும் வேறுமெனவுங் கூறலான் அவ்வுரை கொண்டு ஆசிரியர் கருத்து இதுவென அறிதலரிது. அதனால் ஆசிரியர் கூறிய சூத்திரங்கொண்டே அறிதல் வேண்டுமெனக்கருதி, முதற்கண் "பண்பு தொகவரூஉங் கிளவி யானும்" என்னும் அன்மொழித்தொகைச் சூத்திரத்திற்கு என்னறிவிற்கெட்டியவாறு ஒரு புத்துரை யெழுதி "அன்மொழித்தொகை யாராய்ச்சி" யெனப் பெயரிட்டுச் செந்தமிழின்கண் வெளியிட்டேன். இனி அவ்வாறே "முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்" என்பதுமுதலிய ஆகுபெயர்ச் சூத்திரங்கட்கும் ஒருரை யெழுதிப் பின்னர் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் வேறென்பதே ஆசிரியர் கருத்தென விளக்கக் கருதியிருக்கின்றேன். அதனால் அவை யிரண்டும் வேறென இதுபொழுது ஸ்ரீ. கணேசய்யரொடு தருக்கிக்க முயலேன். ஐயர்

தங்கூற்றான் ஒன்றுங்கூறாது அதனைச் சேனாவரையர் முதலாயினார் கூற்றெனவே கூறலாற் பின்னும் அதுபற்றி அவரோடன்றி ஐயர் பால் வாதம் எனக்கின்று. பின் ஐயர்கூற்றுள் அஃதொழிந்த பிற வுரை பொருந்தாமை முன்னெழுதியவற்றானே பெறப்படினும் பிறி தோர் கோட்பாடுபற்றிப் பின்னுமெழுதுகின்றேன்.

யான் "இருவர்மாறுகோ ளொருதலை துணிவு" என்பதன் கண் பரிமேலழகரும் சிவஞானமுனிவரும் ஆகுபெயரும் அன்மொ ழித்தொகையும் வேறென்னுங் கொள்கையுடையாரெனவும் அங்ங னம் கொள்ளினும் 'அணங்குகொல்' என்னுங் குறளின்கண் மாறு பட்டாரெனவும், அம்மாறுபாட்டுள் பரிமேலழகர் கூற்றே துணிவு டைத்தெனவும் பல நியாயவாயிலாக எடுத்துக்கூறி நிறுவினேன். அதன் முடிவுரை பரிமேலழகர்கூற்றுப் பிழையன்றென்பதேயாம். ஐயர் ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் வேறன்றென்பதனான் அதனை அவர் கூற்றும் மறுத்திலது. பின் என்னுரையும் அவருரை யும் யாதன்கண்மாறுபட்டனவெனின், 1-யான்பரிமேலழகர்ஆகுபெ யரு மன்மொழித்தொகையும் வேறெனக் கொண்டாரென்றேன். அவர் ஒன்றெனக் கொண்டாரென்றார்; 2-யான் கனங்குழை என்பது கனங்குழையாளது உருவமுதலியனவாம் என்றேன். அவர் கனங் குழையாளே என்றார். 3 யான் கனங்குழையாளென்பது ஆய்ம யில்கொல் என அஃறிணையொடு முடிதல் ஐயவுவமையணியாயின் வழுவாகாது: அங்ஙனமன்றிப் பொருளையமாதலின் வழுவாமென் றேன். அவர் பொருளையமாயினும் வழுவாகாதென்றார். இம் மூன்றுமே மாறுபட்டன. ஏனைய இருவர்க்குமுடன்பாடாதலின் அவற்றை யொழித்து அம்மாறுபாட்டை யீண்டும் முறையானே தருக்கித்து என்னுரையை நிறுவுகின்றேன்.

பரிமேலழகர் ஒன்றென்னுங் கொள்கையினரேல், யான் செந் தமிழின்கண் ௬௭௭-வது பக்கத்திற் குறித்தபடி கனங்குழை முத லிய பன்னிரண்டு சொற்றொடர்களுட் பத்துச் சொற்றொடர்களுக்கு இலக்கணங் கூறாமையென்னை? வேறு யாண்டாயினும் ஆகுபெயரை எழுதாது விடுத்தனரா? ஓரதிகாரத்துள் ஓரிடத்துவந்த ஆகுபெயர்

மற்றோரிடத்தும் வரின் அதனை எழுதாதுவிடுவர்: அப்பத்தும் அவ் வாறிலவாகவும் அதனை எழுதாமைக்குக் காரணமென்னை ?

செந்தமிழின்கண் ௩௯௦-வது பக்கத்திற் குறித்தபடி "அசை யியற் குண்டாண்டோரேஎர்" என்னுங் குறளின்கண் ஏரென்பது ஆகுபெயரென எழுதிய அவர் அசையியல் என்பது இதுவென எழு தாமையும், "செறிதொடி செய்திறந்தகள்ளம்" என்னுங் குறளின் கண் கள்ளமென்பது ஆகுபெயரென எழுதிய அவர் செறிதொடி என்பது இதுவென எழுதாமையும் என்னை ?

இவற்றைக்கருதின் உண்மை நன்கு விளங்கும். பரிமேலழகர் ஆகுபெயரை விடாதெழுதினமைக்கும் அன்மொழித் தொகையை எழுதாமைக்கும் காரணம் முன்னரே எழுதியிருக்கின்றேன்.

இதுவன்றிச் செந்தமிழ் ௩௪௪-வது பக்கத்துள் தொடலைக் குறுந்தொடி என்பது அன்மொழித் தொகையாயினும் இன்ன கார ணத்தால் எழுதப்பட்டதென யான் எழுதியவற்றையே ஐயர் தங் கூற்றாக எழுதினர்.

இனிப்பொற்றாமரைக்கட் பூசனை புரிந்தானென்பது பொன்னுந் தாமரையுமாகிய இயற்பெயர்ப் பொருளையும் தடாகமாகிய அன் மொழிப்பொருளையுமுணர்த்தாது, ஆகுபெயரான் அத்தடாகத்தின் கரையை யுணர்த்துமாறுபோலவே கனங்குழை என்பதும் கனமுங் குழையுமாகிய இயற்பெயர்ப் பொருளையும் கனங்குழையாளாகிய அன்மொழிப்பொருளையு முணர்த்தாது, ஆகுபெயரான் அக் கனங் குழையாளது உருவ முதலியவற்றை யுணர்த்திற்றென யான் முன் னர்க் கூறியிருப்பவும் அதனை நோக்காது ஐயர் உருவமுதலியன அவாய் நிலையான் வந்தனவேயன்றி ஆகுபெயரன்றென்றார். அவ்வா றே பொற்றாமரையென்பது கரையையுணர்த்தலும் தாமரை யென் பது அதன் பூவையுணர்த்தலும் ஊர் என்பது அதன்கணுள்ளாரை யுணர்த்தலும் விளக்கு என்பது அதனைத்தாங்கிய தண்டினையுணர்த் தலும் ஏனைய ஆகுபெயர் பிறபொருளை யுணர்த்தலும் அவாய் நிலை யெனக்கூறிவிடலாமே! அங்ஙனமாயின் ஆகுபெயரெனக்கூறலும் வேண்டப்படுவதன்றே. இங்ஙனம் வருவன அவாய் நிலையெனக் கூறுதற்கு மேற்கோள் யாது ?

இனி அவாய்நிலையாவது ஒருபதம் தன்னைமுடிப்பதொரு பதம் இல்லாதவழி முடிவுபெறாது நிற்றலன்றே. அவாய்நிலையான் மொழி வருவித்தலாவது "இயம்புவனெழுத்தே" "அறைகுவன் சொல்லே" என்றவழி யான் என்றாற்போல்வனவன்றே? உருவமுதலியன அவ்வாறுவந்தனவன்றே. அங்ஙனமாகவும் "அணங்குகொலாய் மயில்கொல்லோ கனங்குழை" என்றவழி அவ்வுருவ முதலியன அவாய்நிலையான் வந்தனவெனின், ஆண்டு முடிவுபெறாது நிற்கும்பத மொன்றுமின்றே. இது கருதாது ஐயர் செந்தமிழ் ௬ள௭-வது பக்கத்துள் "ஆகுபெயர்ப்பொருளைப் பதவுரையுட் கூறினும் அது அதிகாரம் அவாய்நிலை யெச்சமுதலியவற்றான் வருவித்தமொழியோ அன்றி ஆகுபெயரோவென ஐயுறுவராதலின் யாண்டும் ஆகுபெயரென விடாதெழுதுவர்" என யான் கூறியதுகொண்டே ஈண்டு அவாய்நிலையெனக்கூறி எனக்குப் பயனில்வேலை வைத்தார்.

இனி உருவமுதலியன ஐயமுறுதற்கு ஏதுவென்றார். அவை ஏதுவாயின் ஐயுறுதற்குச் செயப்படுபொருள் யாது; திணைபாலிடத்து ஐயமின்மையிற்கனங்குழையாள் அல்லள்: கனங்குழையுமன்று: அதனால் அவளை யையுற்றானெனல் அமையாது. அவளது உருவமுதலியவற்றை யையுறலே யமையும். தலைமகன் தலைமகளை ஐயுற்றது எனக்கூறுதல் பண்புக்கும் பண்பிக்குமுள்ள ஒற்றுமை நோக்கிக் கூறியதாம். அதுகொண்டு ஐயுறற்குச் செயப்படுபொருள் தலைமகளென லும் உருவமுதலியன ஏதுவென லும் எவ்வாறுகூடும்? தலைமகள் செயப்படுபொருளாயின் தலைமகனுக்குத் திணைபாலிடத்தும் ஐயமுளதாம். திணைபாலிடத்து ஐயமின்றேல் தலைமகளை ஐயுற்றானுமல்லனும். இவ்வாற்றான் ஐயுறற்கு உருவமுதலியன செயப்படுபொருளாமென்றும் அதற்கு ஏது அவை முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையே என்றும் விளங்கும். இதனைப் பரிமேலழகர் உருவமுதலியன முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையின் ஐயுற்றதெனச் சிறந்தமைக்கே ஏதுக்கொடுத்துக் கூறுமாற்றானு மறியப்படும்.

இனி ஏதுவாவன எழுவாயாயின் ஏதுவாவன பிறவேண்டுமெனக் கருதியபொருள் செவ்வனே விளங்காது மயங்கக்கூறினர்.

அதுபற்றி யான் கூறலொன்று மின்று. இவ்வுருக்குற்றிகொல் மகன்கொல் என்னுமிடத்தும், இவ்வெழுத்தாணியெழுதிற்று என்னுமிடத்தும் ஏதுவாவன பிற என்னையுளவோ, அவரே கூறல்வேண்டும்.

இனி உருவமுதலிய பொதுச்சொற்கிளத்தல் திணைபால்கள் துணியப்படாதவற்றிற்கேயன்றித் துணியப்பட்டவற்றிற்கு வேண்டியதின்றென்றார். அது வேண்டாமையான் திணைமயங்கல் வழுவன்றென்பது பெறப்பட்டதோ. யானும் திணைபால் துணியநின்ற கனங்குழையென்பது அஃறிணையொடு முடிதல் கூடாதெனக் கூறினேனன்றி உருவமுதலிய பொதுச்சொற் பெறல்வேண்டுமெனக் கூறினேனல்லேன். இனி யான் ஆகுபெயர்ப் பொருளை விசேடவுரையுட் பரிமேலழகர் விளக்கினாரென்றதனைமறுத்து ஐயநிகழ்ந்தமைக்கேதுக்கூறினாரேயன்றி ஆகுபெயரின்னதென்பதை விளக்கக் கூறினாரல்லரெனக் கூறினார். மூலபாடத்துள் ஒருவாற்றானுமறியப்படாவிடின் அதனை விசேடவுரை முதலியவற்றுள் எழுதுதற்குக் காரணமின்மையினும் ஆகுபெயர்ப்பொருளை விளக்குதலானே அவை முன்கண்டறிவனவன்றிச் சிறந்தமையாகிய ஏதுப்பெறப்படலானும் ஆகுபெயர்ப் பொருள்கூறினாரல்லர் : ஐயநிகழ்ந்தமைக்கு ஏதுவே கூறினாரென வாளாகூறல் பொருந்தாது.

இனிக் கனங்குழையையுடையாள் ஆகுபெயரென்னாது கனங்குழை ஆகுபெயரென்றமையான் அது பொருந்தாதென்றார். காரறுத்தது என்புழிக் கார் ஆகுபெயரெனக்கூறலேயன்றி கார்ப்பருவம் ஆகுபெயரென யாவருங் கூறார். அதுபோல்வதே கனங்குழையென்பதும். இதனை முன்னரே யுரைத்தேன்: அதனை நோக்கல்வேண்டும்.

இனி உவமையையத்தின்கண் திணைபால் மயங்கல் வழுவன்றெனவும் பொருளையத்தின்கண் மயங்கல் வழூவேயெனவும் ஆண்டுவிரித்துக் கூறினேன். அதனை உற்று நோக்காது பொருளையத்தின்கண் உயர்திணை அஃறிணை முடிபேற்றுவந்தமைக்கு விதியாதோவெனின்;- அஃது ஐயவணிபற்றி வந்த வேறோர் செய்யுண்முடிபேயாமென்றார். விதிகூறவந்தார் அவ்விதிகூறும் இலக்கணநூற் சூத்திரத்தை மேற்

கோள் சாட்டாது வேறோர்செய்யுள் முடிபேயென்று தேற்றங்கூறின் அது விதியாமோ?

இன்னும் உவமைபற்றியேயன்றிப் பொருள்பற்றியும் ஐயவணி வருமென்பது சில ஆசிரியர் கருத்து என்றார். ஐயம் உவமைபற்றியேயன்றிப் பொருள்பற்றி வாராதென யான் கூறிற்றிலன். அங்ஙனங் கூறினன்றே அவர் பொருள்பற்றிவஈலுஞ் சில ஆசிரியர் கருத்தெனக்கூறி மறுக்கவேண்டும். இதுவன்றி அது சில ஆசிரியர் கருத்தென்றதனாற் பல ஆசிரியர்க்குக் கருத்தில்லையென்பது போதருமாதலின் எவ்வாசிரியர்க்குக் கருத்தில்லை; அவர் யாவர்? பொருள் ஐயமுறுங்கால் திணைபான் மயங்காவென்பதும், மயங்கின் அதுவழுவென்பதுமே என்கூற்று. மயங்கல் கூடாவென்பதே இலக்கணமாதலிற் சான்றோர் மயங்குமாறு செய்யுட்செய்யாரென்பதே தேற்றம். திணை பால் துணியப்படாத பொருளையமே மயங்கல் கூடாது. அவை துணியப்பட்ட ஐயம் மயங்கலாமெனின் ஆசிரியர் அங்ஙனங் கூறாமையானும் திணை பால் துணியின் அத்துணிபொருள் பலவற்றுள் இது யாதென ஐயநிகழலன்றித் துணிபொருளல்லாத் திணையும் பாலும் ஐயுறுதல் உலகியல்பன்றாமாதலானும் அது பொருந்தாது.

இனிப் "பிறரும் பொன்னம்பாவைகொல் அண்டார்த மணங்குகொல் எனக் கூறுதல் காண்க" என்று ஆசிரியர் பெயராவது நூற்பெயராவது கூறாது, உயர்திணை அஃறிணை முடிபேற்று வந்தமைக்கு ஒரு செய்யுளை உதாரணங் காட்டினார்.

"புண்டரிகத்திகொல் பொன்னம்பாவைகொ, லண்டர்தமணங்குகொல் லென்னினன்னாக், கண்டறிவேனெனைக் காதல்பூட்டியவொண்டொடியினையளென் றுணர்கிலேனரோ" என்று கந்தபுராணம் அசுரகாண்டம் மாயைப்படலத்துள் உஅ-வது செய்யுள் ஒன்றுளது. அச்செய்யுளுள் பொருளையமுமின்று. அது திணைமயங்கி வந்தமையான் வழுவாதலுமின்று. பின்னர்ப் புண்டரிகத்திகொல் பாவைகொல் அணங்குகொல் என இருதிணையும் விரவின்மையும் அன்னரை என்று உயர்திணை முடிபேற்றமையும் என்னையெனின், ஆண்

டுக்கொல் என்பது அசைநிலையாய்ப் புண்டரிகத்தியெனினும் பாவை யெனினும் அணங்கெனினும் யான் அவரைக் கண்டறிவேனாதலின் யான்கண்ட ஒண்டொடி அவரல்லள்: இனையளென்றுணர்கிலேன் என்னும் பொருள்படநிற்றலிற் புண்டரிகத்தி முதலாயினாரோ வென ஐயுறுமையாற் பொருளையமின்றாம். பின் அவை உயர்திணை முடிபுபெற்றமை, ஆசிரியர் தொல்காப்பியனார் கிளவியாக்கத்துள் "பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெய, ரஃறிணை முடிபின செய்யு ளுள்ளே" என்றமையானே சிலவிடத்து உயர்திணைமுடிபின வென்பதும் பெறப்பட்டதாதலின் அவ்விதியால் புண்டரிகத்தி முதலாகிய அம்மூன்று பொருளும் விரவி அன்னரென உயர்திணை முடிபினவாயினவென யாவரானு மறியப்பட்டதொன்றேயாம். இது "பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு" எனவும் "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார், மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்கு" எனவும், இருதிணையும் விராய் உயர்திணை முடிபேற்றமையானுமுணரப்படும். இங்ஙனமெளிதினுணரக்கிடந்த கந்தபுராணச் செய்யுளைப் பொருளையத்துத் திணைமயங்கினமைக்குதாரணமாகக்கூறி என்னை மறுத்தற்கெழுந்த ஐயர் கருத்துப் பெரிதும் வியக்கற்பாலதே. இம் மட்டோடு என்னுரை முடிந்தது.

இனி எம்மிருவர் கூற்றும் நோக்கிக் கற்றோர் தங்கருத்தை வெளியிடுமாறு பின்னும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்.

சோழவந்தான்,

அ. சண்முகம்பிள்ளை.

# தருக்கசூத்திர முதற்பாடம்.

(22-ம் பக்கத்தொடர்ச்சி.)

(26) ஒரு பொருளை அல்லது குணத்தையுள்ளதாய் வழுத்தி நிற்பதெதுவோ அஃது உடன்பாட்டுறுப்பாகும்.

(உ-ம்) மனிதன், நன்றியறிதல் முதலியனபோல்வன.

(27) ஒரு பொருளை அல்லது குணத்தை இல்லதாய் வழுத்தி நிற்பதெதுவோ அஃது எதிர்மறையுறுப்பாகும்.

(உ-ம்) மனிதனின்மை, நன்றியறிதலின்மை முதலியனபோல்வன.

(1) இவ்வெதிர்மறை யுறுப்பு எதிர்மறை காட்டும் உருபின்றி வரினும் வரும்.

(உ-ம்) வெளிச்சத்தின் எதிர்மறை "இருள்" (வெளிச்சமின்மையைக் காட்டலால்). ஈண்டு எதிர்மறையுருபு இல்லாமை காண்க.

(2) ஈண்டு அளவினைக்குறிக்கும் மொழிகளை உபயோகப்படுத்துவதில் மிக்க கவனம் வைத்தல்வேண்டும்.

(உ-ம்) "சிறியது, பெரியது" என்பவற்றுள் முன்னையதற்குப் பின்னையது எதிர்மறையாகாது. ஏனெனில் இவ்விரண்டின் மத்தியதரமான "சமநிலை" யொன்றிருத்தலாலென்க. பெரியதென்பதின் எதிர்மறை "பெரியதல்ல" வென்பதேயாம். பெரியதல்ல என்பது "சிறியது" அல்லது "சமநிலையுள்ளது" என்னும் இரண்டு தாற்பரியங்களைத் தன்னுளடக்கிக் காட்டுமாற்றை உய்த்துணர்ந்து கொள்க. ஒன்றினது இன்மைகூறுங்கால் மாத்திரம் எதிர்மறை மொழியெனப்படும். இவ்விருமொழிகளுள் ஒன்றற் கொன்று அங்ஙனம் இயைபுடைத்தாகாமையால் "சிறியது" என்பது பெரியது என்பதின் எதிர்மொழியாமெனக்கூறலாம். எதிர்மொழி—எதிர்ந்து நின்று பொருள்தரு மொழி.

(3) ஒருவு மொழிகளும் இதனுட்படுவனவாம்.

ஒருபொருள் தனக்குமுன் னுடையதை யுரியதை
ஒருவிடி லொருவு மொழியென வுரைப்பர். (தருக்கசூத்திரம்.)

(உ-ம்) குருடு. இது ஒருவுமொழி: ஏனெனில் பெரும்பாலும் பிராணிகளுக்கு உரித்தான கண்களின் இழப்பை இப்பதங்காட்டி நிற்றலா லென்க.

(28) ஒரு மொழியை நினைக்குங்கால் அதனோடு மனத்தின்கண் தோன்றி நிலைபெறும் மற்றொருமொழியை உறவுமொழி யென்ப.

(உ-ம்) ஒரு மகவை நினைக்குங்கால் தகப்பன் என்ற வார்த்தை மனத்தின்கண் நிகழாதிராது. அப்படி நிகழுந் தகப்பன் என்னும் வார்த்தை உறவுமொழி யாகும். மகவு என்னும் வார்த்தை அதனோடு இணைந்து செல்லுதலால், அதனை இணைமொழி யென்று சொல்லுவர்.

(1) மனிதன், குதிரை, பிருதுவி முதலியன போன்ற மொழிகளெல்லாம் இணைவுறு மொழிகளாம். இணைவுறுமொழி—வேறுயாதாமொரு மொழியோடும் சம்பந்தமுற்று நடைபெறுமொழி.

(29) ஒருமொழி பல பொருள் கொள்ளுதல் கூடுமாதலால் ஆண்டைக்கேற்ற ஒருபொருள் குறித்துக் கூறி மேற் செல்லுதல் நலமாகும். இல்லாவிடில் "தருக்கப்போலி" எளிதிற் சார்ந்து நடைபெறும். இப்போலியால் நிகழும் இடையூறு இன்னதென அறிதற்கு அவ்வப் பாஷையின்கண்ணுள்ள வார்த்தைகளின் பல்பொருள்களை நன்கு கற்று ஆராய்ந்தறிதல் வேண்டும்.

(30) ஒரு மொழி வரையறையுள்ள ஒரு பொருளைமாத்திரம் உணர்த்து மேனில் அஃது ஏகார்த்தம் தங்கிய பதமெனப்படும்.

(1) (உ-ம்) தேவாலயம்: என்ற வார்த்தை தில்லை, மதுரை, நெல்லைமுதலிய ஸ்தலங்களில்நிலைபெற்று ஒத்ததன்மைவாய்ந்த எல்லாக்கோவில்களையுங்குறித்து நடைபெறும் உரிமைப்பாடுடையதாய், யாண்டும் ஓர்அருத்தங்கொள்வதாய் நிகழ்தல்பற்றி அஃதுஒருபொருள் தங்கிய ஏகார்த்த பதமாம்.

(2) அஃது (ஏகார்த்தந் தங்கிய பதம்) பெரும்பாலும் சாத்திரத்தின் கண்ணுறும்.

(உ-ம்.) பதி. பசு. பாசம். இவை ஏகார்த்த பதங்களாம்.

(31) ஒருமொழி யிருபொருள் பல்பொரு ளுணர்த்தின்
ஐய மொழியென வறைகுவ ரறிந்தோர்-(தருக்கசூத்திரம்)

உ-ம். கோவில். இஃது ஐயமொழி. ஏனெனில் (1) ஒருக்கால் இராஜமாளிகைக்கும் (2) மற்றொருக்கால் தேவாலயத்துக்கும் (3) பின்னொருக்கால் பசுக்கள் கட்டுமிடத்துக்கும் உபகாரப்படுமாற்று லென்க.

(32) சிலேடை மொழிகளாலும் ஐயம் நிகழ்தல் கூடும்.

ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

உ-ம். "செங்கரங்களானிரவு நீக்கும்" என்பதில் சூரியனுக்குப் பொருள் கொள்ளுங்கால், கரம்=கதிர்: இரவு=இராத்திரி: எனப்பொருள்படும். அரசனுக்குப் பொருள் கொள்ளுங்கால் கரம்=கதிர். இரவு=இரத்தல் என்று பொருள்படும். இவ்விருவகைப் பொருள்கொள்ளுந் தன்மையால் ஐயம் நிகழுமாற்றை உய்த்துணர்ந்து கொள்க.

(1) அன்றியும், கவர்படுபொருண்மொழிகளாலும் ஐயம் நிகழ்வதுண்டு.

உ-ம். "அரிமருவு சோலை" என்பதில் அரி என்பது வண்டு, சிங்கம், நெருப்பு முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்றலால் ஒன்று துணியப்படாமை காண்க. இதில் "அரி" என்னும் பதம் கவர்படுபொருண்மொழி.

(33) சாதாரணமாய் ஒவ்வொரு பொதுப்பதமும் பொருள்விரிவுடையதென்றும் குறிப்பினதென்றும், இருவகையினுட் பொருந்தும்.

உ-ம். மனிதர்: இது, மனிதர் என்று எண்ணப்படுபவருள் ஒவ்வொருவரையும் நேரே குறித்துக்காட்டுந்தன்மையாலும், எல்லா

மனிதர்கள்மாட்டும் சாதாரணமாய்ப் பொருந்தியுள்ள ஒருகுணம் அல்லது பலகுணத்தோகுதிகளை அவாய்நிலையாய்க் குறித்துக்காட்டி நிற்றலாலும், மேற்கூறிய இருவகைப்பொருள்கோள் உறுவதை யறிந்துணர்க.

தருக்க சூத்திரம். { (1) பொருள்விரி மொழிதான் பொருளினைக் காட்டும். (2) குறிமொழி யாழ்ந்ததின் குணங்களைக் குறிக்கும்.

(34) பொருள்விரி, குறிப்பு இவ்விரண்டினுள்ளூறும் பதங்கள் சில அடைமொழிகளைச்சேர்த்தலால் அளவினில் மிகுந்தும் குறைந்தும் நடைபெறுவனவாம்.

(உ-ம்) வண்டி, புகைவண்டி என்னும் இவ்விருமொழிகளைக் கவனித்துப்பார்க்குங்கால், புகைவண்டி என்பதைவிட வண்டி என்னும் பதத்தில் அதிகமானபொருள்கள் அடங்கிநிற்றலைக்கண்டுணர்க. ஈண்டு, புகையென்னும்வார்த்தையை வண்டி என்பதினோடு சேர்த்தலால் பொருளில் விரிந்துநின்ற அப்பதம் (வண்டி), குணத்தில் மிகுந்து நின்று எண்ணத்திற் குறைவுபடுதலைக்கண்டாம். [எண்ணம்-தொகை.] குணமிகுந்துநிற்பதெவ்வாறென்னில் சாதாரணவண்டிகளுக்குள்ள தன்மையோடு புகையா லுந்தப்படுந்தன்மையும் கூடி நிற்றலால் என்க. இவ்வாறே பல அடைமொழிகளை மேலும் மேலும் சேர்த்துச்செல்லுங்கால் பொருள்விரி குறைந்தும், குணவிரி படிப்படியாய் மிகுந்தும் வருதலைக்காணலாம்.

(35) ஒரு பொருளுக்குள்ள தன்மையை மீக்கோளக் கூறுவதால் பொருள்விரி அருத்தத்தை யதிகப்படுத்தல் சாலாது.

உ-ம் "தண்ணீர்" என்ற வார்த்தையோடு "குளிர்ந்த" என்ற எச்சமொழி சேர்க்கில், முன்னுள்ள பொருள்விரிஅருத்தத்தை அதிகப்படுத்தினோமல்லோம்; ஏனெனில் தண் என்பதே குளிர்ந்த என்னும் அருத்தத்தில் நிற்றலால்.

இது (குளிர்ந்த தண்ணீர்) வெளிப்பார்வையில் குணவிரியுற்று நின்றதுபோல் தோற்றினதேயன்றி, உண்மையில் அவ்வாறில்லாமை கண்டுணர்ந்து கொள்க.

(36) இயற்பெய ரியாவுங் குறிப்பிடை யியங்கா. (தரு-ம்)

உ-ம். கொற்றன்: என்னும் இயற்பெயர் யாம் விளித்தற்கான இடுகுறிப் பெயரேயன்றி யாதாமொரு குணத்தன்மையால் அஃது அவனுக்கு இட்டிடாமை காண்க.

(37) குணப்பெய ரியல்பிற் குணங்களைக் குறிக்கலாற்
குறிப்பதின் மேலுங் கூடா தென்பர் (த-ம்)

உ-ம். வெண்மை என்னுங் குணப்பெயர், வெள்ளை வெண்மை என்று அடையடுத்து வாராமை காண்க.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ணமுதலியார்.

---

ஓம் :

திருச்சிற்றம்பலம்.

## உ ள் ள து.

(சுஉஉ-ம் பக்கத்தொடர்ச்சி.)

(கசு) ஏஷஆத்மாஅபஹதபாப்மாவிஜரோவிம்ருத்யுர்விசோகோ
விஜிமத்ஸோஅபிபாஸஸ்ஸத்யகாமஸ்ஸத்யஸம்கல்பஃ |

“அந்த ஆன்மா அபகதபாப்மாதி (சர்வஞ்ஞதாதி) குணங்களையுடையதாகச் சாந்தோக்கியத்திற் கூறப்படுகின்றது. ஆகவே, சத்தின்பாற்பட்ட சிவனேனும், உருத்திரனேனும், பிரமமேனும், அருட்சத்திகளையும் சத்தியஞானனந்தாதி குணங்களையுமுடையராகப் பரசுருதிகளிற் கேட்கப்பட, சத்தானது நிர்விசேடப் பொருளாகக் காணப்படுகின்றதே எனின் அன்று,

(கஎ) சக்திஸ்சிவஸ்சஸச்சப்தப்ரக்ருதிப்ர[illegible]பாஜிதௌ |

“சத் சப்தத்தின் பிரகிருதிப் பிரத்தியய[illegible]கள் சிவமும் சத்தியு

மாம்" என்று அபியுக்தசூக்தி கூறுதலான், சத்தானது (அருட்) பராசத்தி விசிஷ்ட சிவபரம்பொருளேயாம் என்பது. இந்தச் சத்தியை அநிர்வசநீய மாயாசத்தி எனப் பொருள்கொண்டால் என்னை எனின், அந்தச் சத்து உருத்திரர், ஆன்மா, பிரமம், சிவன் என்பவரிற் சமந்வயமாம் என்று சுருதிகள் வலியுறுத்தியனவாக, இவர்க்குள்ள சத்திகுணங்கள் செந்தமிழ்ப்பத்திரிகை கஉஎ-ம் பக்கத்துக் கூறிய பராசத்திகுணங்களாம் என நிரூபணஞ்செய்யப்பட்டதோடு முரணுறுமாதலின் அது பொருந்தாது. எனவே நிர்க்குணப்பிரமம் என ஓர் பிரமம் இந்தப்பரசுருதிகளில் இன்றோ எனின் இல்லை. அங்ஙனமாயின், சுவேதாசுவதரத்திற் பிரமம் நிர்க்குணம் எனக்கூறப்பட்டமைக்குச் சமாதானம் என்னை எனிற் கூறுதும். நிர்க்குணம் என்று கூறிய அச்சுவேதாசுவதரமே (கரு-ம் இலக்கத்திற் கண்டவாறு) பிரமத்துக்கு அபின்னமாகப் பராசத்தியைக் கூறுதலோடமையாது,

(கஅ) குணீஸர்வவித்ய꞉ | ப்ரயாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேச꞉ |

"இவர் சர்வஞ்ஞர் குணி" என்றும், "பிரதானத்துக்கும் (பாசத்துக்கும்), க்ஷேத்திரஞ்ஞனுக்கும் (பசுவுக்கும்) பதியாயினர் குணங்களையுடைய ஈசர்" என்றும் பிரமத்தைக் கூறலான், பிரமம் குணிப்பொருளாம். பிராகிருத சாத்துவிக இராசததாமச குணங்களின்மையால் சுவேதாசுவதரத்திலே நிர்க்குணம் என்றும், பாசகலைகள் அற்றிருத்தலான் நிஷ்களம் என்றும், பசுபாசங்களுக்குரிய தொழில் யாதும் இன்மையால் நிஷ்கிரியம் என்றும், வியாபகத்தினால் பிருதிவி முதலிய பொருள்களுள் அந்தர்ப் பவித்துளரேனும் அவர் அப்பொருள்களைப் போல வளர்தல் தேய்தல் அடைந்து அவற்றொற்றுமைப்படக்குண்ணார் என்பதுணர்த்தற்குப் பிருகதாரணியத்திற் பலவிடங்களில் "அல்லையீதல்லையீது" என்றுணர "நேதிநேதி" என்றும் பிற உபநிடதங்களில் ஆங்காங்கு அங்ஙனம் கூறப்பட்டதாம் என்றும் உணரல்வேண்டும்.

அங்ஙனமா[illegible], பிருகதாரணியத்து ஐந்தாம் அத்தியாயத்து எட்டாம் பிராம்ம[illegible]த்து எட்டாம் மந்திரப்பிரிவில், அக்ஷரப்பிரமம்

"ஸ்தூலமன்று, அணுவன்று, குறியதன்று, நெடியதன்று, உலோகிதமன்று, சிநேகமன்று, சாயையன்று" என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்பட்டமையின், அந்தப் பிரமம் நிர்க்குணப்பிரமமே எனின், அடுத்த 9-ம் மந்திரப் பிரிவில் அந்தப் பிரமத்தைச் சகுணப்பாற்பட, "அந்தப் பிரமத்தின் ஆஞ்ஞையினால் சூரிய சந்திரர், பூமி, ஆகாயம், நிமிஷம், முகூர்த்தம், இராப்பகல், பருவதங்கள், நதிகள் தாங்கப் படுகின்றன." என்றற்றொடக்கத்தக்கனவாகக் கூறப்படலான், அந்த அக்ஷரப்பிரமம் சகுணப்பிரமமேயன்றி நிர்க்குணப்பிரமம் அன்று. ஒரே பிராம்மணத்தில் ஒரே அக்ஷரப்பிரமத்தை ஒருமந்திரத்தில் நிர்க்குணமாகவும், அடுத்த மந்திரத்தில் சகுணமாகவும் இருதிறப்படுத்திக் கூறுதல் உபநிடதமுடையார் கருத்தன்றாம் என நன்கு ஆராய்ந்து வடமொழிப்பண்டிதராய (Dr. Thebaut) தீபோ "The eighth Brahmana (the whole of 5th adhyaya indeed of the Brihadaranayaka) for instance, is said to convey the doctrine of the highest non-related Brahman, while the preceding Brahmanas had treated only of Isvara in his various aspects. But, as a matter of fact, Brahmana 8, after having, in section 8, represented Brahman as destitute of all qualities, proceeds, in the next section, to describe that very same Brahman as the ruler of the world, "By the command of that Imperishable sun and moon stand apart &c., a clear indication that the author of the Upanishad does not distinguish a higher and lower Brahman in Sankara's sence" என்று கூறினர். ஆதலின், அக்ஷரப்பிரமசிவனார் சேதனாசேதனப் பிரபஞ்சத்தை வியாபித்தாரேனும் அவர் அப்பொருள்களின் ஸ்தூலத்துவம், அணுத்துவம், குறுக்கம், நீட்சிமுதலிய குணங்களை அடையாராய்ச் சடப்பொருள்களாற் றொடக்குண்ணாது சமஸ்தகல்யாணகுணங்களுக்கும் ஆஸ்பதமாயினார் என உணர்த்தற்கே 'ஸ்தூலமன்று, அணுவன்று' என்றற் றொடக்கத்தனவாகக் கூறப்பட்டார் என்பது. ஆகலான் பரசுருதி உபநிடதங்களிற் சகுணப்பிரமம் ஒன்றே புகழப் பட்டதன்றி நிர்க்குணப்பிரமம் என மற்றொன்று கோடற்குச் சிறிதும் இடனின்றாம் என்க. அதுகொண்டு சத்தெனினும், ஆன்மா எனினும், பிரமம் எனினும்; சிவன் எனினும், உருத்திரர் எனினும்,

அவரெல்லாம் ஒரே சகுணப்பிரமமாம் என்பது தெள்ளிது. அந்தச் சத்தாகிய சவிசேஷப்பிரமமே சிருட்டிக்குக் காரணம் என்று,

(ககூ) ஸந்மூலாஸ்ஸௌம்யேமாஸ்ஸர்வாப்ரஜாஃ |

சாந்தோக்கியங் கூறிற்று.

(உ0) ஸௌம்யேமாஸ்ஸர்வாஃப்ரஜாஸ்ஸதிஸம்பத்யநவிது:ஸ்ஸதிஸம்பத்ஸ்யாமஹே |

"சௌமிய! இந்தப் பிரசைகளெல்லாம் சத்தில் அமிழ்ந்தியும் அதில் அமிழ்ந்துகின்றேம் என அறிகின்றிலர்" என்று சாந்தோக்கியம் கூறினமைக்கு இயைய, அச்சாந்தோக்கியம் எட்டாவது பிரபாடகத்து முதலாம் கண்டத்து ஐந்தாம் மந்திரத்தில் "க்ஷேத்திரத்தை (தேசத்தை) அறியாத சனங்கள் (பூமிக்குள்) மறைப்புண்டு கிடந்த பொற்பண்டாரத்துக்குமேலே தினந்தோறும் சஞ்சரித்தும் அதனைக் காண்டலுறுதவாறுபோலப் பிரசைகளெல்லாம் தினந்தோறும் இந்தத் (தகராகாய) பிரமலோகத்தை அடைந்தும் அஞ்ஞானத்தினல் மேற்கொள்ளப்பட்டாராகி அதனை அறிந்திலர்" என்று கூறுதலான் மேலே உரைத்த சத்து அபகதபாப்மாதி குணங்களினின்று வேறுருத தகராகாசத்தின் மேற்றும் என்க.

(உக) தஸ்யதாவதேவசிரம்யாவந்நவிமோக்ஷ்யே |

"எதுகாறும் (சத்தைப்பற்றி அதனல் பாசப்பற்றை அறுத்து) வீடுறவில்லையோ, அதுகாறும் (முத்தியடையக்) காலம் நீடிக்கும்" எனச் சாந்தோக்கிய சுருதி எதிர்மறைமுகத்தான் சத்தே முத்தி அடைதற்குக்காரணம் என வலியுறுத்திற்று. இங்கே உரைத்தவாற்ருல் சத்தே உலகசிருட்டிக்குக் காரணம் என்றும், இதனையே நித்திராகாலங்களில் பிரசைகள் அடைந்து சுகித்து மீளுகின்ருர் என்றும், சத்தே முத்திக்குக் காரணம் என்றும் உணரற்பாற்று. சத்தானது சத்தியம் எனச் (சாந்தோக்கியம் 6. 9. 4) மந்திரத்திற் கூறப்பட்டுளது. சத்தியம் என்றது மெய்ப்பொருள் எனப் பொருள்படும்.

(உஉ) அநாதிமலஸம்ச்லேஷப்ராக்ஹாவாக்விசேஷதஃ |

அத்யந்தபரிசுத்தாத்மாசிவஇத்யுச்யதேவிபுஃ ||

"(ஆதிமத்தியாந்தமிலாமையான் அநாதிப்பொருளாய், அத

னுல்) அநாதியே ஆணவமலத்திஞற் ருெடக்குண்ணுதவராய், (சமஸ்த சேதனுசேதனப்) பிரபஞ்சங்களையும் அருட்சத்தியினுல் அணுப் புதைக்க இடமின்றி ஊடுருவி வியாபித்தலின் விபுவாயினுரேனும் தம்மை ஒன்றும் கலத்தலின்மையின் விசேஷித்து அத்தியந்த பரிசுத்தமுடையராய் இருந்தமையின் சிவன் எனப்படுவர்" என்று வியாசர் உபப்பிருங்கணம் கூறுதலானும், "தோற்றக் கேடுகளின்மையின் நித்தமாய் நோன்மையாற் றன்னை யொன்றும் கலத்தலின்மையிற் றாய்தாய்த் தானெல்லாவற்றையும கலந்து நிற்கின்ற முதற் பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்று பரிமேலழகியார் விசேடவுரையிற் கூறுதலானும், சிவனும் செம்பொருளும் ஒருபொருட்கிளவியாமாறு உணர்க. சாந்தோக்கியத்ததாக (உம். இலக்கத்திற் கண்ட) தத் பதப் பொருளாகிய பரமான்ம சிவபிரானுருடைய அபகதபாப்மாதி (சர்வஞ்ஞுதாதி) குணங்களைத் துவம் பதத்திஞற் குறிக்கப்படும் சம்பிரசாதன் எனப்பெயரிய சீவன் அடைதலாகிய பரமசாமியமுறுகின்ருன் என்பதுணர்த்த முண்டகோபநிடதம்,

(உரு) நிரஞ்ஜநப்பரமம்ஸாம்யமுபைதி |

"நித்திய சம்சாரத்தினின்று முக்தனுய்ப் பரமசாமியத்தை அடைகின்ருன்" என்று கூறுதலான், பரப்பிரமசிவபிரானுரது சமானகுண கைவல்லிய இலட்சுமியே ஆன்மாவுக்கு எய்திய பரமப் பிரயோசனம் என்பது அமைவுடைத்து.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர்.

# புத்தகக் குறிப்பு

கலைசைச்சிலேடை வெண்பா:—இந்நூல் நிகண்டும் இலக்கணச்சுருக்கமுங் கற்று இலக்கியம் படிக்கத் தொடங்குஞ் சிறுவர்கள் சொற்களையும் சொற்புணர்ச்சிகளையும் பயில்வதற்கு உபயோகமாவதொன்று. இது நூறுவெண்பாக்கள் கொண்டு முடிவது. இதன்கண் ஒவ்வொரு செய்யுளும் இரண்டாமடிகளெல்லாம் இரண்டு மூன்று பொருள் கொள்ளும்படி சிலேடையுடையனவாகவும் பின்னிரண்டடிகளும் திரிபுயமகமுடையனவாகவும் செய்யப்பட்டது. இதற்கு யாழ்ப்பாணத்துச்சுன்னுகம் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் பிரித்தவளவிற் பொருள்புலப்படுஞ் சொற்களைப்பிரித்துவிட்டும், புலப்படாத சொற்களுக்குப் பொருள் கூறியும் முழுதும் பொருள் தெரிந்து கொள்ளுமாறு குறிப்புரை யொன்று செய்துள்ளார்கள். இவ்வாறுசெய்யப்படும் குறிப்புரையே மாணவர்கள் தம்முயற்சியான் அறிவை விருத்தி செய்தற்காரணமாகும். இந்நூல் தமிழ்கற்கும் மாணுக்கரெல்லாம் பெற்றுப்படித்தற்குரியது.

திருக்கன்றுப்பூர்ப்புராணம்:—இது வடமொழியினின்று மொழிபெயர்த்துக் கத்திய ரூபமாக இயற்றப்பட்டது. இந்நூல் தானேற்பத்திப்படல முதலாக ஆறுபடலங்கொண்டுள்ளது. இதனை யியற்றினர் இச்சங்கச் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலைத் தலைமை யுபாத்தியாயரும் வித்வானுமாகிய பிரமஸ்ரீ திரு-நாராயணஐயங்காரவர்கள் மாணுக்கராகிய ஆலங்குடி மகா-ா-ா-ஸ்ரீ அ. கோபாலஐயரவர்கள். இதன்கட் சேர்க்கப்பட்ட 'முக்கிய விஷயக்குறிப்பு' இன்றியமையாதது. இத்தலம் சோழவளநாட்டில் காவிரி நதியின் தென்கரையில் திருவாரூருக்குத்தெற்கே ஆறுமைல் தூரத்திலுள்ளது. இத்தலத்திற்குத் திருநாவுக்கரசுநாயனர் அருளிய தேவாரமும் இந்நூலோடு சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்நூல் எளிய இனிய நடையால் ஆண் பெண் இருபாலாரும் படித்தற்குரியதாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதுபோலவே மற்றைப்புராணங்களும் வசன ரூபமாகச்செய்யப்பட்டால் எல்லார்க்கும் உபயோகமாயிருக்கும்.

பத்திராசிரியர்.

## உபயைகதேசவிருத்தி.

ரு. உபயைக தேசவிருத்தியாவது, சபக்கவிபக்கங்களிரண்டிலும் ஏகதேசத்துள்ளதொரு பொருளை ஏதுவாகக் கூறுவது. உதாரணம்.—"காக்கை பறவை, கருநிற முடைமையால்." என்பதாம். இதனுட் கருநிறமுடைமை ஏதுப்பொருள். அது, பறக்குந்தன்மையுடைய சபக்கமாகிய கொக்கு முதலிய பலவகைப் புள்ளினங்களுள் ஏகதேசமாயுள்ள கரிக்குருவி முதலியவற்றுள்ளும், பறக்குந்தன்மையில்லாது விபக்கமாகிய விலங்கு முதலியவற்றுள் ஏகதேசமாகிய யானை முதலியவற்றிலும் இருத்தலால் இஃது உபயைகதேசவிருத்தியாயிற்று. உபயம்-இரண்டு. அஃது இங்குச் சபக்கவிபக்கங்களைக் குறிப்பாலுணர்த்திற்று. மற்றும் இவ்வாறே "இவன் பார்ப்பான்: திருநீறணிதலால்." "முயல் வாலுடையது : காலுடையதாதலால்." என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாமெனவறிக.

சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி முதலிய மூன்றினும் ஏதுப்பொருள் துணிபொருளோடு சபக்கத்தினின்று துணிபொருளுணர்வையும், அதன் மறுதலையோடு விபக்கத்தினின்று மறுதலையுணர்வையும் நிகழச்செய்து, துணிபொருளில் ஐயப்பாட்டையுண்டாக்கலால் அவை ஏதுப்போலியாயின.

## விருத்தவியபிசாரி.

சு. விருத்தவியபிசாரியாவது, துணிபொருளின் மறுதலைப்பட்டபொருளைத்துணியும் விருத்தவேதுவுக்கும் இடங்கொடுக்கின்ற தன்மியிலுள்ளபொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:—"வௌவால் முட்டையுட் பிறப்பது : பறவையாதலால் : யாதுயாது பறவை அது அது முட்டையுட் பிறப்பது ; கிளிபோல." என்பதாம். இதனுள் பறவையாதல்-ஏதுப்பொருள். அது, தன்றுணிபொருளின் மறுதலைப்பொருளைத் துணியும் விருத்தவேதுவாகிய தோற்செவியுடைமைக்கும் இடங்கொடுக்கின்றதன்மியாகிய வௌவாலில் இருத்தலால், இது விருத்தவியபிசாரியாயிற்று.

இதனுள் தோற்செவியுடைமை விருத்த வேதுவாமாறு:—"வௌவால் முட்டையுட் பிறப்பதன்று; தோற்செவியுடைமையால்;

யாது யாது தோற்செவியுடையது அது அது முட்டையுட் பிறப்ப தன்று; எலிபோல." எனவரும். இங்கு எடுத்துக்கொண்ட விருத்த வியபிசாரியின் துணிபொருள் முட்டையுட் பிறத்தல்; அதற்கு மறுதலை முட்டையுட் பிறவாமை; அதனைத்துணியும் ஏதுத் தோற் செவியுடைமையாதலால், அத்தோற்செவியுடைமை விருத்தவேது வாயிற்று. அது பறவையாகிய வெளவாலில் இருத்தல் விருத்த வியபிசாரம்; அதனைப் பறவையாதலால் என்ற ஏதுப்பொருள் தன் றன்மியின் வாயிலாக உடைத்தாதலால், இது விருத்த வியபிசாரி யெனப்பட்டது.

மற்றும் இவ்வாறே "காற்று அழிவில்லது; அருவத்திரவியமாத லால்; யாது யாது அருவத்திரவியம் அது அது அழிவில்லது: ஆன்மாப்போல." என்பதில் அருவத் திரவியமாதலால் என்னும் ஏது விருத்தவியபிசாரியாம். இதற்கு விருத்தவேது வருமாறு:— "காற்று அழிவுடையது; பரிசமுடைமையால்; யாது யாது பரிச முடையது அது அது அழிவுடையது; குடம்போல." எனவரும். இதனுள் பரிசமுடைமை, அழிவின்மையின் மறுதலையாகிய அழி வுடைமையைத் துணிதலால் விருத்தமாயிற்று. அப்பரிசமுடைமை உருவப்பொருளின் கண்ணிற்றலேயன்றிஅருவப்பொருளாகிய வாயு வினும் நிற்றல் வியபிசாரம். அதனை, அருவமாதல் என்னும் ஏதுப் பொருள் தன்றன்மியின் வாயிலாகப் பெற்றிருத்தல் கண்டுகொள்க.

இதனாற்றுணிபொருளுணர்வும் விருத்தத்தாற்றுணிபொருளி ன் மறுதலையுணர்வும் நிகழ்தலால் ஐயப்பாட்டிற்கு ஏதுவாதல்பற்றி இது ஏதுப்போலியாயிற்று.

இவ்வறுவகையநைகாந்திகங்களும் கூறியவாற்றால், விபக்கத்தி லில்லாது விருத்தவேதுப் பகையின்றிப் பக்க சபக்கங்களிரண்டினு முள்ள பொருளை யேதுவாகக் கூறவேண்டு மென்றதாயிற்று.

இனி விருத்தம் நான்கு வகைப்படும் அவற்றின் பெயரும் உதா ரணமும் பின் வரும் வரையறையுட் காண்க.

## விருத்தவேதுப்போலிவரையறை.

| எண். | பெயர். | உதாரணம். | | குறிப்பு. |
|---|---|---|---|---|
| | | பக்கம். | ஏது. | |
| க. | தன்மச்சொரூபவிபரீத சாதனம். | இப்பறவை காக்கை. | வெண்ணிறமுடைமையால். | ஒரு வெண்புறுவைப் பக்கப்பொருளாகச் சுட்டிக் கூறிய கூற்று. |
| உ. | தன்மவிசேடவிபரீத சாதனம். | காற்றுப் பூதப்பொருள். | பரிசமுடைமையால். | வெளிப்படை. |
| ங. | தன்மிச்சொரூபவிபரீத சாதனம். | அஃறிணை ஒன்றன்பாலன்று. | பலவின்பாலின் வேறுதலால். | ஷை |
| ச. | தன்மிவிசேடவிபரீத சாதனம். | மக்கள்பிராமணரல்லர். | பிராமணரின் வேறுதலால். | ஷை |

### தன்மச்சொரூபவிபரீத சாதனம்.

க. தன்மச்சொரூபவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட துணிபொருளை விபரீதமாகத் துணிதற்குரியபொருளை ஏதுவாகக் கூறுவது.

உதாரணம்:—(ஒரு வெண்புறுவைச் சுட்டி) "இப்பறவை காக்கை: வெண்ணிறமுடைமையால்." என்பதாம்.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் வெண்ணிறமுடைமை; அது, இங்கு எடுத்துக்கொண்ட துணிபொருளின் எதிர்மறைப்பொருளாகிய காக்கையின்மையைத்துணியத்தகுவதாதலால் இது தன்மச்சொரூபவிபரீத சாதனமாயிற்று.

இவ்வேது அவ்வெதிர்மறைப் பொருளைத்துணியுமாறு:—"இப்பறவை காக்கையன்று; வெண்ணிறமுடைமையால்; யாதுயாது வெண்ணிறமுடையது அது அது காக்கையன்று; கொக்குப்

போல." என அந்நுவயவியாத்தியும், "யாது யாது காக்கை அது அது வெண்ணிறமுடையதன்று; சகுனக்காக்கை போல." என வெதிரேகவியாத்தியும் உடையதாகி வரும்.

தன்மச்சொரூபம் - துணிபொருளின் வடிவு. விபரீதம் - மாறுபாடு. ஆகவே துணிபொருள் வடிவின் மாறுபாடு தன்மச்சொரூபவிபரீதமென்றவாறாயிற்று. துணிபொருள்வடிவின் மாறுபாடாவது அத்துணிபொருளிலதாதலேனும், அத்துணிபொருளின்றன்மை கெடுதலேனுமாம்.

ஆகவே, துணிபொருளிலதாதலேயேனும், துணிபொருளின்றன்மை கெடுதலேயேனும் துணிதற்குரிய ஏது தன்மச்சொரூப விபரீத சாதனமெனப்படும் எனவறிக.

எடுத்துக்கொண்ட உதாரணத்துள் தன்மச்சொரூபம்-காக்கையாதல்; அதன் விபரீதம்-காக்கையிலதாதல். அதனைத் துணிதற்குரிய ஏது வெண்ணிறமுடைமையாதலால் இது தன்மச்சொரூப விபரீதசாதனமெனப்பட்டதெனவறிக.

மற்றும் இவ்வாறே (புகையைச்சுட்டி) "இது ஆகாயம்; நிறமுடைமையால்." என்பதும், (பனிக்கட்டியைச் சுட்டி) "இது நெருப்பு; தட்பமுடைமையால்." என்பதும், இவைபோல்வனவும் இவ்வேதுப்போலியாம்.

இது சபக்கத்திலில்லாது பக்கத்திலும் விபக்கத்திலும் நின்று எடுத்துக்கொண்ட துணிபொருளின் மாறுபாட்டைத் துணிந்து துணிபொருளுணர்வை யொழித்தலால் ஏதுப்போலியாயிற்று.

## தன்மவிசேடவிபரீதசாதனம்.

உ. தன்மவிசேடவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட துணிபொருட் பொதுமையைப் பக்கத்திற்றுணிதற்குரியதாயினும், அத்துணிபொருள் விசேடத்தின் எதிர்மறைப்பொருளையும் அப்பக்கத்திற்றுணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம் "காற்றுப் பூதப்பொருள்; பரிசமுடைமையால்." என்பதாம்.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் பரிசமுடைமை; அது, "யாது யாது பரிசமுடையது அது அது பூதப்பொருள்; பிருதிவி முதலியனபோல." என அந்நுவயவியாத்தியுடையதாகியும், "யாது யாது பூதப்பொருளன்று" அது அது பரிசமுடையதன்று; கால முதலியனபோல என வெதிரேகவியாத்தியுடையதாகியும் எடுத்துக் கொண்ட துணிபொருட்பொதுமையாகிய பூதப் பொருளாதலைத் தன்மியாகிய வாயுவின்கட் டுணிதற்குரியதாயினும் அதன் தன்ம விசேடமாயுள்ள உருவமில் பூதமாதலைக்கெடுத்து அவ்வாயுவை உரு வமுடைய பூதமாகத் துணிதற்கும் உரியதாதலால் இது தன்ம விசேட விபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் தன்மவிசேடவிபரீதம் துணியுமாறு "பூதவிசேடமா கிய வாயு உருவமில்பூதமன்று: (உருவமுடைய பூதம்) பரிசமுடை மையால்; யாது யாது பரிசமுடையது அது அது உருவமில்பூதம ன்று; (உருவமுடைய பூதம்) பிருதிவிபோல". என அந்நுவயவியாத் தியும், "யாதுயாது உருவமில்பூதம் அதுஅது பரிசமுடையதன்று: ஆகாயம்போல." என வெதிரேகவியாத்தியும் உடையதாகிவரும்.

இவ்வாறு இது தன்றன்மவிசேடமாகிய உருவமில்பூதத்தை உருவமுடையபூதமாகத் துணிந்து விபரீதப்படுத்தலால் தன்மவி சேட விபரீதசாதனமெனப்பட்டது.

மற்றும் இவ்வாறே "ஆனினம் மிருகம், கொம்புடைமையால்" என்பதும் இவ்வேதுப்போலியாம். இதனுள் ஏதுப்பொருள்-கொம் புடைமை: அது, ஆனினத்தை மிருகமாகத் துணிதற்குரியதாயி னும் தன்ம (மிருக) விசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை அலைதாடியில்லதெனச் சாதித்து விபரீதப்படுத்தலாலெனவறிக.

அங்ஙனமாமாறு;—"ஆனினம் மிருகம்; கொம்புடைமையால்; யாது யாது கொம்புடையது அது அது மிருகம்." எருமைபோல; என அந்நுவயமும், "யாது யாது மிருகமன்று அது அது கொம்பு டையதன்று: பறவைபோல" என வெதிரேகமும் உடையதாகித் துணிபொருளைச் சாதித்துத் தன்மவிசேடமாகிய அலைதாடியுடைய மிருகத்தை, "ஆனினம் அலைதாடியுடையதன்று: கொம்புடைமை

யால்; யாது யாது கொம்புடையது அது அது அலைதாடியுடையத ன்று;எருமைபோல. "எனவிபரீதப்படுத்தல்காண்க. இன்னும்இவை போலுள்ளனவெல்லாம் நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்துகொள்க.

இவ்வேதுப்போலி தன்மவிசேடம் மாறுபாடடையப் பொய்க் கரியானமையால் தன்மச்சொரூபத் துணிபொருட்பேற்றினும் பிர மாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனால் தன்றுணிபொருள் விசேடத்தையுள்ளவாறன்றி மாறு பாடாகத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்துணி பொருளின் பொதுமையினையும் துணிதல் கூடாதென்பது பெறப் பட்டது.

## தன்மிச்சொரூபவிபரீதசாதனம்.

௯. தன்மிச்சொரூபவிபரீத சாதனமாவது, எடுத்துக்கொண்ட தன்மிவிபரீதமடையத்துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:--அஃறிணை ஒன்றன்பாலன்று: பலவின்பாலின்வே றுதலால் என்பதாம். இதனுள் அஃறிணை என்பது தன்மி அதனது சொரூபம் ஒன்றன்பாலும் பலவின்பாலுமாகியிருத்தல் (அஃறிணை யாதல்) அதனை 'ஒன்றன்பாலன்று' என்னும் பக்கவிசேடணத்து டன்கூடியுள்ள 'பலவின்பாலின் வேறுதல்' என்னும் ஏதுப்பொருள் பலர்பாலில் நின்று உயர்திணையாக்கி விபரீதப்படுத்தலால் இது தன் மிச்சொரூப விபரீதசாதனமாயிற்று.

இது தன்றன்மியை உயர்திணையாக்கி விபரீதப்படுத்துமாறு:— "எடுத்துக்கொண்ட இத்தன்மி அஃறிணையன்று; (உயர்திணை.) ஒன் றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேறுதலால்; யாது யாது ஒன் றன்பாலுமின்றிப் பலவின்பாலினும் வேறு அது அது அஃறிணைய ன்று." (உயர்திணை.) என அந்நுவயவியாத்தியுடையதாகியும், "யாது யாது உயர்திணையன்று (அஃறிணை) அது அது ஒன்றன்பாலுமின் றிப்பலவின்பாலினும்வேறுதல் இன்று; (ஒன்றன்பாலேனும் பல வின்பாலேனு மாம்.) வான்பிறையும், உடுக்களும்போல" எனவெதி ரேகவியாத்தியுடையதாகியும் வரும்.

மற்றும் இவ்வாறே "மக்கள் ஆணல்லர், பெண்ணின் வேறுத லால், அலிபோல" என்றற்றொடக்கத்தன வெல்லாம் இவ்வேதுப் போலியெனவறிக.

இது துணிபொருளுக்கிடனுகிய தன்மியை இல்லதாக்கி நிற்ற லால், துணிபொருளுக்கு இடமில்லாமையால், துணிபொருளுணர் வையுண்டாக்காது ஏதுப்போலியாயிற்று.

இலனல் ஒருதன்மியை மாறுபடத்துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மியிற் பிறிதொரு பொருளையும் துணி தல் கூடாதென்பது பெறப்பட்டது.

## தன்மிவிசேடவிபரீதசாதனம்.

ச. தன்மிவிசேட விபரீதசாதனமாவது எடுத்துக்கொண்ட துணிபொருளைத் துணிதற் குரியதாயினும், தன்றுணிபொருளின் பற்றுக கோடாகிய தன்மியின் விசேடத்தை மாறுபாடாகத் துணி தற்குரியபொருளை ஏதுவாகக்கூறுவது.

உதாரணம்:—"மக்கட்டொகுதி பிராமணரன்று; பிரமணத்த ன்மையின்மையால்" என்பதாம்.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருளாகிய பிராமணத்தன்மை யின்மையானது பக்கசபக்கங்களில் நின்று விபக்கத்தின்றி மக்களைப் பிரமணரல்லரெனத் துணியப்புகுந்து மக்கள்விசேடமாகிய பிராம ணர் முதலானேரையும் அவ்வவ்வருணத்தரல்லரெனச் சாதித்தலால் இது தன்மிவிசேடவிபரீதசாதனமாயிற்று.

அங்ஙனம் துணியுமாறு:—மக்கள் தொகுதி பிராமணரன்று: பிராமணத்தன்மையின்மையால்: யாது யாது பிராமணத்தன்மை யில்லது அது அது பிராமணரன்று "விலங்குபோல." என அந்வய வியாத்தியும், யார் யார் பிராமணர் அவரவர் பிராமணத்தன்மையு டையர் : கௌசிகர் போல. "என வெதிரேகவியாத்தியு முடையதாகி மக்களைப் பிராமணரல்லரெனத் துணியும். இவ்வாறு துணியவே மக் கள் விசேடமாகிய பிராமணரும் பிராமணரல்லரென்பது பெறப்படு

வதுமன்றி வைசியர் முதலாயினோரையும் தனித்தனி அவ்வவ்வருணத்தரல்லரெனத் துணிதற்குரியதாகின்றது.

அஃதாமாறு:—"நான்காம் வருணத்தர் சூத்திரரல்லர் பிராமணத்தன்மையின்மையால்; யார் யார் பிராமணத்தன்மைல்லாதவர் அவர் அவர் சூத்திரரல்லர்." க்ஷத்திரியர்போல எனவரும்.

மற்றும் இவ்வாறே "பூதப்பொருள் பிருதிவியன்று; பிருதிவித்தன்மையினமையால்; யாது யாது பிருதிவித்தன்மையில்லது அது அது பிருதிவியன்று; அப்புப்போல." எனவும், "மிருகம் குதிரையன்று: குதிரைத்தன்மை யின்மையால்: யாது யாது குதிரைத்தன்மையில்லது அது அது குதிரையன்று; ஆடுபோல." எனவும், இன்னும் இவைபோல் வருவனவும் இவ்வேதுப்போலி யென வறிக.

சிறப்புப்பொருளில் பொதுத்தன்மையுண்டு; பொதுப்பொருளிற் சிறப்புத்தன்மையில்லை என்பது தருக்கநூல்வழக்கு. இதனுல் மக்களிடத்துப் பிராமணத்தன்மை யில்லை, பிராமணரிடத்து மக்கட்டன்மை உண்டு என்பது கருத்து. மக்களெல்லாம் பிராமணரல்லர், பிராமணரெல்லாம் மக்களே என்னும் உலகவழக்கும் நோக்குக.

இவ்வேதுத் தன்மிவிசேடம் மாறுபாடடையப் பொய்க்கரியானமையால், தன்மச்சொரூபத்துணிபொருட் பேற்றினும் பிரமாணமாகாது ஏதுப்போலியாயிற்று.

இதனுல் ஒரு தன்மிவிசேடத்தையுள்ளவாறன்றி மாறுபடத் துணிதற்குரிய பொருளை ஏதுவாகக்கொண்டு அத்தன்மிப் பொதுமையிற் பிறிதொரு பொருளும் துணிதல் கூடாதென்பது பெறப்பட்டது.

சுட்ட எலும்புகள், மனுஷர் முதலான பிராணிகளின் மலமூத்திராதிகள், மீன், பிண்ணாக்கு, எருமுட்டை, சாம்பல், கோழி, புரு, வெளவால் முதலாய பக்ஷிகளின் மலாதிகள், மீன்களை உண்ணும் குவானோ என்னும் பக்ஷிகளின் மலம் முதலானவைகளில் இந்த பிரகாச தாமில (பாஸ்கர) சத்துக்கள் இருக்கின்றன. இவைகளில் எதையாவது ஒன்றைத் தக்கபடி உபயோகப்படுத்தலாம்.

## (மரச்சாம்பல் உப்பு) போட்டாஷ் எரு—Potash.

இந்தப் போட்டாஷ்சத்து நிலத்தில் மற்ற சத்துக்களைப்பார்க்கிலும் மிகுதியாகவே இருக்கின்றது: ஆனாலும், இந்த சத்தை அதிகமாக உபயோகப்படுத்தவேண்டுமாயின், மரத்தின் இளங்கிளைகளை சுட்டசாம்பலிலும், எருமுட்டைச்சாம்பலிலும், வெடியுப்பிலும், சோளக்கட்டை, கடற்பாசி, முந்திரிச்செடி, கத்திரிமார், புகையிலைக்காம்பு, மிளகாய்மார், துவரங்குச்சி, மணத்தக்காளி, ஊமத்தஞ்செடி, சப்பாத்துக்கள்ளி, கொட்டாங்குச்சிச்சாம்பல்களிலும் எதேஷ்டமாக இருப்பதனால், இவைகளை தாராளமாக உபயோகப்படுத்தலாம். இந்த எரு விசேஷமாக செடிகளுக்குப் பலத்தைக் கொடுக்கின்றது. உருளைக்கிழங்கு, திராக்ஷை முதலான பழவர்க்கங்களுக்கு ஒரு எக்கர் நிலத்தில் 600 முதல் 700 படிவரையிற் கலக்கலாம். இவைகளே விசேஷ எருக்களாம்.

இந்த இருவகுப்பு எருக்களிலும் தாது (Mineral manure) எரு என்றும், கந்தமூல (Vegetable manure) எரு என்றும், பிராணசத்து (Animal manure) எரு என்றும் பின்னும் மூன்று விதங்களாக வகுத்திருக்கின்றனர்.

### (1) தாது எரு.—Mineral manure.

தாது எரு எது என்றால்—குளத்தின் மண், பலவகையான சாம்பல், உப்பு, பொட்டிலுப்பு, சுண்ணாம்பு முதலான பொருள்களாம்.

### (2) கந்தமூல எரு—Vegetable manure.

கந்தமூல எரு எது என்றால்—பச்சை இலைகள், பற்பலவிதமானபிண்ணாக்கு வகைகளாம்.

## (3) பிராணசத்து எரு—Animal manure.

பிராணசத்து எரு எது என்றால்—ஆடு மாடுகளின் தொழு எருவும், ஆடு மாடுகளைக் கொல்லுமிடங்களில் விழும் இரத்தம், தோல், மயிர், குளம்பு, கொம்பு, தசை, எலும்பு, சாணம் முதலியவைகளுமாம். இவற்றில் கந்தமூல எருக்கலந்தால், இரண்டும் சேர்ந்து ஒருவித பழுப்புக்கலந்த கருத்த எருவாகும்: இக்கலப்புஎரு இந்நாட்டு நிலங்களில் ஈரம் தங்கும்படி செய்வதற்கு முதல்தரமான எருவாக இருப்பதன்றி, பயிர் பூண்டுகளிற் சாம்பற்சத்தை அதிகமாக விருத்தியாக்கும்.

## எருவின் பெயர்களும் பிரயோஜனங்களும்.
## Manures and their Uses.

இனி நமது நிலத்துக்கு உதவும் சில விசேஷ எருக்களின் பெயர்களையும், அவற்றை உபயோகப்படுத்துவதால் உண்டாகும் பிரயோஜனங்களையும்பற்றிச் சற்று விசாரிப்போம்.

### வெடியுப்பு—Saltpetre.

இந்த எரு அதிககாரமானது. அதிக ஜாக்கிரதையாக உபயோகப்படுத்தவேண்டும். வெடியுப்புக்கு வாயிலிருக்கும் ஈரத்தை கிரகிக்கும் சத்தியதிகமாயிருப்பதால், வெகுஜாக்கிரதையாக மூடிப்பாதுகாக்கவேண்டும். காய்கறிகளை விளைவிக்கும் நிலமானால் ஒரு ஏக்கராவுக்கு 500 இராத்தல் போதும். இதைத் தனியாக உபயோகப்படுத்தாமல் நாலு பங்கு சாம்பல் அல்லது மணலிற் கலந்து பயிரின் மேல் தூவலாம். பயிர்கள் நோயால் வாடியிருக்கும் சமயத்தில் இந்த எரு வாட்டத்தைநீக்கி வளப்பத்தைத்தரும். இஃது அதிக சீக்கிரத்தில் விளையவேண்டிய பயிர்களுக்கும், முக்கியமாகக்கால்வாய்களால் தண்ணீர் பாய்ச்சும்நிலங்களுக்கும்ஏற்றஎரு. இந்தஎருவின்விலை அதிகமென்றுசிலகுடியானவர்கள் உபயோகப்படுத்தப்பயப்படுகிறார்கள். இந்தப்பொட்டிலுப்பு எருவை புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய் கத்தரி முதலான மர உப்புசத்தை விரும்பும் உயர்தரப்பயிர்களுக்குப் போட்டால் எருவின் விலைக்கு மும்மடங்கு இலாபங்கிடைக்கும். கோதுமை பயிரிடும் ஒரு ஏக்கர் நிலத்துக்கு 100-முதல் 200-இராத்

தல் வரையில் சாதாரண உப்போடு கலந்து தூவினுல் நல்ல விளைவு உண்டாம். இது பயிருணவுக்கு வேண்டிய சுரோகாரவாயு மர உப்பு முதலானவற்றிற்கு மாதுருஸ்தானமானது.

## அதிபிரகாசித லவணம்—Superphosphate.

வெடியுப்பில் உப்புசத்தும் பொட்டாஷ்சத்தும் மாத்திரமுண்டு; ஆகவே, அஃதுடன் சூபர்பாஸ்போடாப் லைம் என்னும் அதிக பிர காசிதலவணத்தையும் சேர்த்தால்,--அஃதாவது மூன்றுபாகம்எலும் புச்சாம்பலும், ஒருபாகம் கந்தகசத்தும் சேர்த்து அதற்குச்சரியான ஜலத்திற் கலக்கி மரத்தொட்டிகளில் வைத்து உபயோகப்படுத் தினுல்—பயிர்களுக்கு மெத்த நன்மையைச்செய்யும்.

## உப்பு எரு—Salt.

நமது கடைகளில் விற்கும் கறியுப்பு சமுத்திரக்கரைகளுக்குத் தூரத்திலிருக்கும் நிலங்களுக்கு முதற்றரமான எரு. உப்பு வரியால் நொந்திருக்கும் குடியானவன் இதை இக்காலத்தில் உபயோகப்படுத் துவது கஷ்ட சாத்தியம். இது தென்னைக்கும் கேழ்விறகுக்கும் நல்ல உணவு.

## நாற்றமற்ற எரு—Manure without smell.

வீடுவாசலுக்கருகிற் செய்யும் பயிர்களுக்கு நாற்றந்தரும் எரு விட அநேகர் அருவருப்படைவார்கள்; ஆகவே, ஒருபாகம் வெடியுப் பும், இரண்டுபாகம் சூபர்பாஸ்போடாப்லைம் அஃதாவது எலும்புச் சாம்பலும், ஒருபாகம் கந்தக சத்தும் சேர்த்து உபயோகப்படுத்தி னுல் எவ்வித நாற்றமுமுண்டாகாது.

## பக்ஷிகளின் எரு—Birds manure.

குவானே, கோழி, புறு முதலான பக்ஷிகளின் புழுக்கைகள் முதற்றரமான எருக்கள். பக்ஷிகளுக்கு மலம் தவிர மூத்திரம் கழிக் கும் வரமில்லையாகையால், மூத்திரத்தில் இறங்கும் உப்புக்காரசத் துக்கள் பக்ஷிகளின் மலத்திலேயே கலந்திருக்கின்றன; ஆகவே இந்த அருமையான எருவைத் தக்கபடி பாதுகாத்து உபயோகப்படுத்

தினல் மிக்க பலனையடையலாம். இந்த எருவையிடும் பயிர்களுக்கு எதேஷ்டமாக ஜலம் விடவேண்டும். இது தானியப்பயிர்க்கும், பழந்தரும் மரங்களுக்கும், காய்கறி, கீரை, புஷ்பச்செடிகளுக்கும் கொண்டாட்டமான எரு.

## புட்ரெட் என்னும் மனிதர்மலஎரு.

## Poudrette manure.

மனிதர்கள் விசேஷமாக நடமாடாத காட்டுமேடுகளில் நீரோட்டமில்லாதவிடத்துக்குழிகளை வெட்டி, அக்குழிகளில் அன்றன்று சேரும் மனிதர் மலத்தைக் கொட்டி, அதற்கு இரண்டில் ஒருபாகம் மண்ணைப் போட்டு மூடிவிட்டு ஒன்பது மாதங்களான பிறகு வெட்டிப்பார்த்தால், அது மண்ணோடுகலந்து மண்ணுகமாறி மேன்மையான எருவாகும். இந்த எருவில் ஒரு மண்வெட்டி அளவு எடுத்து முட்டைகோஸ், காலிப்ளவர் முதலாய காய்கறிச்செடிகளுக்குப் போட்டால், அப்போது அதன்பெருமை விளக்கமாகும். சிலவிடங்களில் மனிதர் மலத்துக்குச் சமபாகமாக அடுப்புச்சாம்பலைக் கலந்து சூர்ணமாக்கி உபயோகப்படுத்துவதுமுண்டு. இப்படிச் செய்வதில் மலத்தின் நாற்றம் நீங்கி முதல்தரமான எருவாகின்றது. பயிர்களை மதாளிக்கச்செய்ய இது சிரேஷ்டமான எரு. எல்லாப்பயிரும் முதலில் மதாளித்து வந்தால்தான் பிறகு பலனை நன்றுகத்தரும்.

## மனிதர் மூத்திரம்—Urine.

மனுஷருடைய மூத்திரத்தை ஜாடிகளிற் பிடித்து அதன் அளவுக்குத்தக்க மண்ணைச்சேர்த்து, அதிக ஜலத்தால் சீக்கிரம் வளரவேண்டிய முட்டைகோஸ் முதலான கீரையினங்களுக்கு உபயோகப்படுத்தினல் நல்ல பலனைத்தரும். சீன ஜப்பான் தேசத்தார் இந்த மனுஷருடைய மல மூத்திராதிகளைத் தங்கம்போலப்பாதுகாத்துப் போட்டுப் பலனடைகிறார்கள், மைசூரிலும் மலஎரு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

## சாம்பல்—Ashes.

எருமுட்டை முதலானவற்றைச் சுடுவதனுலுண்டாகும் சாம்பல், செங்கற் சூளை, ஓட்டுச்சூளைச்சாம்பல், உமிச்சாம்பல், கரும்புச்

சக்கைச்சாம்பல், தென்னோலை, பனையோலைசுட்டசாம்பல் இவை முதல்தரமான எருவாகும். தானியப்பயிர்களுக்கும், மிளகாய்ச்செடிகளுக்கும், கனிதரும் செடிகளுக்கும், புஷ்பிக்கும் காலத்தில் இடுவது நலம். இதை கெட்டியும் களிமட்பாங்கும் பிசுபிசுப்புமான நிலங்களுக்கும், நீரற்றுப்போகாமல் நீர் நிலையாகநிற்கும் நிலங்களுக்கும் அதிகமாக உபயோகப்படுத்தலாம்.

## சுண்ணாம்பு (இங்கலாமில லவணம்)
## Carbonate of Lime.

ஓடைக்கற்களைச் சுடுவதனாலும் கிளிஞ்சில் சுடுவதனாலுமுண்டாகும் சுண்ணாம்பு, மண்ணில் உள்ள இந்திர வஸ்துக்களுக்கும், நிலத்திற் செயலற்றிருக்கும் தாதுப்பொருள்களுக்கும், ஊக்கத்தையுண்டாக்கிப்பயிர்களுக்கு உணவுகிடைக்க வழியடைவிக்கும். இதைத் தூளாகவும் ஜலரூபமாகவும் உபபோகப்படுத்தலாம். இதை நிலத்துக்கு உபயோகிக்க சிறிதுகாலமானபிறகு காற்றுடவைத்து காரங் குறைந்தபிறகு எருவாக உபயோகப்படுத்தினால் கொள்ளு முதலிய கோதுப்பயிர்களுக்கு விசேஷஎருவாம். சுண்ணாம்பு குறைந்திருக்கும் நிலங்களில் மேற்கண்டபயிர் போதையாகி காய்ப்புக் குறைந்து போம். கரும்பு, நிலக்கடலை, நீலி முதலிய பயிர்கள் கொண்டாட்டமாக விளையும். கெட்டியும் பிசுபிசுப்புமான ஒரு ஏக்கர் நிலத்துக்கு 500-முதல் 1000-பெரியபடி சுண்ணாம்புத்தூளைப் பரப்பி உழுது பயிரிடலாம்.

## மாட்டெரு—Bullock Dung.

இது தக்கபடி அஃதாவது மூக்குத்தூளைப் போலானபிறகு, இதன்காரம் போகவிடாமற் காப்பாற்றினால் எல்லாப்பயிர்களுக்கும்-முக்கியமாக மிக நுட்பமான பயிர்களுக்கும்-தக்க எரு. புதுச்சாணியை தண்ணீரிற் கரைத்து எருவாக உபயோகிப்பதுமுண்டு.

இப்படிச் செய்வதில் ராகிமுதலான பயிர்களும் ரோஜா முதலான பயிர்களும் செழிக்கின்றன. ஆபினும் "மாட்டெரு மறுவருஷம்" என்றபடி நாள் சென்றபிறகு உபயோகிப்பது நலம்.

இந்த மாட்டு எருவில் இளங்கன்றுகளுடையவும், சினைமாடு, பால்கொடுக்கும் பசுக்களினுடையவுமான எருவைப்பார்க்கிலும்; முதிர்ந்த வயதுடைய மாடுகளின் சாணம் சிரேஷ்டமான எருவாகும்.

## ஆட்டு எரு—Sheep or Goat Dung

இது மிகவும் காரமான எரு. ஒரு எக்கர் நிலத்துக்கு 2000-ஆடுகளை ஒரு ராத்திரி கிடையடைத்தால் போதுமான எருவாகும். உடனேபலனைத்தரும். ஆனதுபற்றியே "ஆட்டுஎரு அந்தப்போகம்" என்று சொன்னார்கள். இதை ஜலத்தில் கரைத்து உபயோகித்தால் மெத்த நன்மையைச்செய்யும். பாத்திரங்களிற் பயிர் செய்யும் புஷ்பம் முதலாய செடிகளுக்குப் புழுக்கைகளாக மேலே போட்டுவைத்தால் அவற்றின் காரம் நாளடைவில் செடியின் கீழேயிறங்கும். பயிரைக்கெடுக்காது, கரும்பு கொடிக்கால் முதலானவற்றுக்குப்பக்குவமாக உபயோகப்படுத்தினுற் பலனை அதிகமுண்டாக்கும்.

## குதிரை எரு—Horse Dung.

இஃது உஷ்ணமான எரு. இந்த எரு இடும் பயிருக்கு ஜலம் அதிகமாக வேண்டும்; இல்லாவிடிற் பயிர் தீய்ந்து போம். இதை மற்றக்குப்பைமுதலிய எருக்களோடு கலந்து குழியிற் போட்டு ஈரமாக்கி உபயோகபடுத்தினுல் முதற்றரமான எருவாகும். இதை பஹிரங்கமாகக் குவித்துவைத்தால் இதன்சத்துக்கள் பறந்துபோம். குழியிற்போட்டு அழுகினபிறகு உபயோகப்படுத்தின் மிக்க நன்மையைச் செய்யும்.

## பயிர் இலை எரு—Leaf mould.

நிலங்களிற் பட்டு உதிரும் இலைகளையெல்லாம் கூட்டிப் பெருக்கிக் குழிகளில் இட்டு ஜலம் விட்டு மக்கவைத்து, ஆறுமாதமான பிறகு எடுத்து அதன் காற்பாகத்துக்கு மணலைச்சேர்த்து எருவாக உபயோகித்தால், அதிக நட்பப் பயிர்கள் தழைத்தோங்கும். இந்த எரு ஈரத்தைக்காக்கும் சக்தியுடையது. இந்நாட்டில் பல்லாரி, ஹாஸ்பேட்டை முதலானவிடங்களில் சிலர் அவிரி, கொள்ளுச்செடிகள் வளர்ந்து பூப்பிடிக்கும்போது மண்ணேடு சேர உழுதுவருவது

முண்டு; அப்படிச்செய்வதனுல் மணற்பாங்கு நிலம் இயல்புமாறி திருந்தும். பூமியை உலறவிடாமல் வாயுவிலிருந்து அதிக ஈரத்தை வாங்கிச்சேர்க்கும். இந்திரவஸ்துக்களை யதிகம் சேர்த்து நிலத்தை வளமாக்கும்.

## காய்ந்த எரு—Dry manures.

நிலத்தில் சிந்திக்கிடக்கும் செத்தை குப்பை விறகு குச்சி முதலியவற்றைப்பொறுக்கி குழிகளிற் போட்டாலும், அல்லது பூமியோடுசேர்த்து உழுது விட்டாலும் அவைகள் நாளடைவில் மக்கி அந்நிலத்துக்கு நலந்தரும்.

## பச்சை எரு—Green manure.

அவிரி, எருக்கு, புன்கு, வேம்பு, பூவரசு, பிரண்டை, நொச்சி, பனையோலை, வாதநாராயண இலை முதலான பூண்டுகளை நிலங்களில் போட்டு நீர்விட்டு மிதித்து மக்கச்செய்வதில் நல்ல பலன்கிடைப்பதன்றியும், நிலத்தில் நிற்குமரம் செடி பூண்டுகளை வெட்டிக் குப்பைகளைக் குழிகளில் சேர்த்துவைத்துக் கல்லாங்காட்டுப் பூமிகளுக்கு உபயோகப்படுத்தலாம். சப்பாத்துக்கள்ளியும் இந்தப்பச்சைஎருவினத்தைச்சார்ந்தது. இந்த முட்பூண்டை வெட்டியெடுத்துப் பூமியில் ஆறு அங்குல ஆழத்திற் புதைத்து மேலே மண்ணைப்போட்டு மூடிவிட்டால், கூடிய சீக்கிரத்தில் அழுகி நல்ல எருவாகிவிடும். தென்னை வாழை முதலான மரங்களின் குழிகளுக்கு இந்தச் சப்பாத்துக்கள்ளியை வெட்டி நறுக்கிக்கசக்கிப்போட்டால் முதல்தரமான எருவாகும். வேர்களுக்கு ஈரத்தைக்கொடுத்து ஸ்பஞ்சைப்போல பாதுகாக்கும். இதன் அருமை இத்தேசத்துக்குடியானவர்கள் தெரியார்கள்போலும். மதனபல்லி, புங்கனூர் முதலானவிடங்களில் புன்க இலையையும் சிறுகிளைகளையும் நெல்லுக்கும் புன்கம் (உதிர்ந்த) பூவை கரும்புக்கும் எருவிட்டு வருகிறார்கள்.

## ஜல எரு—Liquid manure.

ஆடுமாடுகளின் சாணத்தையும், குதிரை லத்திகளையும், ஜலத்திற் கரைத்து மழைகாலத்தில் விளையும் பயிர்களுக்கு உபயோகப்படுத்தினுல் கொண்டாட்டமாக விளையும்.

## வண்டல் எரு—Tank mud.

குளங்களிலும், கிணறுகளிலும் சேரும் வண்டல் மண்ணும் மணற்பாங்கான நிலத்தைத்திருத்த நல்ல எருவாகும்.

## மரப்பொடி—Saw Dust.

மரங்களை அறுக்கும்போது விழும் மரத்தூள்களும் முதற்றரமான எரு. இதை ஈரக்கடிப்பான பூமிகளுக்கும், காய்கறிச்செடிகளுக்கும் உபயோகப்படுத்தினல் மெத்த நன்மையைச்செய்யும்.

## அடுப்புக்கரித்தூள்—Charcoal Dust.

இதை மற்ற எருக்களோடு கலந்தால் அதிலிருக்கும் அமோனியம் என்னும் அமிலத்தை அப்புறப்படுத்தாமல் பாதுகாத்துப்பயிர்களுக்கு நன்மையைச்செய்யும்.

## பிராணிகளின் ஒதுக்கு எரு—The animal Refuse.

மிருகங்களின் பழைய தோல், மயிர், கொம்பு, எலும்பு, நகம் முதலானவைகளும் முதல்தரமான எரு. இவைகளைத்தக்கபடி சேகரித்து மக்கவைத்து உபயோகப்படுத்தலாம்.

## பிண்ணாக்கு எரு–Oil Cakes.

கொட்டைமுத்து, இலுப்பை, எள், நிலக்கடலை, வேம்பு, புன்கு, தெங்கு முதலான பிண்ணாக்குகளும் முதற்றரமான எருவாகும். கொட்டைமுத்து (Bassia nut) பிண்ணாக்கை எருவாகவும், தென்னை எள், நிலக்கடலை பிண்ணாக்குகளை மாடுகளின் தீவனமாக முதலில் உபயோகப்படுத்தி அவற்றின் சாணத்தை எருவாகவும் உபயோகப்படுத்தலாம். கொட்டைமுத்து பழைய பிண்ணாக்குகளைப் பொடித்து ஒரு ஏக்கர் நிலத்தை முன்னுடியாக உழுது 500-முதல் 1000-இராத்தல் பொடியைத்தூவி உழுதுவிட்டால் நலம் செய்யும். எரு உபயோகப்படுத்தும் எந்தப் பிண்ணாக்கிலும், எண்ணெய் பாகம் கொஞ்சமாகவிருந்தால் சிக்கிரத்தில் நலந்தரும்.

உ

கடவுள்துணை.

கணிமேதாவியார்

அருளிச்செய்த

# திணைமாலை நூற்றைம்பது

மூலமும் உரையும்.

## க.—குறிஞ்சி.

க *நறைபடர் சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு.

என்றது தலைமகளுந் தோழியும் ஒருங்கிருந்தவழிச் சென்று தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது.

இதன் பொருள். நறைக்கொடி படர்ந்துயர்ந்த சந்தனங்களை அற வெட்டி நல்லநாளால் மழை பெய்யுங் காலத்தையேற்றுக்கொண்டு வித்தி முதிர்ந்த ஏனலின்கட், பிறையை யேற்றுக்கொண்டதொரு தாமரை மலரைப்போலும் வாண்முகத்தையும் தாழ்ந்தகுழலையுமுடையீர்! கண்டிலீரோ? ஏவுண்டமரை போந்தனவற்றை இவ்விடத்து என்றவாறு. (க)

உ †சுள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
யள்ளி யளகத்தின் மேலாய்ந்து—தெள்ளி

* 'நறைபரந்த சாந்தம்' எனவும் பாடம். "இது மதியுடம்படுத்தது; இது முதற்பொருளின்றி வந்த குறிஞ்சி" எனவுரைத்து, (தொல், பொ, அகத், ரு) இதனை "ஊரும் பெயருங் கெடுதியும் பிறவு, நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித், தோழியைக் குறையுறும் பகுதியும்" (தொல், பொ, கள, கக) என்புழிக் கெடுதிவினயதற்கு உதாரணங்காட்டினர் நச்சினர்க்கினியர்.

† "இது களிற்றிடையுதவி கூறிற்று" எனவுரைத்து (தொல், பொ, கள, உரு) இதனை எதிீட்டிற்கு உதாரணங்காட்டி, "இதனுள் அளகத்தின் மேலாய்ந்து எனவே பூத்தந்தமை கூறினள்" என்றார் நச்சினர்க்கினியர். (ஷி, ஷி, பொரு, கரு) எதிீடு-ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டான் எனவும், பூத்தந்தான் தழைதந்தான் எனவும் இவைமுதலிய காரணமிட்டுணர்த்தல் என்பர்.

யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை
யுதணாற் கடிந்தா னுளன்.

எ-து தோழி சேவிலிக்கு அறத்தோடுநின்றது.

இ-ள். நறவமலரையுஞ் சுனைநீலமலரையும் அசோகமலரையும் கொய்துமுடித்து நின்மகள் குழலின்மேலே ஆராய்ந்து புனைவதுஞ்செய்து பின்னொருநாட்டணிந்து பரணாற் காவலமையாத ஈர்ங்கடா யானையை மொட்டம்பாற் கடிந்து காத்தும் இப்பெற்றி யுதவிசெய்தான் ஒருவனுளன் ; எ-று. (2)

ங ‡சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
சாந்த மெறிந்த விதண்மிசைச்—சாந்தங்
கமழக் கிளிகடியுங் கார்மயி லன்னா
ளிமிழக் கிளியெழா வார்த்து.

எ-து பகற்குறிக்கண் வந்த தலைமகனைக்கண்டு தோழி சேறிப்பறிவுறீஇயது.

இ-ள். சந்தனங்களை வெட்டியுழுத சாரலின்கண் வித்திய ஏனலின்கட்படிந்த கிளிகளைச், சந்தனங்களைக் காலாகஎறிந்து செய்த பரண்மிசையிருந்து பூசிய சாந்தம் எங்கும் பரந்துகமழ உலாவிக், கடிகின்ற கார்மயிலன்னாள் தான் வாய்திறந்து ஆயோ என்றியம்புதலாற் றம்மினமென்று கிளிகள் ஆர்த்துப்போகா; எ-று.

'சாந்தமறைத்தவிதண்' என்று பாடமோதிச் சந்தனத் தழையான் மறைத்த இதண் என்பாருமுளர். (ங)

ச $கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
யாடா வடகினுங் காணேன்போர்—வாடாக்
கருங்கொல்வேன் மன்னர் கலம்புக்க கொல்லோ
மருங்குல்கொம் பன்னாண் மயிர்.

எ-து தலைமகள் இற்செறிந்தகாலத்துப் புனத்தின்கண்வந்த தலைமகன் றலைமகளைக் காணாது ஆற்றாதுபெயர்கின்றான் சொல்லியது.

---

‡ 'இது பிறரைக் காத்தற்கு இடுவரெனச் சேறிப்பறிவுறீஇயது' என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொ, களவு, உங.)

$ இதனைப்'பரிவுற்றுமெலியினும்' என்பதற்குதாரணங் காட்டினார் நச்சினார்க்கினியர். (ஷை, ஷை, ஷை; கஉ)

இ-ள். கோடாத புகழையுடைய மாறன் மதுரையனையாளை அடாத பண்ணையுளுங் காண்கின்றிலேன்; போரின்கண் வாடாத கருங்கொற்றொழிலையுடைய வேல்மன்னர் அணிகலமாகிய முடிகூடினகொல்லோ! இடையாற் கொம்பையனையாள் மயிர்கள்; எ-று.

ஆடாவடகு என்று விளையாட்டிற்கு வெளிப்படைநிலை யென்னும் அலங்காரத்தாற் பெயராயிற்று. அடா என்பதனை ஆடா என்று நீட்டியது. மன்னர்கலம் என்பது மன்னரணியும் மணிமுடியாதலான் முடியின் பெயராற் கூந்தற்குச் சேர்த்தி முடிகூடிற்றுக் கொல்லோ என்றதாகக்கொள்க. (ச)

ரு. வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
*பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் †மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்.‡

எ-து தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழிசெறிப்பறிவுறீஇயது.

இ-ள். கெடாத பனை யென்னு மளவுபோன்ற அளவினையுடைய இன்பவிளைவினை நாமெண்ணியிருப்ப அதற்கிடையூறாக, நல்வினை விளையச் செல்வம் விளைவது போலப் பாத்தியின்கட் டினைவிளைதலான், மையார் தடங்கண்மயிலன்னாய்! தினைகொய்ய நாட்சொல்லி வேங்கையார் நம்மை இங்குநின்றும் பிரிவித்தலைப் பாராய்; எ-று. (ரு)

சா பானீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானீல மால்வரை நாடகேண்—§மாநீலங்
காயும்வேற் கண்ணாள் கனையிருளி னீவர
வாயுமோ மன்றநீ யாய்.

எ-து இரவுக்குறிவேண்டிய தலைமகற்குத் தோழி மறுத்துச்சொல்லியது

இ-ள். மிக்க நீலமணிவரை மாட்சிமைப்பட்ட வெண்டுகிலையுமிழ்வது போல, அருவிகள் மயங்காநின்ற நீலமால்வரைநாடனே! கேளாய்; கரியநீல மலர்களை வெகுளாநின்ற வேல்போன்றகண்ணாள், செறிந்த இருளின்கண் நீவர, நினக்கிடையூறில்லாமைஆராயவல்லளோ; உண்மையாகப்பாராய்எ-று

---

* பனையளவு எனவும், † மடநல்லாய் எனவும் பாடம்.

‡ இஃது இவ்வொழுக்கத்தினை வேங்கை நீக்கிற்றெனத் தலைவிக்குக் கூறியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொ, கள, உரு).

§ 'மானீலம்' எனவும் பாடம்.

எ கறிவளர்பூஞ் சாரற் கைந்நாகம் பார்த்து
நெறிவளர் நீள்வேங்கை கொட்கு—முறிவளர்
நன்மலை நாட விரவரின் வாழாளா
னன்மலை நாடன் மகள்.

இதுவுமது.

இ-ள். மிளகு படர்கின்ற பூஞ்சாரலின்கட் கையையுடைய நாகங்களைப்பார்த்து வழியின்கண் வளர்கின்ற பெரும்புலிகள் திரிதரும் இரவின்கண் நீவரிற், றளிர்வளர்கின்ற நன்மலைநாட! நன்மலைநாடன்மகள் வாழாள்;எ-று.

அ அவட்காயி னைவனங் காவ லமைந்த
திவட்காயிற் செந்தினைகா ரேன—லிவட்காயி
னெண்ணுளவா லைந்திரண் டீத்தான்கொ லென்னுங்கொல்
கண்ணுளவாற் காமன் கணை.

எ-து பின்னிலைமுனியாது நின்ற தலைமகன் றோழியை மதியுடம்படுத்தது.

இ-ள். அவ்விடத்து வருவேனாயின் நினக்கு ஐவனங்காவலமைந்தது; இவ்விடத்தின்கண் வருவேனாயிற் செந்தினையுஞ் செறிந்த பசுந்தினையும் காத்தலே அமைந்தது; ஆதலான் எனக்கொரு மறுமாற்றந் தருகின்றிலை; நின்றோழியாகிய இவட்காயிற், காமன் அம்பு ஐந்தெண்ணுளவால், அவற்றுளிரண்டம்பினைக் கண்ணாகக்கொடுத்தான் கொல்லோ! நின்றோழிக்குக் கண்கள் காமன்கணை யுளவால், என்னுயிர்க்கு என்னுங் கொல்லோ? எ-று.

கூ வஞ்சமே யென்னும் வகைத்தாலோர் மாவினாய்த்
தஞ்சந் தமியனாய்ச் சென்றேனென்—னெஞ்சை
நலங்கொண்டார் பூங்குழலா ணன்றாயத் தன்றென்
வலங்கொண்டா ளொண்டா ளிடம்.

எ-து பாங்கற்குத் தலைமகன் றலைமகளைக் கண்டவகைகூறித் தன்னாற்றாமைமிகுதி சொல்லியது.

இ-ள். மாயமே யென்று சொல்லப்படுந் தன்மைத்தால்! ஒருமாவினை வினாவி யானினைவினை நீங்கித் தனியே எளியேனாய்ச் சென்றேன்: சென்ற விடத்து நலங்கொண்டு நிறைந்த பூங்குழலையுடையாள் மிகவுந் தன்னாயத்தின்கண் அன்று என் வென்றியை யெல்லாங்கொண்டு என்னெஞ்சத்தைத் தனக்கிடமாய்க் கொண்டாள்; எ-று. (கூ)

௧0 கருவிரற் செம்முக வெண்பற்சூன் மந்தி
பருவிரலாற் பைஞ்சுனைநீர் தூஉய்ப்—பெருவரைமேற்
றேன்றேவர்க் *கொக்கு மலைநாட வாரலோ
வான்றேவர் கொட்கும் வழி.

எ-து தோழி நெறிவிலக்கியது.

இ-ள். கருவிரலினையுஞ் செம்முகத்தினையும் வெண்பல்லினையுமுடை யசூன்மந்தி தன் பெரியவிரலானே பைஞ்சுனையினீரைத்தூவிப், பெருவரை யின்மேலே வைத்த தேன்பொதிகளைத் தேவர்கட்குக் கொடுக்கும் மலை நாடனே! வாராதொழிவாயாக; தேவர்கள் திரிதரும் வழியாம்; எ-று. (௧0)

௧௧ கரவில் வளமலைக் கல்லருவி நாட
வுரவில் வலியா யொருநீ—யிரவின்
வழிகடாஞ் சால வரவரிய வார
விழிகடா யானை யெதிர்.

இதுவுமது.

இ-ள். பழுதில்லாத வளங்களையுடைய கல்லருவி நாடனே! வலிய வில்லே நினக்கு வலியாய் ஒருநீ இரவின்கண்ணுகத் துணையின்றி வழிகள் தாம் மிகவும் வரவரிய; இழியாநின்ற கடாத்தையுடைய யானைகளி னெதிர் வாரல்; எ-று. (௧௧)

௧௨ வேலனூர் போக மறிவிடுக்க வேரியும்
பாலனூர்க் கீக பழியிலாள்—பாலாற்
கடும்புனலி னீந்திக் கரைவைத்தாற் கல்லா
னெடும்பணைபோ றோணோ ரா ணின்று.

எ-து வெறிவிலக்கித் தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது.

இ-ள். வெறியை விட்டு வேலனூர் போக; மறியையும் விடுக்க; கள்ளை யும் அக்கள்ளினை நுகர்வார்க்கீக; இப்பழியிலாதாள் ஊழ்வலியாற் கடும்புன லுட் பாய்ந்து நீந்தித் தன்னை யெடுத்துக் கரையின்கண் வைத்தாற்கல்லது நெடிய வேய்போன்ற தோளை நல்காள் இறந்துநின்று; எ-று. (௧௨)

---

* 'ஒண்ணிணப்பலி யொக்குவல்' என்பது திருச்சிற்றம்பலக் கோவை. (௨௩௫.)

கங. ஒருவரை போலெங்கும் பல்வரையுஞ் சூழ்ந்த
வருவரை யுள்ளதாஞ் சீறூர்—வருவரையு
ளைவாய நாகம் புறமெல்லா மாயுங்காற்
கைவாய நாகஞ்சேர் காடு.

எ-து நெறியினதருமை கூறித் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். ஒரு மலைபோல எல்லா மலையும் தம்முள் அளவொக்க உயர்ந்து சூழ்ந்த அரிய எல்லையுள் உள்ளதாம் எங்கள் சீறூர்; நீவரும் அவ்வெல்லையுள் உள்ளகத்தின்கண் உள்ளன ஐந்துவாயையுடைய நாகங்கள்; புறத்துள்ளன ஆராயுங்காற் கையொடுசேர்ந்த வாயையுடைய யானைகள் சேர்ந்தகாடுகள்; எ-று. (கங)

கச வருக்கை வளமலையுண் மாதரும் யானு
மிருக்கை யிதண்மேலே மாகப்—பருக்கைக்
கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்
றொடாஅவா லென்றோழி தோள்.

எ-து. செவிலிக்குத் தோழி அறத்தொடுநின்றது.

இ-ள். வருக்கைப் பலாவினையுடைய வளமலையின்கண் மாதரும் யானும் எமக்கிருக்கையாகிய பரண்மேலேயிருந்தேமாகப், பெரிய கையினையுங் கடாத்தையும் பெருமையையும் உடைய யானையைத் துரந்து கடிந்தானை யன்றித் தீண்டாவால், என்றோழியுடைய தோள்கள்; எ-று. (கச)

கரு வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து.‡

எ-து தலைமகன் சான்றோரை வரைவுவேண்டி விடுத்தவிடத்துத் தலைமகள்தந்தைக்குந் தனையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடுநின்றது.

இ-ள். தள்ளாத சான்றாண்மையையுடையார் வரவை எதிர்கொண்டிராய்க் கோடாது உடம்பட்டு நீர் கொடுப்பினன்றித் தளராத அழகும் முலையும் என்னும் இரண்டிற்கும் முந்நீராற் சூழப்பட்டவுலகும் விலையாமோ நிரம்பி; எ-று. (கரு)

‡ இதுவும் உசாதலாயடங்கும் என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. பொருளி. கரு)

கசு நாணுக நாறு நனைகுழலா ணல்கித்தன்
பூணுக நேர்வளவும் போகாது—பூணுக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து. *

எ-து தோழி சேட்படுத்தவிடத்துத் தலைமகன்றனதாற்றமையாற்சொல்லியது.

இ-ள். நாகநாண்மலர்நாறும் தேனுல் நனையப்பட்ட குழலாள் எனக்கு நல்கித் தன்னுடைய பூண்மார்பினை நேருமளவும் என் மார்பினின்றும் அவ்வெலும்பாற் செய்த பூண்போகாதென்று நினக்குச் சொல்லினேன்; இனியிரண்டாவது வேறொரு சொல்லுண்டோ? பனைமடலாற் செய்யப்பட்ட மாவினையூரத்துணிந்துநின்றேன், தெருவினடுவேயுடன்பட்டு; எ-று. (கசு)

கஎ அறிகவளை யைய விடைமடவா யாயச்
சிறிதவள்செல் லாளிறுமென் றஞ்சிச்—சிறிதவ
ணல்கும்வாய் காணுது நைந்துருகி யென்னெஞ்ச
மொல்கும்வா யொல்க லுறும்.

எ-து நின்னுற் சொல்லப்பட்டவளை அறியேனுலோ என்ற தோழிக்குத் தலைமகனறிய வுரைத்தது.†

இ-ள். அறிவேன் யான் அவளை; தன்னுடைய மெல்லிய இடைவருந்த, மடவாய்! சிறிதுமவள் நடவாளாக இறும்இறும் என்றஞ்சி அவள் எனக்குச் சிறிதும் அருளுநெறிகாணுது தளர்ந்துருகி என்னெஞ்சம் அவளொல்கிநடக்குந்தோறும் பின்சென்று தளர்தலுறும்; எ-று.

இதனுள் ஆய என்பது வருந்த என்றதாம். (கஎ)

கஅ என்னுங்கொ லீடி ‡விளவேங்கை நாளுரைப்பப்
பொன்னும்போர் வேலவர் தாம்புரிந்த—தென்னே
மருவியா மாலை மலைநாடன் கேண்மை
யிருவியா மேன லினி.$

---

* இது சாக்காடு குறித்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல். பொ, கஎ, கக)

† நச்சினார்க்கினியரும் இதுவே கருத்தாகக்கொள்வர். (தொல், பொ, கஎ, கக)

‡ 'இனவேங்கை' எனவும் பாடம்.

$ இது தினையரிகின்றமையுஞ் சுற்றத்தார் பொருள்வேட்கையுங் கூறியது என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. கஎ- உங)

எ-து பகற்குறித்தட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி செறிப் பறிவுறீஇ வரைவுகடாயது.

இ-ள். தகுதியில்லாத இளவேங்கை நாட்சொல்ல இனிக்குரலொழிந்து இருவியாய்க் கழியுந்திணையெல்லாம்; எந்தையும் என்னையன்மாருமாகிய போர்வேலவர் இவட்குப் பரிசமாக மிகவிரும்புகின்றது பொன்னும்; ஆதலாற் பயிலப்பழகிவருந்தன்மையையுடைய மலைநாடன்கேண்மை யினியென்னாய் விளையுங்கொல்லோ! என்னே! எ-று. (கஅ)

கசு பாலொத்த வெள்ளருவி பாய்ந்தாடிப் பல்பூப்பெய்
தாலொத்த வைவனங் காப்பாள்கண்—வேலொத்தென்
னெஞ்சம்வாய்ப் புக்கொழிவு காண்பானோ காண்கொடா
வஞ்சாயற் கேநோவல் யான்.*

எ-து பின்னின்ற தலைமகன் தோழி துறைமறமற் றனதாற்றமைமிகுதி சொல்லியது.

இ-ள். பால்போன்ற வெள்ளருவியைப் பாய்ந்தாடிப், பலபூக்களையும் பெய்து பரப்பினாற்போலப் பூங்கொடிகள் பரந்த ஐவனப்புனத்தைக் காப்பாள் கண்கள், வேல்போன்று எனது நெஞ்சத்தின்கண் வாவிப்புக்கு என்னுயிரை ஒழிவுகாணவேண்டியோ புறம்போகாது உள்ளே அடங்கின; இத்துணை வேண்டுமோ? அவளுடைய அழகிய மேனிக்கே நோவாநின்றேன் யான்; எ-று. (கசு)

உ௦ நாள்வேங்கை பொன்விளையு நன்மலை நன்னாட [வேங்கை
கோள்வேங்கை போற்கொடியா ரென்னையன்மார்—கோள்
யன்னையா னீயு மருந்தழையா மேலாமைக்
கென்னையோ நாளை யெளிது.‡

எ-து கையுறைமறை.

இ-ள். வேங்கை நாண்மலர் பொன்விளைவிக்கும் நன்மலை நாடனே! கோள்வேங்கைபோற் கொடியார் என் ஐயன்மார்; நீயுங் கோள்வேங்கை யனையையாதலான் இன்று நீயும் இங்கே நிற்கின் மிகப்போர் விளையும்; நீ கொணர்ந்த தழையை யாங்கொள்ளாமைக்கு வேறு காரண மென்னை? நாளை நீ கொண்டு வந்தால் எளிது; எ-று. (உ௦)

---

* இது பகற்குறியிரந்தது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. களவு. ககூ)

‡ இது கையுறை மறுத்துப் பின்வருக என்றது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல். பொ. கள. உகூ.)

பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. (க)

அ0. எண்ணப் பட்ட அகரமுத லைந்தும்
வல்லூ றுந்தை வலியான் குருகே
மெல்லியன் மயிலென விளம்பிய வியற்கையிற்
புள்ளென விளம்பும் புலவரு முளரே :
பரணர். (உ)

## கூ.—நாள்.

அக. $மொழிக்கு முதலா வாகிய வெழுத்துக்
கோதிய நாள்வகை யியற்றுதல் கடனே. (க)

அஉ. உயிர்முத லுன்குஞ் ¶செயிர்தபு கார்த்திகை
யைந்து மூன்று மவற்றி னடைவே
வந்தபூ ராட முத்திரா டம்மே. (உ.)

அங. ககர வருக்க வகைநாள் விரிப்பி
னுன்கு மிரண்டு மூன்று மூன்று
மோண மாதிரை புனர்பூசம் பூசம். (ங)

அச. சகர நான்கைந் தொருமூன் றிவற்றின்
வகைநா ளிரேபதி முதன்மூன் றென்ப. (ச)

அரு. ஞகர வருக்கத் ||தொருமூன் றவிட்டம்.
ஞா, ஞெ, ஞொ. உ-ம்-ஞாலம், ஞெகிழி, ஞொள்கல். (ரு)

அசு. தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு
வகைநாள் சோதி விசாகஞ் சதயம். (சு)

அஎ. நகரத் தாறு மநுடத் தடைவே
யேனை யாறுங் கேட்டைபூ ரட்டாதி. (எ)

அஅ. *பத்திய பகரத் தொருநான் கிரண்டா
றுத்திர மத்தஞ் சித்திரை யாகும். (அ)

---

$ நாமநாண் மொழிக்கு முதலாகிய வெழுத்து. பி-ம்.

¶ செயிர்தீர் பி-ம்.

|| மூன்றுமவிட்டம் பி-ம்.

* பற்றிய பி-ம்.

௮௯. மகரத் தாறு மூன்று மூன்று
மகமா யிலியம் பூர மாகும். (௯)

௯0. யாவே யுத்திரட் டாதி யேனை
யூயோ மூலமென் றுணர்ந்திசி னோரே. (௧0)

௯௧. யூயோ விரண்டு பேறுண் மூலம்
யாவே யுத்திரட் டாதிநாள் பெறுமே. (௧௧)

௯௨. ஒருநான் குரோகணி வகர மவ்வகை
மற்றை நான்கு மகசிர மாகும். (௧௨)

௯௩. †மூவகை யாய்ச்செய் தொன்றுமூன் றைந்தே
மூட்டம ராசி வைநா சியத்தால்
விட்டனர் பின்னர் மேவினர் கொளலே. (௧௩)

௯௪. இரண்டீ ரிரண்டா றெட்டொன் பானெனத்
திரண்ட நாளே செல்வம் புகுதரும். (௧௪)

௯௫. நன்மை பொருள்பே றின்பந் தருமெனத்
தொன்னெறிப் புலவ ருரைத்தனர் துணிந்தே.
அவை,- மூவகை யொன்பதின் முதன்முத லாளாம். (௧௫)

௯௬. சிறந்தசீர்த் தலைவன் பிறந்தநா ளாயினும்
பெயர்நா ளாயினு மியலுற வுணர்ந்தபின்
னொன்றற் கேனு மிரண்டற் கேனு
‡மூன்றிகழ் பொருத்த மொழிவது கடனே. (௧௬)

எழுத்தியல் முற்றிற்று.

---

† "சொல்லியநாளிருபத் தேழையும் ஒன்பதொன்பதாக மூன்று கூறுக்கிப் பாட்டுடைத்தலைவனியற்பெயரின் முதலெழுத்திருளைத் தொடங்கிக் கூறுகளையெண்ண, ஒன்று மூன்று ஐந்து எழ்வரிற் பொருந்தா. அல்லாத நாட்களுட் பாட்டுடைத்தலைவன் பெயர் முதலெழுத்தினிராசி தொடங்கி எட்டாமிராசி நாட்களும் பொருந்தா. வைநாசியமாகிய எண்பத்தெட்டாங்கால் நின்றநாளும் பொருந்தாது." என்பது வச்சணந்திமாலையுரை.

‡ மூன்று இகழ் பொருத்தம் ௩, ௫, ௭ என்னும் மூன்றினையும் விட்டபொருத்தம்.

## சொல்லியல்.

கூஎ நவையறு சீர்க்கண மங்கலச் சொற்பெய
ரிவையொரு நாளுக் கியம்புதல் சொல்லியல். (க)

### க.—சீர்க்கணம்.

கூஅ ஈரசைச் சீரே மூவகைச் சீரே
நாலசைச் சீரே யோரசைச் சீரென
சீர்வகை நான்குந் தெரிந்தனர் புலவர். (உ)

கூகூ ஈரசை யகவன் மூவசை நான்கு
நேரிறில் வெள்ளை நிரையிறில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே. (௩)

க00 மூவசை *யெண்சீர்க் கணமென மொழிந்தன
ரீரசை நாலசை யோரசை யொழித்தே. (ச)

க0க கணமே மூவசைக் கூட்ட மாகும்:
கபிலர். (ரு)

க0உ முற்பாட் டெடுப்பின் முதலீ ரசைச்சொல்
சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி
நிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந் தோரே. (௬)

க0௩ நன்மைசெய் கடவு ளுடை னவற்றிற்குத்
தொன்னெறி மரபி னின்மை யானே
நாலசைச் சீரு மேலோ ரொழித்தனர்:
இந்திரகாளியார். (எ)

க0ச நீடிய மானன் றிங்க ணிலநீர்
சூரியன் வான மங்கி காற்றென
வியம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (அ)

க0ரு †நேரசை மூன்றிய மான னதற்குச்
சீர்புனை நாளே பரணி வாழ்நாண்
மற்றது பயக்குமென் றுய்த்துணைத் தனரே. (௯)

---

* யொண்சீர் பி-ம்.

† இயமானனைச் சுவர்க்கம் என்னும் பெயராற் கூறுவர் வெண்பாப் பாட்டியலார். இந்திரகணமென்பர் நவநீதப்பாட்டியலுரைகாரர். "இந்திர கணமே பெருக்கஞ் செய்யுஞ், சந்திர கணமே வாழ்நா டருமே"—மாழலம்: என்பது நவநீதப்பாட்டியலுரை மேற்கோள்.

கOரு நிரைநேர் நேரது நீண்மதி யதற்கு
வருநாண் மகசிர மலிபுக ழாகும். (கO)

கOஎ நிரையசை மூன்று நிலக்கண மதற்குத்
தருநாள் கேட்டை திருமிகத் தருமே. (கக)

கOஅ நீர்க்கண நேர்நிரை நிரைநாள் சதயம்
பார்க்கதிர்ப் பெருக்கம் பார்க்கு மென்ப. (கஉ)

கOகூ கண்ணிய நேர்நிரை நேர்வரிற் கடுங்கதிர்
நண்ணிய நோய்தரு நாள்புனர் பூசம்
நிரைநிரை நேர்தாம் வரினது வானம்
பெருகிய கேடது ‡தருநா ளோணம். (கங)

ககO நெருப்பின் கணநிரை நேர்நிரை கார்த்திகை
விருப்புறு நாள திடுக்கண் செய்யும். (கச)

ககக. காட்டிய நேர்நேர் நிரைவரிற் காற்றது
நாட்டறை போக்குநாள் சோதி யாகும். (கரு)

ககஉ நிற்பன தீக்கண நான்கவை நீக்கி
நற்கண நான்கவை நாட்டினர் கொளலே. (கசு)

ககங அவைதாம்;—
நீரே நிலனே வானே நீண்மதி
சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்
காற்றெனக் கிளர்ந்த கூற்றன வென்ப. (கஎ)

ககச நேர்முத லாகி நிரையிணை பின்வரி
னீர்க்கண மென்ப நெறியுணர்ந் தோரே. (கஅ)

ககரு நிரைமூன் றியைந்தது நிலனெனத் தருமே. (ககூ)

ககசு முந்துநிரை யிணைந்து நேரிறு மூவசை
யந்தர கணமென் $றறிதல் வேண்டும். (உO)

ககஎ முதனிரை யாகி யிணைநேர் வழிவரி
னதுமதிக் கணமென் ¶றறிந்தனர் கொளலே. (உக)

---

‡ நாளோண மென்ப பி-ம்.
$ றறைதல் பி-ம்.
¶ றறைந்தனர் பி-ம்,

கக அ நேரசை மூன்றிய மானன் கணமே.|| (உஉ)

ககக நேர்நடு வாகி நிரையிரு பாலுஞ்
சேரு மாயிற் செந்தீக் கணமே. (உ௩)

கஉ0 நிரைநடு வாகி நேரிரு பால்வரி
னலர்கதிர்க் கணமென் றறிந்தனர் கொளலே. (உச)

கஉக ஈறுநிரை யாகி யிணைநேர் முன்வரின்
மாறி வந்த மாருத கணமே. (உரு)

கஉஉ நிலனு மதியு நீருமிய மானனு
நலமிகு முதல்வரிற் பிறநான் கும்பகை. (உசா)

கஉ௩ யாவர்செய் யுட்கு மினமொடு புணரு
மூவகைச் சீரே முதனிற் பனவே. (உஎ)

கஉச அவைதாம் ;—
பெருக்கஞ் செய்தலின் வாழ்நாள் பயத்தலிற்
றருக்கிய சீர்த்தி தன்னைத் தருதலின்
மிகுதிரு வாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்குந்
தகுமெனப் பகரினுந் தகாது மற்றச்
சீர்க்குரிய நாளொடு செய்யுட் செய்யும்
பொருபடைக் குரிசிலுள் பொருந்தாக் கடையே. (உஅ)

கஉரு அவைதாம் ;—
தேயம் போக்குதல் செல்வத்து விளிதல்
சூனிய மாதல் சுழனோ யுறுத
லூனம் பயக்குமென் றுரைத்தன ராயினு
மாதி யமுதெழுத் தாகிய சீர்கட்
கோதிய தெய்வத் திற்குரித் தாக
வோதிய நாளொடு பாடப் படுமே. (உகூ)

---

|| "நேரசை மூன்றிய மான னிரைப்பின்பு நேரிரண்டு-சேர்வன திங்க ணிரையசை மூன்றுஞ் செழுநிலமா-நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரி னீர்க்கணமாந்-தேரிய லல்குற் றிருவே யிதுநல்ல சீர்க்கணமே." என்பது நவநீதப்பாட்டியல்.

கஉ௬ எல்லாக் கணமு நாணல மிலவெனிற்
பொல்லாங்கு தருமெனப் புகல வேண்டும்.:
இந்திரகாளியார். (ஙo)

கஉஎ மங்கல மமைந்த சொல்லொடு பொருந்திய
வீரசை நான்கினு ணேரீ றொழித்து
நிரையிற் றியற்சீர் முதற்க ணிற்பினும்
வரையார் மூவகை வாராக் காலே. (ஙக)

கஉஅ ஈரசை முதலா நேரீ றொழித்து
நிரையீற்று மங்கலம் புணர்ந்தனர் கொளலே. (ஙஉ)

கஉகூ நிரைநிரை கொற்றவை நேர்நிரை சாத்தன். (ஙங)

கஙo அவைதாம் :—
மிகுதரு திருவும் புகழுஞ் செய்யும்:
சேந்தம்பூதனர். (ஙச)

கஙக ஓரசைச் சீரு நாலசைச் சீரு
மீரசைச் சீரு ணேரிறு சீரு
மங்கலம் புணரினு மங்குதல் செய்யும்:
கோவூர்க்கிழார். (ஙரு)

## உ.—மங்கலச் சொல்.

கஙஉ பொன்பூத் திருமணி புனலா ரணங்கடல்
செங்கதிர் திகிரி தேர்பரி யெழுத்தே
மாநிலங் கங்கை மலைபுக ழமுதங்
கார்புய லுலகங் களிறே யருந்ததி
பார்மதி நாள்சீர் ஞெண்டுட னென்ன
வெண்ணிய சொல்லே யவைபல் பிறவுங்
கண்ணிய மங்கலச் சொல்லெனக் காட்டினர். (க)

கஙங சொல்லெனப் படுபவை சொல்லுங் காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொன் ஞெண்டு நாட்டிய பரிமலை
கருட னருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே:
பொய்கையார். (உ)

கஙச செப்பிய வுடம்பொடு சேரா துயிர்முத
னிற்பன மக்கட் காமெனி னோர்ந்திலர்
மற்றவை கடவுளர் முனிவர்க் காமே. (ங.)

கஙரு உயிரொடு புணரா மென்மையு மிடையுஞ்
செயிரிற் றீமையுஞ் செப்பத் தகுமே. (ச)

கஙசு ஓதிய மெய்யொடு புணரா துயிரெழுத்
தாதி நிற்பி *னானந் தம்மே. (ரு)

கஙஎ உடம்பு பிரிவுயிர் சாத ருனே:

இந்திரகாளியார். (சு)

கஙஅ நரகரும் விலங்கு மமுதொடு வரினவை
புகரில வென்ப புலமை யோரே:

பரணர். (எ)

கஙகூ மூன்றைந் தேழொன் பானெழுத் தான்ற
வொற்றுட னெண்ணிமுன் சொற்ற முறையிற்
பல்பொருட் படவரூஉஞ் சொல்லா லகற்றி
யொருபொருட் டாகி வருமொழி பற்றித்
திரித லொழியத் திருந்திச் சொல்லினுட்
டெரிவோர் வகையுளி மறுத்து நட்டது
மங்கலச் சொல்லென வகுத்தனர் புலவர். (அ)

கச0 முன்னிலை யெழுத்தின் †வியநிலை நலனே
‡சமநிலை யாயின் முதல்வற் கூனம். (கூ)

கசக சொல்லிய மரபின் மங்கலஞ் சிதைத்துப்
புல்லுதல் குற்றம் பொருட்டலை மகற்கே. (க0)

கசஉ. தொடுகழல் வேந்தன் றுன்று தோரும்
வடுவறு பரிசில் வழங்கா தோருங்
கெடுதல் வேண்டிச் சிதைத்தலு முரித்தே. (கக)

---

* ஆனந்தம்—சாக்காடு.

† வியம்—ஒற்றை யெண்.

‡ சமம்—இரட்டை யெண்.

## ௩—பெயர்ப் பொருத்தம்.

கசங எண்வகைப் பெயரு நண்ணுதல் செப்பிற்
குலங்குடி கோத்திர நலம்பெறு குணமே
மனமே யாணை மன்னிய சிறப்பே
யியற்பெய ரென்றிவை தம்மு ளியன்ற
சிறப்பியற் பெயரெனு மிருதிறத் திற்கு
மயக்கற மொழிமுத லெடுக்குஞ் சொல்லுடன்
பொருத்தங் கொள்வர் கருத்துணர்ந் தோரே. (௧)

கசச பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெய ராகும். (௨)

கசரு குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டிய னென்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே. (௩)

கசசு கோத்திரப் பெயரே கூறுங் காலைத்
தாதைகுடிப் பெயரைத் தக்கவற் றியற்றல். (௪)

கசஎ குணப்பெய ரெனைப் புலவோர் கொடுப்பத்
தணப்பில வாகித் தழுவும் பெயரே. (௫)

கசஅ மனப்பெய ராவன தனக்குத் தானே
யெனக்கிது வேண்டுமென் றெய்தும் பெயரே. (௬)

கசகூ ஆணைப் பெயரே வலியோ ரஞ்சப்
பேணி யுலகம் பேசும் பெயரே. (௭)

கரு௦ சிறப்புப் பெயரே தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே. (௮)

கருக சாதியி னுள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் சிறப்பியற் பெயர்கொளற் குரியர். (௯)

கரு௨ முடியுடை வேந்தன்முற் குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணு மாழியு
நட்டமி னலமலி சிறப்புப் பெயருங்
கொடாஅ ரெனமொழிப குலமொழிப் புலவர். (௧௦)

கருங வினைசெயன் மருங்கின்மிக் கோரும் பெறுப. (௧௧)

உ

கடவுள் துணை.

இராமநாதபுரம் ஸம்ஸ்தானம்

மாட்சிபொருந்திய ஸ்ரீமத்:

# பாஸ்கர சேதுபதிமகாராஜா அவர்கள்

சிவபதமடைந்தமைக்காற்றாது பாடிய

# சரமகவிகள்.

பாலவநத்தம் ஜமீந்தாரவர்களும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியுமான

பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

பாடியவை.

---

1. சேதுபதி மன்னர்குலக் கடற்றோன்றி யருணனையே சேர்ந்தோ ராழி மேதினியெங் கணுஞ்செலுத்தி யிரவொழித்துப் புகழொளியை விரித்துத் தேன்போ, லோதுபிர சங்கமழை யுவந்துதவு பாற்கரநீ யொடுங்குங் கால, மீதுகொலோ வின்னமுநீ யெய்துவையோ யிரங்கியெமக் கிசைத்தி டாயே.

2. என்னாவி யுளங்குளிர அண்ணாவென் றன்பொடினி யெனையார் சொல்வார், மன்னாமன் னாமன்னா வெனயாரை யானினிமேல் மதித்துச் சொல்வேன், பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு புரந்தளிக்கப் போந்த நீவே, றென்னாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே யிசைத்தி டாயே.

3. அவியுணவொன் றேயருந்து மமரருண வவியாவுன் னமுத வாக்காற் செவியுணவுங் கொடுப்பதற்கோ நிதிமணியைந்தருகாமதேனுவென்னு மவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து கொடுக்குநல மறைதற் கோவிப், புவியிலெமை வருந்தவிட்டு வானடைந்தாய் பாற்கரநீ புகன்றி டாயே.

4. நீணிலமீ தரனடியார் பெருமையுமன் னவன்சமய நெறியும் பல்கால் மாணவெடுத் தெடுத்துரைத்துந் திருந்துகிலார் மடமதியின் வலிமை காணா, வீணிதென வானடைந்தாய் பாற்கரசே துபதியவண் மெய்யில் போகம், பேணுநரா யுள்ந்தெருட்டி யுய்விப்பான் விழைந்தனையோ பெரும நீயே,

5. பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு தியஞான்று பரிவு கூர்ந்து நண்புலவு திருவாக்காற் றளர்வொழிகென் றெனக்கிசைத்த நலம்பொய்யாதே, மண்புலவ ரொடுநெனிபொன் வழங்கியமை யாதெனவே மதித்து வான்போய், விண்புலவ ரோடுதம னியங்கொணர நினைந்தனையோ வேந்த ரேறே.

6. சோபகிரு தாண்டொன்பான் றாய்மதியீ ராறுவளர்
மாபிறையெண் ணளிரவி வாரமீன்—நீபமலை
மாதுபதி தூக்கு மலரடியைப் பாற்கரனுஞ்
சேதுபதி சேர்ந்த தினம்.

---

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவானும்

'செந்தமிழ்' ப்பத்திராசிரியருமாகிய

## ரா. இராகவையங்கார் அவர்கள்

பாடியவை.

---

வெண்பா.

1. என்னி னெனக்கினிய னின்பாற் கரசேது
மன்ன னிறந்த வகையானே—யின்னே
யொளியின் மணியானே னூழில்செய லானேன்
களிறில் * வெளிலானேன் காண்.

2. செவிக்கினிய கேளேன்சிந் திக்கினிய தேறேன்
கவிக்கினிய பாடிக் களியேன்—புவிக்கினிய
வள்ளியோன் பாற்கரப்பேர் மன்னன் சொலல்வல்ல
தெள்ளியோன் சென்றபொழு தே.

---

* வெளில்-யானைகட்டுந்தறி.

3. இரவாமை யீயு மெழிற்றகையு முள்ள
கரவாமை நல்குங் களிப்பு—மிரவாள
ரின்முகங் காணு மியல்பு மினிக்காணே
னன்முகப் பாற்கரனே நான்.

4. சேது பதிக டிலகமே பாற்கரனே
கோது பதியாக் குணக்குன்றே—மூதுலகி
னீயிறந்தா யல்லையா னீள்புகழா லுள்ளனையெம்
வாயிறந்து போய மதி.

5. வாயிலா மூங்கை மதியிலா நெஞ்சகநற்
றுயிலாச் சேயிவையே தானனையே—னீயிலா
தென்செய்வே னின்றமிழை யாவர்க் கெடுத்துரைப்பேன்
கொன்செய்வேற் பாற்கரவேள் கூறு.

6. பாட்டு முறையும் பயிலாப் பதடிகட
மோட்டைச் செவியி லுகுப்பேனோ—நீட்டுகொடைச்
செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா வின்சுவையை
யெங்கையா சொல்வே னினி.

7. அருமை யறியா ரவர்செவ்வி நோக்கிப்
பெருமை யழியவைத்த பெட்பென்—னொருமை
யுயிர்த்துணை நீயென் றுரைத்த மொழியை
யயர்த்தனையே பாற்கரமன் னு.

8. மண்புலவர் சொல்லமுதே மாந்திச் சுவைதெரிநீ
விண்புலவர் புல்லமுது மேவியுண்ண—வெண்ணியது
பாலே நுகர்வான் பயனில் புளிவேட்டல்
போலேயாம் பாற்கரவேள் போற்று.

9. ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவரென்னுந்—தூவாய்மை
மன்னிய சொல்லை மதியாமல் வானெய்த
வுன்னியதென் பாற்கரவே ளோது.

10. பாருலகு நங்கொடைக்குப் பற்றா தெனவுள்ளிச்
சீருலகு பொன்னென்று சென்றனையப்—பேருலகிற்
கொள்வா ரிலாமை குறித்திலையே பாற்காப்பேர்
வள்ளா லிதனை மதி.

11. கார்புக்க தோகற்ப கம்புக்க தோவறியேன்
சீர்புக்க பாற்கர சேதுபதீ—பேர்நிற்க
வீத்து மலர்ந்திவ் விருநீர் வரைப்பெல்லாங்
காத்து வளர்ந்தநின் கை.

12. கேளாருங் கேட்கக் கிளக்கும்வா யெங்கேயோ
வேளாரும் வேட்ப மிகுநிதியந்—தாளாரு
மன்னர்க்கும் யார்க்கும் வழங்குகர மெங்கேயோ
கன்னற்கு நேர்பாற் கர.

13. சோப கிருதாண்டிற் றூய தநுமாதத்
தீபமிகு பக்கத் திதியெட்டிற்—பூபரவு
வார முதலாம் வளர்பாற் கரன்வேந்தர்
தீரன் சிவமாந் தினம்.

---

சேற்றூர்ச்சம்ஸ்தான வித்வானும்

மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவருளொருவருமாகிய

## மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள்

பாடியவை.

### கலித்துறை.

1. விண்பாற்கரனொன்றுபெற்றதுபோலிந்தமேதினியா
மண்பாற்கரனொன்றுபெற்றேயெவரும்வறுமையிருள்
கண்பார்க்கக்கூடுதலில்லாதிருக்கக்களித்ததந்தோ
எண்பாற்கரநிகர்புண்படவேயின்றிழந்ததுவே.

2. எல்லாவுலகிற்கும்பாற்கரனொன்றென்றிருக்கவிந்தப்
பொல்லாவுலகந்தனக்கெனவேறொன்றுபோதப்பெற்ற
தில்லாததொன்றுநிகழ்வததிசயமென்றுமதி
நில்லாதெனவின்றிழந்தேதுயருற்றுநின்றதுவே.

3. அப்பாற்கரனொர்கவியேதன்முன்வரவன்றுவந்தா
னொப்பார்க்குஞ்சொல்லமுடியாக்கவிகள்பல்லோருமென்று
மிப்பாற்கரன்றன்முன்னேவந்துசூழ்ந்திடவின்றுவந்தா
னெப்பார்க்குளேசென்றொளித்தானிவனிங்கிருந்திலனே.

4. அரங்கண்டுமொறுவாவழைத்தேவந்தவர்க—ரா
தரங்கண்டுபோலினிக்குங்கவியாற்பிரசங்கத்திறற்
பரங்கண்டுபொன்றரும்பாற்கரசேதுபதிவள்ளலெங்
கரங்கண்டுயெர்படமோதும்படிக்குக்கரந்தனனே.

5. பாற்கரசேதுபதிவானவர்தம்பதிபுகுந்தா
ஞற்கவிராசரென்செய்வாரங்தோவிந்தநாட்டிலினி
யேற்கவென்றுலெங்குச்செல்வாரிரப்பினிலெய்துமிழி
பாற்கவலைப்படவேண்டாமிந்நன்ஞென்றுண்டாயதுவே.

6. ஆதாரமாகிப்புலவோர்கலிமுற்றகற்றினரிப்
போதார்நம்பாற்கரசேதுபதியன்றிப்பூதலத்தின்
மாதாரமர்புயப்போசன்முன்ஞனவரையுரைத்தல்
காதாரக்கேட்டகதையாமொருவருங்கண்டிலமே.

7. நிலையாதியாக்கைபுகழேயுலகினிலைத்ததென்று
கலையாய்புலவர்க்குவேண்டும்பொருள்கள்கனிந்தளித்து
மலையாமல்வாழ்வித்தநிற்கழகோவின்றுவான்சென்றுகம்
பலையாரவைப்பதுபாற்கரசேதுபதிவள்ளலே.

8. வண்டமிழ்ச்சங்கம்வளர்பொருளீயுநின்வள்ளன்மையைக்
கண்டவரேயன்றிக்கேட்டவர்நெஞ்சுங்கசிந்துருக
விண்டலமேவினையாங்குளர்நெஞ்சுமெலிவிப்பையோ
பண்டறியேமிதுபாற்கரசேதுபதியரசே.

9. மகாராசபாற்கரசேதுபதிதன்கைவண்மையவன்
மகாராசன்மார்க்கமன்றென்றுவிடுப்பர்மடநெஞ்சுசெப்
புகாராசரியவர்க்கீதறிந்தாரவன்போந்துயருட்
புகா * ராசனம்புலவோர்பாடலுக்கப்புரவலரே.

10. முகவையமர்ந்தும்பரம்பொருள்போலெங்குமுந்துவியா
பகவையமன்புசெய்பாற்கரசேதுபதியரசே
மகவையகன்றவர்போலேயிவண்விட்டுவானகநீ
புகவையகோவென்றலறுரெவரிப்புவிதனிலே.

---

* ஆசனம்-இருப்பிடம்.

திருவாவடுதுறை ஆதின வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் ஆகிய

## சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர்

பாடியவை.

---

1. சந்தமுறும் பாற்கரமன் னவனடரா சன்பதத்தைச் சார்ந்த தைக்கண்
டிந்திரனங் கற்பமுமங் கற்பமா மெனவுரைத்தா னெண்கண் ணானு
மந்தமரைப் பதமுமரைப் பதமாமென் றேயுரைத்தா னச்சுதன்றா
னந்தமணிப் பணத்தணையோர் காலுநே ராதென்றா னாவல் லீரே.

2. மண்ணுலகந் தன்னினும்வா னுலகுமே லானதென மதித்தவ் வான
நண்ணினையென் றாலென்று மிரவலர்கள் புரவலரா நயக்கத் தானம்
பண்ணியத னாற்புகழே கொள்ளும்பாற் கரசேது பதியே யங்க
ணெண்ணிலிர வலருண்டோ பொன்னுலகென் பதையுமறந் தேன்சென்
றாயே.

வேறு.

3. அலகில்புண் ணியத்தன் பாற்கர மன்ன னாயுளோங் கிடாமலிங் ககன்று
விலகுதற் கென்ன காரண மென்னில் விளங்குபே ரரசுஞ்சிற் றரசு
நிலவவிங் கிரண்டு புதல்வரைத் தந்தாய் நீயவ்வா னரசுநின் றாதைக்
கிலகுசிற் றரசா யிருவென விறைவ னேவச்சென் றானென்பேம் யாமே.

4. இரவலர் குமுத மன்றியே தன்னாட் டிரவல ரிலையென யாரும்
பரவிய செல்வ ராச்செய்தா யவர்நிற் பார்த்திடாக் கண்பழங் கண்ணா
விரவவான் சென்றா யாங்குநின்கொடைக்கு மிளிரஞ்சு தருவஞ்சு தருவாந்
தரமுறு மெங்கள் பாற்கர மன்னீ தணந்ததா லெவர்க்கென்ன சுகமே.

வேறு.

5. வானவர் போற்ற வுறைகின்ற பாற்கர மன்னவன்றான்
றேன்மதுக் கொண்ட லெனவே பிரசங்கஞ் செய்திருவா
யானதுந் தீயுண்ட தந்தோபொன் மேகம தானதுநேர்
தானெனப் பொன்மழை பெய்திருக் கையுந் தழலுண்டதே.

தஞ்சாவூர் 'பிரைமரிஸ்கூல் சூபர்வைசரும்'
மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்களுளொருவருமாகிய
## ஐ. சாமிநாத முதலியார் அவர்கள்
பாடியவை.

---

1. சீரார் முகவைவந்த பாற்கர சேதுபதி
நீரார் வியனுலகை நீத்தகன்று விண்ணுலகுக்
காரா விருந்தா யமரவமர்ந் தாயதற்கிங்
காரா ரிரங்காதார் ஐயாவே ஐயாவே.

2. பாரிரங்குங் கற்பகம்போற் பாங்கினதை யூட்டினையால்
நீரிரங்குந் தண்மையிற்றன் னேரா யிருந்தனையால்
காரிரங்கு மீகைவினை கற்றுக் கொடுத்தனையால்
ஆரிரங்கார் யாதிரங்கா தையாவே ஐயாவே.

3. கல்லிரங்கும் மற்புயங்கள் காட்டுவலி மாய்ந்ததற்கே
புல்லிரங்கும் தற்றேயாப் பூம்பதங்கள் சாய்ந்ததற்கே
எல்லிரங்கும் தன்மே லிரவுதவிர்ப் போய்ந்ததற்கே
அல்லிரங்கும் தன்னி னவிர்மதியை வீந்ததற்கே.

4. நூலிரங்குங் கோணலெலாம் நூறிடுவை தன்னினென்றே
பாலிரங்குந் தன்னினின்சொல் பாரவிர சத்தனென்றே
வேலிரங்கும் நீயிளையாய் வேலுடைய சேயினென்றே
ஆலிரங்குந் தன்னின்மிகுத் தாதரிக்க வல்லையென்றே.

5. செந்தமிழை யோரார் செருக்கடக்க வந்நாளில்
எந்தை மதுரேச னேன்றுநின்ற னிந்நாளில்
வந்தை முகவேசா வென்று மகிழ்ந்ததுல
கிந்தமகிழ் வின்னுமஃ தேன்சிலநா ளேய்ந்திலதே.

6. ஆருயிரின் ருயே யறத்தின் பிறந்தகமே
பேரருளின் கண்ணே பிறந்த குலப்பேறே
பாரிற் றமிழ்ப்பதுமப் போதலர்த்தும் பாற்கரனே
ஊருன் முகவையைவிட் டுற்றதுவென் வானகமே.

7. காவலருட் செல்லாது காக்குங் கடிவாயில்
பாவலர்க்குச் சூரியனைக் கண்ட பதுமச்செம்
பூவை நிகர்முகவைப் பொற்பதியிற் றெய்விகப்பூங்
காவை யுடையபதி சீரியதாய்க் கண்ணினையோ.

8. காவல்ரைப் பாவலரைக் காக்கவல்ல வாற்றலுள்ளாய்
காவலர்காப் புன்னரிய காதலிளஞ் சேய்க்களித்துப்
பாவலரை மட்டும் பரிந்தளித்து வந்தைநின்னுள்
பாவலரைக் காப்புமிந்நாள் பாரமாய் மேவியதோ.

9. மண்ணிற் புலவர்தமை வாய்ந்துகா வாதகன்று
விண்ணிற் புகுந்தகருத் துய்த்தறியோ மேலவனே
விண்ணிற் புலவ ரிலையோ விணிற்புலவர்
மண்ணிற் புல்வரினு மாற்றி லுயர்ந்தவரோ.

10. பூவுலகைக் காவல் புரியப் புகுந்தமைந்தன்
காவலர்போற் பாவலரைக் காக்கவல்லா னென்றேயோ
தேவுலக வாட்சி சிறந்ததென்றோ யாதெனினும்
பூவைமைந்த னீடாள் புரியவருள் ஐயாவே.

திருச்சிற்றம்பலம்.

1903-ம் ஞூ டிசம்பர் மீ 21உ சோமவாரம் கூடிய
மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவக் கூட்டத்தார்

# தீர்மானங்கள்.

வந்தவர்கள்.

1. மகா-௱-௱-ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர் அவர்கள் (அக்கிராசனாதிபதி)
2. ,, ப. நாராயண ஐயர் அவர்கள், பீ. ஏ. பீ. எல்.
3. ,, எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் அவர்கள்.
4. ,, திருநெல்வேலி-சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்.
5. ,, திருநெல்வேலி—நெல்லையப்பக் கவிராஜர் அவர்கள்
6. ,, S. பால்வண்ண முதலியார் அவர்கள்.
7. ,, பூவை-கல்யாணசுந்தர முதலியார் அவர்கள்.
8. ,, பண்டித-சவரிராய பிள்ளையவர்கள்.
9. ,, சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்.
10. ,, டி. வி. ஸ்ரீநிவாசஐயங்கார் அவர்கள் பீ. ஏ. பீ. எல்.
11. ,, சோழவந்தான் சண்முகம்பிள்ளையவர்கள்.
12. ,, நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.
13. ,, வி. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்கள்.
14. ,, ரா. அப்புவையங்கார் அவர்கள்
15. ,, எம். ஆர். ஸ்ரீநிவாசையங்காரவர்கள் (ஸ்ரீவில்லிபுத்தூர்)
16. ,, திரு. நாராயண ஐயங்கார் அவர்கள்.
17. ,, எஸ். சாமிநாதையரவர்கள்.
18. ,, தஞ்சை-சாமிநாதமுதலியார் அவர்கள்.
19. ,, எஸ். அரங்கசாமி ஐயங்கார் அவர்கள்.

வரமுடியாத வித்வான்கள் எழுதிவிடுத்த பின்வரும் கடிதங்களும் தந்தியும் வாசிக்கப்பட்டன.

மகா-௱-௱-ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள்.
,, P. குருராயர் அவர்கள் M. A. L. T.
,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள்.
,, தஞ்சை-வே. குப்புசாமிராஜு அவர்கள்.

மகா-௱-௱-ஸ்ரீ திருமயிலை-சண்முகம்பிள்ளை அவர்கள்.
,, பி. வேங்கடசாமிபிள்ளை அவர்கள், B. A.,
,, கொழும்பு-சிற்கைலாசபிள்ளை அவர்கள் (தந்தி)
,, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்
,, தி. கோ. நாராயணசாமி பிள்ளையவர்கள்.
,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.
,, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள்
,, வா. குலாம்காதிறு நாவலரவர்கள்
,, வே. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.
,, வி. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், B. A.,

## தீர்மானம்—1.

(i) சங்கத்தின் அங்கத்தினராய அனைவரும் தத்தமக்கு இயன்றவளவு கல்வி செல்வங்களால் உதவிபுரியுங் கடப்பாடுடையராகலின், அன்னோர் வருஷமொன்றுக்கு ரூபாய் 6-க்குக்குறையாது சங்கத்திற்கு அந்தந்த மார்ச்சுமீ 31உக்குள் தொகை செலுத்திவரவேண்டுமென்றும், அவரவர்கட்குச் "செந்தமிழ்" ப்பத்திரிகையும் சங்கத்தினின்று வெளிப்படும் புத்தகங்களும் முறையே அனுப்பிவரல்வேண்டுமென்றும் மகா-௱-௱-ஸ்ரீ எஸ். சாமிநாதையர் அவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, பண்டித-வி. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாசையங்கார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

(ii) பணம் அனுப்ப இயலாதவர்கள் கௌரவ அங்கத்தினராக இருப்பார்கள். அவர்களுக்குச் சங்கத்துத் தீர்மானங்கள் மட்டும் அனுப்பப்படல் வேண்டும்.

பிரேரேபித்தவர் மகா-௱-௱-ஸ்ரீ அக்கிராசனாதிபதியவர்கள்.
ஆமோதித்தவர் ,, நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—2.

இனிச்சங்கத்தினங்கத்தினராவோர் முதலிற் பிரவேசதனமாக ரூ 5 அனுப்பல் வேண்டும்.

பிரேரேபித்தவர் மகா-ா-ா-ஸ்ரீ எம். ஆர். கந்தசாமிக்கவிராயர் அவர்கள்.
ஆமோதித்தவர் „ எஸ். பால்வண்ணமுதலியார் அவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—3.

சங்கவங்கத்தினர்கள் வருஷோற்சவக் கூட்டத்திற்கு வருதலில் இயற்கையிலேயே விருப்பமுங் கடமையும் உடையராதலின், வழிச் செலவுகளை அவர்களே சொந்தத்திற்செய்துகொண்டு வரவேண்டுமென்றும், கூட்டங்கூடும் நாட்களில் மதுரையில் அவர்கட்கு இருப்பிடம் உண்டி முதலிய சௌகரியஞ் செய்து உபசரித்தலோடு திரும்புதற்குரிய செலவை இச்சங்கப்பொருட்செலவில் நடத்தவேண்டுமென்றும் முடிவுசெய்தல்.

பிரேரேபித்தவர் மகா-ா-ா-ஸ்ரீ திருநெல்வேலி சுப்பிரமணியக் கவிராயர் [அவர்கள்.
ஆமோதித்தவர் „ நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—4.

பத்திராதிபர் எழுதுவனநீங்கப் பத்திரிகைக்கு அனுப்பப்படும் ஏனைய விஷயங்கள், சங்கத்தவருள் இருவர் அபிப்பிராயங் கொடுத்த பின்னர்ப் பிரசுரிக்கவேண்டும். அபிப்பிராயபேதமிருந்தால் அக்கிராசனாதிபதியவர்கள் தீர்மானப்படி நடத்தல்வேண்டும்.

பிரேரேபகர் மகா-ா-ா-ஸ்ரீ சவரிராயபிள்ளையவர்கள்.
ஆமோதித்தவர் „ டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—5.

புத்தக வபிப்பிராயத்துக்கு (Review) அனுப்பப்படும் புஸ்தகங்களை, சங்கத்து வித்வான்களில் அந்தந்த விஷயங்களிற் பாண்டித்தியமுள்ள ஒருவருக்கு அனுப்பி, அவருடைய அபிப்பிராயத்தை அவர் பெயராலேயே பிரசுரித்தல்வேண்டும்.

பிரேரேபித்தவர் மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்.
ஆமோதித்தவர் „ தஞ்சை சாமிநாதமுதலியார் அவர்கள்.
ஆதரித்தவர் „ சவரிராயபிள்ளையவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

இன்று கூட்டம் நேரமானதால் இம்மட்டில் நிறுத்தப்பட்டு நாளைக் காலை 8 மணிக்கு மறுபடியும் கூட்டப்படவேண்டியதென்று சபையோரால் தீர்மானிக்கப்பட்டது.

சேதுபதி ஹைஸ்கூல்ஹால்
மதுரைத் தமிழ்ச் சங்கம்.
21—12—03

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

—:o:—

## 1903–ம்ஸு டிசம்பர்மீ 22உ வித்துவக் கூட்டத்தார் தீர்மானங்கள்.

21-ந் தேதியில் வந்தவர்களில் மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயணையரவர்கள் நீங்க, ஏனையரெல்லாம் வந்திருந்தார்கள்.

### தீர்மானம்—6.

சங்கப் பரீக்ஷைக்கு வரும் பீ. ஏ. எப். ஏ. மாணாக்கர்கட்கு இப்பொழுதுள்ள பாடங்களோடு தமிழ்மொழிவரலாறு முதலியதமிழ்ச் சரித்திர சம்பந்தமான பாடங்களும் ஏற்படுத்தப்படவேண்டியதென்றும், அஃது இலக்கணப்பிரிவோடு சேர்ந்திருக்கவேண்டுமென்றும்,

பிரேரேபித்தவர் மகா-ள-ள-ஸ்ரீ சவரிராயபிள்ளையவர்கள்
ஆமோதித்தவர் ,, டி. வி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

### தீர்மானம்—7.

சங்கத்தின் அங்கத்தினராக விரும்புவோரைச் சங்கத்துவித்துவான்கள் எவரேனும் இருவர் பிரேரேபணை பண்ணி, அன்னோரது சம்மதம், பெயர், மேல்விலாசம், தொழில் முதலியவற்றையும் தெரிவித்தால் அவரைச் சங்கத்தின் அங்கத்தினராக நியமித்துக் கொள்ளல்வேண்டும்.

பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதியவர்கள்
ஆமோதித்தவர் ,, மிஸ்டர் சவரிராயபிள்ளையவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—8.

தமிழை 'லண்டன் யூனிவர்ஸிடி' யின்பரீக்ஷைக்கு ஒருபாஷை யாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கொழும்பு இராஜகல்லூரித் தலைவராகிய மிஸ்டர் லீ (Mr. Lee.) துரையவர்கள் செய்துவரும் அரியபெரிய முயற்சியை இச்சங்கத்தார் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கீகரிப்பதோடு அவர்களுக்கு அகமகிழ்ந்து வந்தனமும் அளிக்கின்றார்கள்.

இஃது அக்கிராசனாதிபதியவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பட்டது. (அக்கிராசனாதிபதியவர்களே இது சம்பந்தமாய்க் கடிதப்போக்கு முதலியன செய்யும்படி இச்சங்கத்தார் பிரார்த்தித்துக்கொள்ளுகிறார்கள்.)

## தீர்மானம்—9.

சங்கத்தின் ஏடுகளிற் பிரதிசெய்துகொடுக்கக்கூடியவற்றை, வேண்டுவோர்க்கு அவ்வவர் செலவிற் பிரதிசெய்தனுப்பல்வேண்டும். ஆனால், இதுவிஷயத்தில் ஏடுகள் கொடுப்பதும், மறுப்பதும் அக்கிராசனாதிபதியவர்கள் யுக்தப்படி நடத்திக்கொள்ளலாம்.

பிரேரேபகர் மகா-௱-௱-ஸ்ரீ சவரிராயபிள்ளையவர்கள்.
ஆமோதித்தவர் ,, டி. வி. ஸ்ரீநிவாசையங்காரவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—10.

அவ்வம்மாதத்திற் சங்கத்திற்குக் கிடைக்கும் ஏட்டுப்பிரதிகளைச் செந்தமிழ்ப்பத்திரிகையில் அவ்வம்மாதப்பகுதியில் வெளியிட்டுவரல்வேண்டும்.

மகா-௱-௱-ஸ்ரீ அக்கிராசனாதிபதியவர்களால் பிரேரேபணை செய்யப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—11.

சங்கத்தார் தனித்தமிழ்ப் பரீக்ஷைகள் ஏற்படுத்தவேண்டும். அவை மூன்றுவிதமாக இருத்தல்வேண்டும்.

பிரேரேபகர் மகா-௱-௱-ஸ்ரீ எஸ். சாமிநாதையர் அவர்கள்.
ஆமோதித்தவர் ,, ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—12.

மூன்றுவிதப் பரீக்ஷகளுக்கும் முறையே, பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் எனப் பெயர் தருதல்வேண்டும்.

பிரேரேபகர் மகா-ள-ள-ஸ்ரீ ஐ. சாமிநாதமுதலியார் அவர்கள்.
ஆமோதித்தவர் ,, ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாசையங்காரவர்கள்.
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## தீர்மானம்—13.

(i) பிரவேசபண்டித பரீக்ஷைக்குரிய பாடங்கள்.

அந்தாதிகள் 2 { திருவரங்கத்தந்தாதி. மறைசையந்தாதி.
பிள்ளைத்தமிழ் 1 (மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.)
கலம்பகங்கள் 2 (அழகர் கலம்பகம், மதுரைக்கலம்பகம்)
நீதிநூல்கள் 2 (நாலடியார், நான்மணிக்கடிகை)
இலக்கியங்கள் 3 2000 செய்யுள்கள் { வில்லிபாரதம் முதல் 1000 செய்யுள்கள், நைடதம் முதல் 500 செய்யுள்கள், பிரபுலிங்கலீலை முதல் 500 செய்யுள்கள்.
நன்னூற்காண்டிகை (ஆறுமுகநாவலர் பதிப்பு.)
செய்யுளியல் (பூவை-கல்யாணசுந்தர முதலியார் இயற்றியது.)
அணியியல் (விசாகப்பெருமாளையர் பாலபோதஇலக்கணம்.)
பெரியபுராணவசனம் (நாவலர் பதிப்பு.)
பூகோளச்சுருக்கம்.
இந்துதேச சரித்திரச் சுருக்கம்.
செய்யுளியற்றல்—வெண்பா, ஆசிரியப்பா.
வியாசமெழுதல்.

(ii) பாலபண்டித பரீக்ஷைக்குரிய பாடங்கள்.

கோவை 1 (தஞ்சைவாணன் கோவை சொக்கப்பநாவலர் உரையுடன்)
புராணம் 2 { திருவிளையாடல் முதல் 500, காஞ்சிபுராணம் முதல் 1000, ஆரியப்புலவர் பாகவதம் 500.
சங்கச்செய்யுள் 2 { மணிமேகலை முதல் 10-காதைகள், புறநானூறு முதல் 50 செய்யுள்கள்.
நீதிநூல் 2 { திருக்குறள் முதல் 25-அதிகாரம், பன்னூற்றிரட்டு முதல் 100 செய்யுள்கள்.

இலக்கணம் :—

நன்னூல் விருத்தி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியர் உரையுடன்)

அகப்பொருள்—நம்பியகப்பொருள்

யாப்பு—யாப்பருங்கலக்காரிகை.

அணி—தண்டியலங்காரசாரம்.

தர்க்கம்—தர்க்கசங்கிரகம்.

செய்யுளியற்றல்—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

வியாசமெழுதல்.

(iii) பண்டிதபரீக்ஷைக்குரிய பாடங்கள்.

கோவை—திருக்கோவையார் (உரையுடன்.)

இலக்கியம். { இராமாயணம் முதல் 1000 செய்யுள்கள், பெரிய புராணம் முதல் 1000, கந்தபுராணம் முதல் 1000.

சங்கச்செய்யுள். { பத்துப்பாட்டு—மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் முதல் 10-காதைகள், சிந்தாமணிநாமகளிலம்பகம்

நீதிநூல்—திருக்குறள். (அறத்துப்பால், பொருட்பால்.)

பரணி—கலிங்கத்துப்பரணி.

இலக்கணம். { தொல்காப்பியம், [எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம், சொல்லதிகாரம் (சேனாவரையம்), அகத்திணையியல்] புறப்பொருள் வெண்பாமாலை.

யாப்பு—இலக்கணவிளக்கப்பாட்டியல்.

அணி—தண்டியலங்காரம்.

தர்க்கம்—அன்னம்பட்டீயம்.

செய்யுளியற்றல்—பாவும், பாவினங்களும்.

வியாசமெழுதல்.

## தீர்மானம்—14.

| | நாள். | |
|---|---|---|
| இலக்கணம் | 1 | காலை 3-மணிநேரம் ஒரு வினாப்பத்திரமும், மாலை 3-மணி நேரம் ஒரு வினாப்பத்திரமும். |
| இலக்கியம் | 1 | காலை 3-மணி நேரம் ஒரு வினாப்பத்திரமும், மாலை 3-மணி நேரம் ஒரு வினாப்பத்திரமும். |
| தர்க்கம், செய்யுளியற்றல் | $\frac{1}{2}$ | தனித்தனி $1\frac{1}{2}$-மணி கொண்ட 2 வினாப்பத்திரங்கள். |
| வியாசம் | $\frac{1}{2}$ | 2-மணிகொண்ட ஒரு வினாப்பத்திரம் |

## தீர்மானம்—15.

சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையில் போஷணை பெற்றுவரும் மாணாக்கர் நீங்கலாக ஏனையோருக்கு மூன்று பரீக்ஷைகளுக்கும்

முறையே 1, 2, 3ரூ கட்டணம் விதிக்கவேண்டும்.

தீர்மானம்—16

ஒவ்வொரு பரீக்ஷையிலும் முதல் வகுப்பில் தேறும் 3 மாணாக்கர்களுக்குப் பரிசு அளிக்கப்படும்.

(1) பிரவேசபண்டித பரீக்ஷைக்கு;—

முதல் பரிசு ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.
2-ம் பரிசு ரூ 30
3-ம் பரிசு ரூ 20

100

(2) பாலபண்டித பரீக்ஷைக்கு;—

1-ம் பரிசு 70 ரூ பெறத்தக்க தங்கப்பதக்கம்.
2-ம் பரிசு 50 ரூ
3-ம் பரிசு 30 ரூ

150 ரூ

(3) பண்டிதபரீக்ஷைக்கு;—

1-ம் பரிசு ரூ 100 பெறத்தக்க தங்கத்'தோடா'.
2-ம் பரிசு ரூ 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்.
3-ம் பரிசு ரூ 50

ரூ 220

தீர்மானம்—17

இப்பரீக்ஷைக்கு, இச்சங்கத்தாரால் ஆங்கில மாணாக்கர்க்கு நடத்தப்படும் பரீக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட இடங்களோடு கொழும்பும் யாழ்ப்பாணமும் பரீக்ஷை ஸ்தலங்களாகும்.

தீர்மானம்—18

இப்பரீக்ஷை ஒவ்வொரு ஆண்டிலும் தைமீ உ-வது திங்கட் கிழமை தொடங்கி முதல் மூன்று நாள் நடத்தல் வேண்டும்.

# விளம்பரம்

## ஒருமுறை பாருங்கள்.

---

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும்; நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரி துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லரையாகவும் கறார்விலையாக விற்கப்படும். தூலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கறார் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

## மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்,

# விற்கப்பெறும் புத்தகங்கள்

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது மூலமும் உரையும் ... | 0 | 3 | 0 |
| 2. | கணுநூலும், பழையநூல்களினின்று தொகுத்த ருஅ-வளையாபதிச்செய்யுட்களும் அடங்கினது ... | 0 | 2 | 0 |
| 3. | புலவராற்றுப்படை [திருக்குருகூர்ச் சிறியஇரத்தினகவிராயர் பாடியது] ... ... | 0 | 3 | 0 |
| 4. | இனியதுநாற்பது மூலமும் உரையும். ... ... | 0 | 1 | 6 |
| 5. | நேமிநாத மூலமும் உரையும். ... ... | 0 | 10 | 0 |
| 6. | திருநூற்றந்தாதி மூலமும் உரையும். ... ... | 0 | 4 | 0 |
| 7. | மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை மூலமும் உரையும் (வா. குலாங்காதிறு நாவலர் இயற்றியன) ... ... ... ... | 0 | 4 | 0 |

☞ இவற்றிற்குத் தபால் சார்ஜ பிரத்தியேகம்.

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மதுரைத் தமிழ்ச் சங்க மானேஜர்.